விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 23 செவ்வாய்க்கிழமை (07.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 019

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# முல்லைத்தீவை அண்மித்த கடற்பகுதியில் தாழமுக்கம்

## கடும் காற்று வீசும் என எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

தாழமுக்கம் முல்லைத்தீவை அண்மித்த கடற்பரப்பில் நிலைகொண்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தாழமுக்கமானது நேற்றிரவு அல்லது இன்று அதிகாலை வடபகுதியின் ஊடாக பயணிக்குமென எதிர்பார்ப்பதாக திணைக்களத்தின் வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் குறிப்பிட்டார்.

இதனால் புத்தளம் தொடக்கம் காங்கேசன்துறையினூடாக திருகோணமலை வரையான கடற் பிராந்தியங்கள் கொந்தளிப்பாக காணப்படலாம் எனவும் கடும் காற்று வீசும் எனவும் திணைக்களத்

20-ம் பக்கம் பார்க்க

## "பலஸ்தீனின் நட்சத்திரம்" ஜனாதிபதிக்கு விருது!



பலஸ்தீன் நாட்டின் அதியுயர் விருதான "பலஸ்தீனின் நட்சத்திரம்' எனும் விருது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பலஸ்தீன் அரசாங்கம் நேற்று வழங்கிக் கௌரவித்தது.

இந்த விருது விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "இலங்கைக்கும் பலஸ்தீன் அரசுக்கும் இடையிலான உறவு தனித்துவமானது என்பதுடன் பலஸ்தீன் அரசுக்கும் நட்புறவும் மிக்க பலஸ்தீன் மக்களுக்கும் நாம் எப்போதும் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மக்கள் சார்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பலஸ்தீன் ஜனாதிபதி யாசிர் அரபாத்துக்கும் தற்போதைய ஜனாதிபதி மஹ்மூத் அப்பாசுக்கும் 'ஸ்ரீலங்கா மித்ர விபூஷண' விருதினை வழங்கி வைத்தார். (எ-11)

## அமெரிக்க நிபுணரை இன்று சந்திக்கிறது கூட்டமைப்பு

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வரும் சர்வதேச போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்காவின் விசேட தூதுவர் ஸ்ரீபன் ஜே. ராப், இன்று செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

நாளை புதன்

20-ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மகிந்த அரபாத்துக்கு அஞ்சலி

(கொழும்பு)

இலங்கைக் குழுவினருடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று காலை பலஸ்தீனம் சென்றடைந்துள்ளார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவை பலஸ்தீன் பிரதம அமைச்சர் ராமி ஹம்தல்லா, இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவர் கலாநிதி அன்வர் எச். அல்-அக்ஹா, பலஸ்தீனத்தில் பதில்கடமையாற்றும் இலங்கைப் பிரதிநிதி சிராஜ் அஹமட், பெத்தலஹேமில் உள்ள இலங்கையின் காவற் தூதர் மைக்கல் ஷோமாலி ஆகியோர் வரவேற்றனர்.

20-ம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக்கழகத்தில் 29ஆவது பொதுப் பட்டமளிப்பில் 1373 பேர் பட்டம் பெறுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 373 பேர் பட்டம் பெறவுள்ளனர் என பல் கலைக் கழகத்தின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இம் முறை கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்படமாட்டாது எனவும் தெரியவந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் 29ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 10, 11ஆம் திகதிக்ளில் எட்டு அமர்வுகளாக கைலாசபதி கலை யரங்கில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் பத்தாம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த பட்டமளிப்பு விழா பிற்பகல் 3.30 மணிக்கு முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

அதேவேளை மறுநாள் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணிக்கு நிறைவுறும்

பல்கலைக் கழக வேந்தர்

20-ம் பக்கம் பார்க்க

## மன்னார் மனிதப் புதைகுழியில் நேற்று 8 எலும்புக்கூடுகள் மீட்பு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நேற்றும் 8 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுடன் இதுவரை 26 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார்,திருக்கேதீஸ்வரம் மாந்தை சந்தியிலிருந்து சுமார் 70 மீற்றர் தொலைவில் உள்ள மனித புதைகுழியில் இருந்து நேற்றுத் திங்கட்கிழமை 26 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று 8 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறித்த பகுதியிலிருந்து கடந்த 20-ம் திகதியிலிருந்து கடந்த 4-ம் திகதி சனிக்கிழமை வரைக்கும் மனித எலும்புக்கூடுகள் 18உம், மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் உத்தரவிற்கமைய சட்ட வைத்திய நிபுணர் டி . எல் . வைத்திய ரெட்ண ஆகியோர் முன்னிலையில் மனித புதைகுழி தோண்

20-ம் பக்கம் பார்க்க

## இசை நிகழ்ச்சியில் புலிக் கொடி!

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் புலிக்கொடி காண்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவை மையமாகக் கொண்ட ஹிப்பொப் இசைக் காலைஞர்கள் இருவர் இவ்வாறு புலிக் கொடியை ஏந்தி நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளனர்.

டெட் பிரிஸ் என்ற அமெரிக்க ஹிப்பொப் இசைக் குழுவினரே இவ்வாறு புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளனர்.

புத்தாண்டை வரவேற்றும் முகமாக அவுஸ்திரேலி

20-ம் பக்கம் பார்க்க

## பாடசாலைகளுக்கு நேற்று விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்றைய தினமும் தொடர்ந்த அசாதாரண காலநிலையினை அடுத்து முல்லைத்தீவு வலயம் மற்றும் யாழ் வடமராட்சி கிழக்கு வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டதோடு கடற்கரையை அண்மித்த பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளு

20-ம் பக்கம் பார்க்க

## கைதிகளின் சம்பளம் உயர்வு

(கொழும்பு

இலங்கையில் கைதிகளின் சம்பளங்களை உயர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, நாள் ஒன்றுக்கு ஒரு ரூபா சம்பளம் பெற்றுக் கொள்ளும் கைதியின் சம்பளம் 60 ரூபாவாகவும், நாள் ஒன்றுக்கு ஒரு ரூபா ஐம்பது சதம் சம்பளம் பெற்றுக் கொள்ளும் கைதியின் சம்பளம் 75 ரூபாவாகவும், நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபா சம்பளம் பெற்றுக் கொள்ளும் கைதியின் சம்பளம் 85 ரூபாவாகவும், நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபா ஐம்பது சதம் சம்பளம் பெற்றுக் கொள்ளும் கைதியின் சம்பளம் 100 ரூபாவாகவும் உயர்த்தப்படவுள்ளது.

சிறைகளில் தண்டனை

20-ம் பக்கம் பார்க்க

## லயன் எயாரில் பயணித்தோரை அடையாளம் காண ஏற்பாடு

### யாழில் ஆடைகள் காட்சிக்கு



(யாழ்ப்பாணம்)

14 வருடங்களுக்கு முன் சுட்டு வீழ்த்தப்பட்ட "லயன் எயார் - அன்ட னோவ் 24" ரக உள்நாட்டு பயணிகள் விமானத்திலிருந்து மீட்கப்பட்ட ஆடைகளை காட்சிப்படுத்தி உயிரிழந்தவர்கள் தொடர்பில் கண்டறிவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கமைய, எதிர்வரும் 11ஆம் திகதி மற்றும் 12ஆம் திகதிகளில் துரையப்பா விளையாட்டரங்கில் இந்த ஆடைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. இதன்போது 72 ஆடைகள், அடையாளம் காண்பதற்காக காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இதனால், 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் 29ஆம் திகதி சுட்டு வீழ்த்தப்பட்டதாக நம்பப்படும் லயன் எயார் விமானத்தில் பயணித்து உயிரிழந்த பயணிகளின் உறவினர்கள் அல்லது அவர்கள் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் குறித்த இரு தினங்களில் யாழ். துரையப்பா விளையாட்டரங் குக்கு வருகை தந்து உயிரிழந்தவர்கள் தொடர்பில் தகவல் வழங்குமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுக் கொண்டுள்ளது.

14 வருடங்களுக்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக நம்பப்படும் "லயன் எயார் - அன்ட

20-ம் பக்கம் பார்க்க



இறுதி மூச்சுவரை போராடுவேன்
செய்திகள் பக்கம் 10



தமிழருக்கு அரசு எதையும் கொடுக்காது
செய்திகள் பக்கம் 07



2014 எப்படி? தனுசு
இராசி பலன் பக்கம் 13

இதோ! ஒரே மேடையில் பரதமும் கண்டி நடனமும்-2
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

மத்திய கல்லூரி வென்றது
விளையாட்டு பக்கம் 18

சீனாவில் நெரிசல் 14 பேர் பலி
உலகம் பக்கம் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹலால் சான்றிதழ் வழங்குவதை நிறுத்தியது ஜம்இயத்துல் உலமா

(கொழும்பு)
இலங்கையில்தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கு ஹலால்சான்றிதழ் வழங்கும் பணியை கடந்த டிசம்பர் 31-ம் திகதியுடன் நிறுத்திக்கொள்வதாக, இந்தச் சேவையை இதுவரைசெய்துவந்த அகில இலங்கை ஜம்இயத்துல்உலமாசபை அறிவித்துள்ளது.

ஜம் இயத் துல் உலமாசபைஇலங்கையில், இதுபோல்உணவுப் பொருட்கள் மற்றும்பிறபொருட்களுக்கு ஹலால் முறையில் தயாரிக்கப்பட்டவை என்று சான்றிதழ் வழங்குவதற்கு எதிராக, சில வலது சாரி பௌத்த அமைப்புகள வன்முறை கலந்த எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டிலிருந்து இலங்கையில் துறை சார்ந்தோர் மூலம் நிறுவப்பட்ட உத்தரவாதமுள்ள நிறுவனமொன்று, ஹலால் சான்றிதழ் வழங்கும் வேலையையும், தயாரிப்பு, செயற்பாடு தொடர்பான கண்காணிப்பு உட்பட அனைத்து விடயங்களையும் செய்யும் என்று அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா சபை தெரிவித்திருக்கிறது.

ஏற்கனவேஹலல் சான்றிதழ் பெற்றுக் கொண்ட மற்றும் ஹலால் சான்றிதழ் பெறக் காத்திருக்கும் நிறுவனங்களின் அனைத்து விடயங்களையும் புதிதாகப் பொறுப்பேற்கவுள்ள இந்த நிறுவனம் கவனிக்கும் என்று உலமாவின் அறிக்கை கூறுகிறது.

மேலும், எதிர் காலத்தில், ஹலால் சான்றிதழ் வழங்குவது மற்றும் தயாரிபபு செயல்பாடு தொடர்பான கண்காணிப்பு விடயங்களில், சமூக நலனையும் பொறுப்பையும் கருதி, அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் இருக்கும் என்று உலமா சபையின் அறிக்கை கூறுகிறது. (எ-11)


## வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனமொன்றிற்கு எழுதுவினைஞர் (பெண்), சிற்றூழியர் (ஆண்) தேவை. (5256)

தொடர்பு - 075 406 4604


# அரசாங்கத்தை கவிழ்க்கும் முனைப்புக்களில் அமெரிக்கா



(கொழும்பு)
அரசாங்கத்தை கவிழ்க்கும் முனைப்புக்களில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஆட்சி அதிகாரத்தில மாற்றம் செய்யும் வகையில் அமெரிக்கா செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில், அமெரிக்கா இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் என்பது தெளிவாகத் தெரிகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதனை பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா முயற்சிக்கும் என அவர சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு அதிகளவு சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஏனெனில், அமெரிக்கா ஏனைய உறுப்பு நாடுகள் மீது அழுத்தம் செலுத்தக் கூடிய சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச்செயல்கள்தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பமாக சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை இலக்கு வைத்து அமெரிக்கா செயற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் நிறைவில் அமெரிக்காவின் உள்நோக்கம் என்னவென்பது தெளிவாக புலனாகும்என அமைசசர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (செ-11)

# தமிழில் வாக்கு மூலம் பதிய தவறினால் நடவடிக்கை

## பொலிஸ் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)
தமிழ் மொழியில் வாக்குமூலங்களைப் பதிவு செய்யத்தவறும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு எதிராக பொதுமக்கள் பொலிஸ் ஆணைக் குழுவில் முறைப்பாடுகளை பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அறிவித்தால் உரிய உத்தியோகஸ்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வடமாகாண பொலிஸ் ஆணைக் குழுவின் பணிப்பாளர் கலாநிதி க.தியாகராஜா நேற்று தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வடமாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளையும், வாக்குமூலங்களையும் தமிழ் மொழியில் பதிவு செய்வதற்கான உரிமை உண்டு.

அந்த உரிமையின பிரகாரம் பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸ்உத்தியோகஸ்தர்கள் வாக்கு மூலத்தினை தமிழில் பதிவு செய்வதற்கு மறுப்புத் தெரிவித்தால், மறுப்புத் தெரிவித்த அந்த பொலிஸ் உத்தியோகஸ்தரின் பெயர், திகதி, முறைப்பாடு பதிவு செய்யச் சென்ற நேரம் உள்ளிட்டவற்றைக் குறிப்பிட்டு வட மாகாண பொலிஸ் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யுமாறு பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்தபுதன்கிழமை தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, பொலிஸ் ஊடகப் பேசசாளர் அஜித்ரோஹன வடபகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மக்களின முறைப்பாடுகளும், வாக்குமூலங்களும் தமிழ் மொழியில் பதிவு செய்யுமாறு வடமாகாண பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஆவா குழுவைச் சேர்ந்த ஐவர் நேற்று பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களுடன்தொடர்புடைய ஆவா குறூப்பை சேர்ந்த 5 பேரை கோப்பாய் பொலிஸார் நேற்றும் கைது செய்துள்ளனர் என பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

அத்தோடு இவர்களிடமிருந்து ஒரு தொகுதி வாள்களும் கூரிய இரும்பு ஆயுதங்களும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மானிப்பாய், சுதுமலை, இணுவில், சுன்னாகம் பகுதியிலுள்ள இவர்களின் வீட்டில்வைத்துநேற்று அதிகாலைமுதல்தேடுதல்போட்டு அவர்களை கைதுசெய்ததாகவும் இருப்பினும் சிலர் தப்பித்து சென்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளைகடந்த சனிக்கிழமை இந்தக்கு முவினைச் சேர்ந்த 5 பேரை கைது செய்ததாகவும் இவரகளிடம் மேற்கொள்ளபட்ட தொடர்விசாரணைகள் மூலம் சமூக விரோதக்குழுவான ஆவாகுறூப்பற்றிஅறிய வந்ததாகவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச்சம்பவங்களுடன் தொடர்புடைய ஆவா குறூப் என்று அழைக்கப்படும் சமூகவிரோதச் செயல்களுடன்ஈடுபட்டுவந்த இந்தக்குழு வினைச் சேர்ந்த 15 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதில் கோப்பாய் பொலிஸார் மட்டும் நேற்றுடன் 10 பேரைக் கைது செய்துள்ளனர்.

அத்தோடு இவர்களிடமிருந்து இதுவரை 12 வாள்களும் இன்னும் பல கூரிய இரும்பு ஆயுதங்களும் 8 மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேலும்கைதுசெய்யப்பட்டுள்ள சமூக விரோதக்கும்பலான ஆவா குறூப் பற்றி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இன்று காலை இடம்பெறும் ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிடவுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். (எ-6)


சித்தன்கேணி

அருள்மிகு ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த

## தைப் பொங்கற் பெருவிழா – 2014



நாககன்னியம்பாள் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான விஜய வருடம் மார்கழித் திங்கள் 23-ம் நாள் [07.01.2014] செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்தோடு ஆரம்பமாகி தைத்திங்கள் முதல் நாள் [14.01.2014] மிருகசீரிட நட்சத்திரமும், சித்தமும் கூடிய காலை 8.00 மணியளவில் அபிஷேக அலங்காரத்தோடு சோடசதீப தூபங்களோடு நாக கன்னியம்மன் நாகத்தில் திருவீதியுலா எழுந்தருளி தீமிதிப்பு வைபவம் நடை பெறும். அடியார்கள் அனைவரும் கலந்து எம் பெருமாட்டியைத் தரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கொடியேற்றம் : 07.01.2014 மார்கழி கடைசிச் செவ்வாய் உத்தரட்டாதி நட்சத்திர நாளில்
தைப்பொங்கல் : 14.01.2014 தை முதல் செவ்வாய்க்கிழமை பெருவிழாவும், 12 மணியளவில்

## தீ மிதிப்பு வைபவம்

தீர்த்தம் கொடியிறக்கம் : 21.01.2014 செவ்வாய்க்கிழமை வைரவமடையும் நடைபெறும்.

கிரியைகளை சிறப்புற நிகழ்த்துபவர்
ஆலய பிரதம சித்த ஞான குரு இந்திரன் ஐயா

உதவிக்குரு
செ. ஸ்ரீசுபாஸ்கர் (சுந்தர்)

தைப்பொங்கல் அன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் பஜனைப்பாடல்கள் வழங்குபவர்கள் - ஆலய தொண்டர்கள்
சைவச் சொற்பொழிவு

அருளாசியுரை
ஸ்ரீலஸ்ரீ.ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்)

விடயம் :- உள்ளம் பெருங்கோயில்
நிகழ்த்துபவர் - சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் க.நித்தியதசீதரன் M.A

விடயம் :- சக்தி பின்னமிலான்
நிகழ்த்துபவர் -
சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் செ.கந்த சத்தியதாசன்M.A.J.P.
(வலிகாம ஆசிரிய ஆலோசகர்)

விடயம் :- ஆலய தொழுவது சாலவும் நன்று
நிகழ்த்துபவர் :
இளஞ்சைவப்புலவர், கைலைநாதன் (ஆசிரியர்)

## மங்கள வாத்தியம்

நாதேஸ்வரச்சக்ரவர்த்தி எஸ். பாலமுருகன் குழுவினர் (ஈழ நல்லூர்) | தவில்வித்துவான் என். இராமநாதன் குழுவினர் (வட்டுக்கோட்டை) | கண்ணன் குழுவினர் (சித்தன்கேணி)

நன்றியுரை - க.இரட்னேஸ்வரன்
(ஓய்வுபெற்ற அதிபர்)
ஒலி அமைப்பு :- ராஜன் சவுண்ஸ்
சித்தன்கேணி

குறிப்பு :- மெய்யடியார்கள் பண்பாட்டுக் கோலங்களுடன் வருகைதருவதுடன் அம்பாளின் விழாச்சிறப்புற தேங்காய், எண்ணெய், பூ, பூ மாலை, விபூதி, கற்பூரம், அர்ச்சனைப்பத்திரம், அனைத்தையும் கொடுத்து அம்பாளின் அனுக்கிரகங்களைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

I ஆம் திருவிழா உபயகாரர்
இ.கணேசரத்தினம் (சுவிஸ்)
கீரிமலை வீதி, சித்தன்கேணி.

அம்பாளின் தொண்டில், ஆலய ... ஆலயத்தொண்டர்கள்

அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்

(5255)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-6116)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER



## A/L வரலாறு

மாவட்ட, தேசியமட்டங்களில் முதல் நிலைப் பெறுபேறுகள் பெறுவதற்காக வழிகாட்டும் உங்கள்

ஆசிரியர் :- M.பத்மன் M.A (History)



வாழ்த்துகிறேன்

என்னிடம் வரலாறு கற்று வரலாறு உட்பட 3 A பெற்று யாழ். மாவட்டத்தில் முதலாவதாக வந்த செல்வி உமாகரன் துளசி அவர்களை வாழ்த்துகிறேன்.

மேலும் A தரச் சித்திகளைப் பெற்று மாவட்ட தேசிய மட்டங்களில் முன்னிலை பெற்ற அனைவரையும் வாழ்த்துவதுடன் என்னிடம் கற்ற அனைவரும் வரலாறு பாடத்தில் 100% சித்தி பெற்றுள்ளனர் அவர்களையும் வாழ்த்துகிறேன்.

கற்பிக்கும் இடங்கள்:
உயர்கலைக் கல்லூரி, குளப்பிட்டிச்சந்தி.
புகழ் கல்வி நிலையம் மானிப்பாய்
(C-6126)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மொழி புரியவில்லை!

ஒரு ஊரிலே ஒருவன் இருந்தான். அவனுக்கு வெளிநாட்டுக்குப் போக வேண்டும் என்ற ஆசை, ஆனால் அவனுக்கு எந்த மொழியும் தெரியாது. இருந்தாலும் சுட சமாளிக்கலாம் என்று முடிவு செய்து விட்டு சென்றான்.

ஏதோ ஒரு தேசத்திற்கு போய்ச் சேர்ந்தான். அங்கே அவனுக்கு யாரையும் தெரியாது. அவர்கள் என்ன மொழியிலே பேசுகின்றார்கள் என்றும் சுட தெரியாது. என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டே ஒரு இடத்திலே நின்று கொண்டிருந்தான். எதிரே ஒரு பெரிய கஷ்டம். நிறையப் பேர் உள்ளே போய்க்கொண்டிருந்தார்கள். இவனும் அவர்கள் பின்னாடியே உள்ளே போனான்.

ஒரு பெரிய அறை. அங்கே அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள். பல பேர் சாப்பிடுவதற்காக உட்கார்ந்திருந்தார்கள். இவனுக்கும் நல்ல பசி. அதனாலே இவனும் உட்கார்ந்தான். சாப்பாடு போட்டார்கள். சாப்பிட்டான். அன்பான உபசரிப்பு. இவன் மனதிற்குள்ளே நினைத்துக் கொண்டான்...

''இது ஏதோ அரசருடைய அரண்மனை போல் இருக்கிறது... இன்றைக்கு ஏதோ விருந்து நடக்கிறது. நல்ல வேளை நமது பசியும் தீர்ந்தது!'' அப்படி என்று நினைத்துக் கொண்டே நிமிர்ந்து பார்த்தான். சாப்பாடு பரிமாறியவன் எதிரிலே மிகவும் பணிவோடு முதுகை வளைத்து வணக்கம் தெரிவித்தான். மிக்க நன்றி என்றார். அவன் ஒரு சீட்டை இவன் கையிலே கொடுத்தான். இவன் அதை வாங்கிப் பார்க்கிறான்... என்ன எழுதியிருக்கு என்று ஒன்றும் புரியவில்லை!

"சரி... இந்த நாட்டிலே தங்களுடைய நன்றியை சீட்டிலே எழுதித்தான் கொடுப்பார்கள் போல இருக்கிறது!'' என்று நினைத்துக்கொண்டு மீண்டும் நன்றி என்றான். ஆனால் அவன் "காசைக் கொடுங்கள்!'' என்றான். ஏனென்றால் அது ஒரு உணவு விடுதி. இவன் சாப்பிட்டதற்கான 'பில்' அது இவன் அதைப் புரிந்து கொள்ளவே இல்லை!

நன்றி என்று அந்தச் சீட்டிலே எழுதிக் கொடுக்கிறார்கள் போலே இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அதை வாங்கி சட்டைப் பையிலே பத்திரமாக வைத்துக்கொண்டு... பரவாயில்லை... மிக்க மகிழ்ச்சி!'' என்றான்.

''ஒரு வெளிநாட்டுக்காரனுக்கு இவ்வளவு தூரம் மரியாதை தருகிறீர்களே... எங்கள் ஊருக்குப் போனதும் உங்களைப் பற்றி சொல்லுவேன் என்றான்!. இவன் என்ன சொல்கிறான் என்று அவனுக்குப் புரிய வில்லை... இவனைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் முதலாளி முன்னால் நிறுத்தினான்.

''நான் சொன்னதில் இவனுக்கு மிகவும் பெருமையாக இருக்கும் போல இருக்கு... அதுதான் பெரிய இடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறான்!'' என்று நினைத்துக் கொண்டான்.

அவரும் "பில்லுக்கான பணத்தை கொடு" என்றார். "பரவாயில்லை... மிக்க மகிழ்ச்சி! நன்றி!'' என்றான் இவன். அவர் பார்த்தார். இவனை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டார்.

இவன் என்ன நினைத்துக்கொண்டான்... ''எங்களை இந்த ஊர் ராஜா முன்னாலேயே அழைத்துக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்களே... என்ன ஒரு பெருந்தன்மை...? என்று நினைத்து விட்டான்.

நீதிபதி சொன்னார்: ''சாப்பிட்டதற்கான பணத்தை கொடுத்துவிடு... இல்லையேல் அதற்கான தண்டனையை அனுபவிக்க வேண்டியிருக்கும்!'' என்றார்.

ராஜாவே எனக்கு நன்றி சொல்கிறார் என்று நினைத்துக்கொண்டு "என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!" என்றான் இவன். அவர் பார்த்தார். இவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டியது தான் என்று முடிவு செய்தார். உடனே தீர்ப்பு வழங்கினார்.

''இவனைக் கழுதையிலே பின்புறமாக உட்கார வையுங்கள்! இவன் ஒரு மோசடிக்காரன் அப்படி என்று ஒரு வெள்ளைப்பலகையிலே எழுதி அவன் கழுத்திலே மாட்டுங்கள். அதன்பின் அந்தக் கழுதையை ஊர் முழுவதும் விரட்டுங்கள்! என்றார்.

இவனுக்கு தான் மொழி புரியவில்லையே! ஏதோ நடக்கிறது என்பது மட்டும் புரிகிறது! எல்லோரும் சேர்ந்து இவனை ஒரு கழுதை மேல் உட்கார வைத்தார்கள். "ஓகோ... நம்மை பாராட்டி ஓர் ஊர்வலம் நடத்துகிறார்கள் போல இருக்கிறது!" என்று நினைத்துக்கொண்டான்.

எல்லோரும் சத்தம் போட்டுக் கொண்டு கையைத் தட்டிக் கொண்டு கழுதை பின்னால் ஓடி வந்தார்கள்...

இவனுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது! எல்லோருக்கும் கை கூப்பி வணக்கம் சொல்லிக் கொண்டு போனான்.

கூட்டத்தில் திடீரென்று ஒரு தெரிந்த முகம் தெரிந்தது. அவனுடைய தேசத்தைச் சேர்ந்த ஒருவன் அவன். அவனைப் பார்த்ததும் அவனுக்கு அதிக உற்சாகம். எங்கள் ஊருக்குச் சென்றதும் இங்கே நமக்குக் கிடைத்த மரியாதை எல்லாம் உண்மை தான். சொல்வதற்கு ஒரு சாட்சியும் கிடைத்து விட்டது என்று நினைத்துக் கொண்டான். அவனைப் பார்த்து கத்தினான்:

''நல்லாய் பார்த்துக் கொள்... இந்த ஊர் மக்கள் எனக்கு எப்படிப்பட்ட வரவேற்பு கொடுக்கிறார்கள் என்று...! சொன்னான். அவனுக்கு அவமானமாக போய்விட்டது. தலையைக் குனிந்து கொண்டு நழுவி போய்விட்டான்.

இவன் பார்த்தான்... அவன் தலை தெரியவில்லை! ''ஆகா... அவனுக்கு என் மேல் பொறாமை. அதுதான் காணாமல் போய்விட்டான்! என்று நினைத்துக் கொண்டான். இப்படி ஒரு வேடிக்கை கதையை பெரியவர்கள் சொல்வதுண்டு.

கதை வேடிக்கையாக இருந்தாலும் இதில் உள்ள கருத்து என்னவென்றால்... அந்த கழுதைமேல் உட்கார்ந்திருக்கிறானே அது போல தான் நாங்களும் அகங்காரம் என்ற கழுதை மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்! நாங்களும் கிட்டத்தட்ட அதேபோன்ற பிரமையில் தான் இருக்கின்றோம்! என்ன நடக்கிறது என்பது புரிவதில்லை.

''வாழ்க்கைக்கு சத்தியத்துடன் எந்த சம்பந்தமும் இல்லை. ஏனென்றால் வாழ்க்கையின் மொழி தெரிவதில்லை. நாம் பேசுகின்ற அகங்காரத்தின் மொழிக்கு உண்மை வாழ்க்கையோடு எவ்வித தொடர்பும் இருப்பதில்லை!'' அப்படி என்றார் ஓஷோ! அகங்காரத்தில் பேசுகிறவனுக்கும் சுயாதீனமில்லாமல் பேசுகிறவனுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதில்லை.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பேன்

## சுகாதார தொண்டர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

நாட்டில் பொதுவான சட்டமே நடைமுறையிலுள்ள போதிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு சிறப்புத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையிலேயே யாழ். போதனா வைத்தியசாலையின் சுகாதார தொண்டர்களுக்கான நியமனங்களும் வழங்கப்பட்டன. என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் சுகாதார தொண்டர்கள் தமது நியமனம் தொடர்பாக நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கருத்துரை வழங்கிய அமைச்சர் அவர்கள் நியமனங்களின் போது நாட்டில் பொதுவான சட்டமே நடைமுறையிலுள்ள போதிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு சிறப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் தான் யாழ். போதனா வைத்தியசாலையின் சுகாதார தொண்டர்களுக்கான நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களிலும் கல்வித் தகைமைகளின் அடிப்படையில் மேலும் சுகாதார தொண்டர்களை நிரந்தர நியமனங்களுக்குள் உள்வாங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதுவரையில் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு கீழ்ப்படிந்து நடந்து கொள்ள வேண்டுமெனவும் அதனூடாகவே நிரந்தர நியமனங்கள் தொடர்பில் துறை சார்ந்தோர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித் தார்.

இந்நிலையில் சுகாதார தொண்டர்களுக்கு மாற்று ஏற்பாடொன்று செய்யும் வரையில் தொடர்ந்தும் வைத்தியசாலையில் பணியாற்றுமாறும் உங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இதன்போது வைத்தியசாலை அபிவிருத்திக்குழு செயலாளர் இரா. செல்வவடிவேல் உடனிருந்தார். (அ-2)

## விண்வெளிக்குச் செல்லத்தக்க சிறப்பான இடம் இலங்கைதான்

### நாஸா நிறுவனம் தெரிவிப்பு

எதிர்காலச் செயற்பாடுகளில் குறைந்த எரிபொருள் பாவனையுடன் விண்வெளிக்குச் செல்லத்தக்க சிறப்பானதோர் இடம் இலங்கைதான் என நாஸா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை தீவுகளில் ஒன்றாக இருப்பதுதான் அதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

அதுமட்டுமன்றி சுற்றாடல் மற்றும் இந்த நாட்டின் அமைப்புப் போன்றவை விண்வெளி ரொக்கெட்களின் மையமொன்றை அமைப்பதற்கு பெரிதும் பொருத்தமானது என்று நாஸா நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

புயல்கள், சுழல் காற்றுக்கள் இல்லாதிருப்பதும் எப்போதுமே தெளிவான வான் பரப்பொன்றைக் கொண்டிருப்பதும் விண்வெளி ரொக்கெட் ஒன்றை விண்ணுக்கு ஏவும் போது எதிர்பாராத விதமாக வெடிப்பு ஏதும் நிகழுமானால் கடலில் விழும் நிலை காணப்படுவதால் இலங்கையின் அமைவிடம் பெரிதும் பாதுகாப்பானது என்றும் நாஸா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 120 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 20 | 20 | 40 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 180 | 170 | 140 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 130 | 80 |
| பாகற்காய் | 100 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 40 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 |
| பீற்றூட் | — | 70 | 100 |
| கறிமிளகாய் | 100 | 160 | 140 |
| முருங்கைக்காய் | — | 400 | — |
| போஞ்சி | 80 | 60 | 60 |
| கத்தரி தம்புள்ள | 50 | — | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 35 |
| தேசிக்காய் | 50 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 30-50 | 35-45 |
| இராசவள்ளி | 80 | 80 | 120 |

## இராசி பலன்

07.01.2014
(மார்கழி 23, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
சப்தமி பின்னிரவு 3.59 மணிவரை
உத்திரட்டாதி பின்னிரவு 2.42 மணிவரை
புரட்டாதி பின்னிரவு 3.18 மணிவரை
இராகுகாலம் 3.32-5.02 மணிவரை
சுபநேரம் 11.02-12.32 மணிவரை
அமிர்த சித்தம்

**மேடம்** கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி பயணங்கள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள், சுப செலவுகள் கூடும்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, பொருளாதார நிலை திருப்தி தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கௌரவமான நாள்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, போசன நன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுப்பீர்கள், பூர்விக சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர்கள் சந்திப்புண்டு.

**சிங்கம்** சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கன்னி** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், வருமானம் திருப்திதரும்.

**துலாம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், பெரியோர் உதவியுண்டு.

**விருச்சிகம்** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், பிறருக்கு உதவுவதில் பிரியப்படுவீர்கள்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், பயந்த சுபாவமுண்டு, சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், உங்களின் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**மீனம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகமுண்டு, ஆழ்ந்த சிந்தையுண்டு, புதிய பொருள் சேர்க்கையுண்டு, நண்பர்களின் உதவிகள் கிடைக்கலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாள்வெட்டுச் சம்பவம்; நபருக்கு விளக்கமறியல்

யாழ்.வசாவிளான் கோணாவளைப்பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.வசாவிளான் கோணாவளைப் பகுதியிலுள்ள வழிபாட்டிடம் ஒன்றிற்கு முன்னால் உரையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது மோட்டார் சைக்கிள்களில் வந்த குழு வொன்று வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டது.


இச் சம்பவம் கடந்த 2 ஆம் திகதி வியாழக் கிழமை இடம்பெற்றது.

இதன் போது வசாவிளான் செல்வநாயக புரத்தைச் சேர்ந்த அறுவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் ஈவினை கொலனியைச் சேர்ந்த நபரொருவரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த நபரை கடந்த 3 ஆம் திகதி மல்லாகம் நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்திய போது தொடர்ந்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (அ-9-23)



நன்றி:-மிரர்

# கலைத்தூது அழகியற் கல்லூரியால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியற் கல்லூரியினால் இவ்வாண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி வாய்ப்பாட்டு, நடனம் (பரதம், கதகளி, மோகினி) வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், ஓர்கன் (கீபோட்), ட்றம், ஒக்ரோபட் சித்திரம், நாடகமும் அரங்கியலும் போன்ற பிரதான பாடங்களுக்கும் கூத்து, கண்டிய நடனம், யோகாசனம், அழகுக்கலை (முக ஒப்பனை), தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல் ஆகிய சிறப்புப் பாடங்களுக்கும் துணைப்பாடமான ஆங்கிலத்துக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இப் பாடங்கள் பயில விரும்புவோர் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக யாழ்ப்பாணம், டேவிற் வீதி, இல.128, கலைத்தூது எனும் முகவரியிலுள்ள கல்லூரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிக விபரங்களை பெற விரும்பின் மேற்குறித்த முகவரியில் உள்ள கலைத்தூது அழகியல் கல்லூரி அதிபருடன் 021 222 9419 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளலாம். (அ-9)

# வலி.மேற்கு பிரதேச சபையின் புனரமைப்பு நடவடிக்கைகள்

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பல பகுதிகளில் மக்கள் கோரிக்கைக்கு அமைவாக மக்கள் தேவைகள் அடிப்படையிலும் மிக நீண்ட காலம் கைவிடப்பட்டிருந்த பல வீதிகள் வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரனின் ஏற்பாட்டின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, மூளாய் பிள்ளையார் கோவில் அருகாமையிலுள்ள மூளாய் டச்சு மேற்கு ஒழுங்கை, சுழிபுரம் நெல்லியான் வீதி, சுழிபுரம் பெரிய தம்பிரான் வீதி, சுழிபுரம் கல்விளான் வீதி, சுழிபுரம் காட்டுப்புலம் திருவடிநிலை இணைப்பு வீதி, மழுவை சிவன் கோவில் இணைப்பு வீதி ஆகிய வீதிகளை புனரமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கீழ் சங்கானை பாரதி வீதி மற்றும் வெள்ள வாய்க்கால் புனரமைப்பு மற்றும் சுழிபுரம் காட்டுப்புலம் திருவடி நிலை வீதியில் தற்போது மீள்குடியமர்ந்த மக்கள் இலகுவாக போக்குவரத்து செய்வதற்கு ஏற்ற வகையிலும் வெள்ளப் பாதிப்புக்கு உட்படாத வகையிலும் இரண்டு பெட்டி மதகுகள் நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் நிறைவடைந்துள்ளன.

அத்துடன் வலி.மேற்கு பிரதேச சபை நிதி மூலமாக சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலை வீதி மற்றும் அராலி நொச்சியம்பதி வீதி மதகு வேலைகள் நிறைவடைந்துள்ளன.(அ-6)




# வலி.மேற்கு தவிசாளர் மத்தியஸ்தர் சபையின் ஆணைக்குழுவுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானை மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் செயலாளருக்கு கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் எமது பிரதேசத்தில் செயற்பட்டுவரும் மத்தியஸ்தர் சபையானது மிக சிறப்பான முறையில் பிரதேச மக்களது பிணக்குகளை தீர்த்து இயலுமான வரையில் சமாதானத்துடன் மக்கள் வாழ வழி அமைத்து வருகின்றது.

ஆயினும் அண்மைக்காலமாக இச் சபை இயங்கும் பாடசாலையானது பொருத்தமற்ற ஒன்றாக உள்ளதாக பிரதேசவாசிகளால் எனக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக மேற்படி மத்தியஸ்தர் சபை குறித்த பாடசாலையின் மேற்தளத்தில் இயங்குவதால் ஊனமுற்றவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணிகள் இம் மத்தியஸ்தர்கள் சபையின் செயற்பாடுகளில் கலந்து கொள்வது சிரமமாக அமையும் அதேவேளை ஆபத்தான தாகவும் அமைந்திருப்பது குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

இவ்விடயத்தைதாங்கள் அறிந்துகொள்ளும் வகையில் நிழற் படங்களையும் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். மேற்படி விடயம் தொடர்பில் தங்களது ஆக்கபூர்வமான பதிலை எதிர்பார்க்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், வடக்கு முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்.அரச அதிபர், சங்கானை பிரதேச செயலர், சங்கானை மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

## கற்றல் நடவடிக்கைகள் 9 ஆம் திகதியே ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/நெல்லியடி மத்திய கல்லூரியில் க.பொ.த.(சா/த)ப் பரீட்சை 2013 இன் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் இப் புதிய ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமையன்றே ஆரம்பமாகும் எனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டமை போன்று 2014.01.08 அன்று ஆரம்பமாகாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தரம் 6 புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் கல்லூரி அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார். (அ)

# நாடகப் பிரதியாக்கத்திற்கு விருது வழங்கிக் கௌரவம்


(மல்லாகம்)



கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்துப்பட்ட நாடக பிரதியாக்கப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன், மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியயோர் தேசிய ரீதியிலான சிறப்பு விருதினைப் பெற்றுள்ளனர்.

கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடகமன்றத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட திறந்த நாடகப் பிரதியாக்கப் போட்டியில் கலந்து கொண்ட நாடகப்பிரதிகளில் இருந்து வெற்றி பெற்ற 10 மூத்த நாடகப் படைப்பாளிகளுடைய நாடகப் பிரதிகளும் ஆறு இளம் படைப்பாளிகளின் நாடகப் பிரதிகளும் தெரிவு செய்யப்பட்டு விம்பம் என்னும் பதினாறு நாடகப் பிரதிகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவும் விருது வழங்கல் நிகழ்வும் கொழும்பு றோயல் கல்லூரி அதிபர் உபாலி குணசேகர தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது இத் தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவ் விருது வழங்கும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வு நிலைப் பிரதி பரீட்சை ஆணையாளர் ஜீ.போல் அன்ரனி, துறைசார் விருந்தினராக நாடகக் கலைஞர் கலைச் செல்வன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-9-21)






எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராம அர்ப்பணிப்பு விழா நேற்று முன்தினம் அரியாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மங்களவிளக்கேற்றுவதையும் அருகில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் நிற்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாதாரண காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடும் பாதிப்பு





(யாழ்ப்பாணம்)

அசாதாரண காலநிலை நேற்றும் தொடர்ந்ததனால் யாழ். மாவட்டத்தில் கடற்கரையோரங்களை அண்மித்த பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக தொடர்ந்து நிலவி வரும் அசாதாரண காலநிலை காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதோடு மீனவர்களின் தொழில் நடவடிக்கை முற்றிலும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

யாழ். குடாநாடு உட்பட வடக்கு மாகாணத்தில் கடந்த சில மாதங்களாக கடும் வறட்சி நிலவி வந்ததுடன் விவசாய நடவடிக்கைகளும் முற்றிலும் பாதிப்படைந்திருந்தது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை முதல் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் யாழ். குடாநாட்டில் தாழ்நிலப் பகுதி மக்கள் இடம் பெயரும் நிலையில் உள்ளனர்.

இதனைவிட புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதனால் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களை அவதானமாக இருக்கக் கோரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அத்தோடு இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

கடும் காற்றுடன் மழை பெய்து வருவதனால் மீனவர்களை கடலுக்குள் செல்லவேண்டாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடந்த மூன்று நாட்களாக அவர்களின் தொழில் நடவடிக்கைகள் முற்றிலும் பாதிப்படைந்துள்ளது. இந்நிலையில் யாழ். குடாநாட்டு சந்தைகளில் கடல் உணவுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு விலையும் அதிகரித்துள்ளது.

மேலும் திடீரென ஏற்பட்ட இந்த அசாதாரண கால நிலையையடுத்து யாழ்.மாவட்டத்தில் கடற்கரைகளை அண்மித்த பாடசாலைகளுக்கு விடுமுறையளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பருத்தித்துறை, மருதங்கேணி, காரைநகர் போன்ற பகுதிகளிலுள்ள கடற்கரையை அண்மித்த பாடசாலைகளுக்கு விடுமுறையளிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் மீனவர்கள் நேற்றுடன் கடந்த மூன்று நாட்களாக தொழிலுக்கு செல்லாது பாதிப்படைந்துள்ள நிலையில் கடற்றொழில் உபகரணங்களும் சேதமாக்கப்படுவது மேலும் அவர்களை பாதிப்படைய செய்துள்ளது.

வடக்கில் யாழ். மாவட்டம் உட்பட முல்லைத்தீவு , மன்னார், வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த மூன்று நாட்களாக பெய்து வரும் கடும் மழையினால் விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரையை அண்மித்த பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் இடம் பெயர்ந்து மேட்டு நிலங்களிலுள்ள தங்களது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தஞ்சம்பூண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6-9-64)

## இளைஞர் கழகங்கள் புனரமைக்கப்படுகின்றன

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்துக்குட்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் இதன் மூலம் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இதன்படி, உயரப்புலம் ஜே/132 இளைஞர் கழகத்தின் இவ்வாண்டுக்கான நிர்வாகத் தெரிவு கடந்த சனிக்கிழமை கிராமசேவகர் எஸ்.சிறீஸ்கந்தராஜா தலைமையில் கிராம சேவகர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

புதிய ஆண்டுக்கான தலைவராக டீ.தர்ஷிகா, செயலாளராக ஏ.கலைவாணி, பொருளாளராக எஸ்.பிரதீபா, அமைப்பாளராக ஆர்.திஷாயினி, உப தலைவராக எஸ்.கீர்த்தனா, உப செயலாளராக டீ.துஷாந்தி ஆகியோர் தெரிவாகினார்கள். அத்துடன் ஏனைய துறைக்கான தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வில் பிரதேச இளைஞர் பாராளு மன்ற உறுப்பினர் க.உஷாந்தன், இளைஞர் சேவை அதிகாரி நவசக்தி, பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துக்கான அமைப்பாளர் ஜெப நேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-9-23)

## சில நகரங்களை அபிவிருத்தி செய்ய நகர அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

இவ் வருடத்தில் சில நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்திற்கு மேலதிகமாக இந்தத் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இதன்படி கோமாகம, மொரட்டுவ, நுகேகொட, மாத்தறை, ஊருபோக்க, இமதுவ, யாழ்ப்பாணம், கண்டி, நுவரெலியா, தியத்தலாவ, பண்டாரவளை, அநுராதபுரம், படுவஸ்நுவர, நாரம்வல, தங்கொட்டுவ, ரம்புக்கன, வீரகெட்டிய, எகலியகொட மற்றும் புலத்சிங்கள நகரங்கள் ஆகியவை இந்த அபிவிருத்தி திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளன. (அ-2)

## நாமலின் தலையீட்டை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது

கண்டி - போகம்பரை சிறைச்சாலையின் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 கைதிகள் தமது போராட்டத்தை கைவிட்டு கூரையிலிருந்து இறங்கியுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தை அடுத்து இவர்கள் போராட்டத்தை நிறுத்தியுள்ளனர்.

பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் அல்லது தமக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை குறைக்க வேண்டும் எனக் கோரியே மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் கடந்த இரு நாட்களாக கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## ஆளும் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த ஐ.தே.கட்சி முயற்சி

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் குழப்பத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்து வருவதாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அலவ்வ பிரதேச சபையின் தோல்விக்கு தாமே காரணம் என ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றம் சுமத்தி வருவதாகவும், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அலவ்வ பிரதேச சபையில் தலைவருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் இடையில் நிலவி வந்த முரண்பாடுகளை களைய தாமே நடவடிக்கை எடுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற வரவு செலவுத் திட்ட தோல்விக்கு சில ஆளும் கட்சி தொகுதி அமைப்பாளர்களே காரணம் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-2)

## தேயிலை ஏற்றுமதிக்கு வரிவிலக்கு அளியுங்கள்

### ஜோர்தானிடம் மஹிந்த கோரிக்கை

இலங்கை ஜனாதிபதிக்கும், ஜோர்தான் மன்னருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. ஜோர்தானுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்நாட்டு மன்னர் இரண்டாம் அப்துல்லாவைச் சந்தித்துள்ளார்.

இரு தரப்பு உறவுகள் குறித்து இச்சந்திப்பின் போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கை தேயிலை ஏற்றுமதிக்கு வரிவிலக்கு அளிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த, ஜோர்தான் மன்னரிடம் கோரியுள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜோர்தான் மன்னருக்கு, ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 1965ஆம் ஆண்டு முதல் ஜோர்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியின் ஜோர்தான் விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் பல்வேறு வழிகளில் நன்மை ஏற்படக் கூடுமென நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

## புற்றுநோயாளர்களின் தொகை 15 ஆயிரத்தை எட்டியுள்ளது

தற்போதையநிலை வரையில், வருடத்தில் புற்று நோயாளர் பட்டியலில் இணைந்துள்ளவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தை எட்டியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ள விடயங்கள் வருமாறு,

நாட்டில் ஏற்படும் மரணங்களில் 65.3 வீதமான மரணங்கள் தொற்றா நோயினால் ஏற்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந் நிலையில், நூற்றுக்கு 9.4 வீத மரணங்கள் புற்றுநோயினால் ஏற்படுகின்றன.

இவ்வாறு மரணிப்பவர்களில் நூற்றுக்கு 50 சதவீதமானவர்கள் பெண்கள் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## நிதிசார் நிறுவனங்களை ஒன்றிணைக்க நடவடிக்கை

(கொழும்பு)

தற்போது இலங்கையில் காணப்படும் மொத்தம் 58 வங்கி சாராத நிதிசார் நிறுவனங்களை 20 பாரிய நிதி நிறுவனங்களாக ஒன்றிணைத்து குறைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாணய மாற்றுக் கொள்கை தொடர்பான வருடாந்த அறிக்கையை வெளியிட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த கருத்தை முன்வைத்திருந்தார்.

நிதிசார் கம்பனிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து மற்றும் வங்கிகளுடன் இணைந்து ஒரு கம்பனியாக செயற்படுவதற்கு ஊக்குவிக்கப்படும்.

வெளி முதலீட்டாளர்கள் குறித்த நிறுவனங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக கவரப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார். எதிர்வரும் ஜூன் மாதமளவில் ஒரு குழுமத்தின் கீழ் ஒரு நிதிசார் நிறுவனத்தை மட்டுமே கொண்டிருக்க முடியுமென அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

**மத்திய சனசமூக நிலையம்- ஏழாலை**

**முன்பள்ளி ஆசிரியை தேவை**

மேற்படி சனசமூக நிலையம் நடாத்தும் கண்ணகை முன்பள்ளியை நடாத்துவதற்கு ஆசிரியை தேவை.

தகைமை:-முன்பள்ளியை நடாத்துவதற்கான தகைமையுடன் சைவ திருமுறைப்பயிற்சி

மேலதிகமான தகைமை:- அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் தகைமை விரும்பப்படும். ஏழாலைக் கிராம எல்லைக்குள் இருப்பவர் முன்னுரிமை

விண்ணப்பம்:- 20.01.2014 இற்கு முன்னதாக நேர்முகமாகவோ தபால் மூலமோ செயலாளர் அவர்கட்கு அனுப்பி வைக்கவும்.

(6117) கண்ணகை முன்பள்ளி, ஏழாலை வடக்கு, ஏழாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கான தீர்வு தாமதித்தால் பிரச்சினைகளும் நாளாந்தம் அதிகரிக்கும்

## குமரகுருபரன் சுட்டிக்காட்டு

சிங்கள தேசம் தமிழ் மக்களுடைய அடிப்படை அபிலாசைகளை ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவத்தை கொண்டிருக்குமானால் அரசியல் தீர்வென்பது வெகு தூரத்தில் இல்லை என அமரர் குமார் பொன்னம்பலம் நம்பிக்கை கொண்டிருந்தார் என ஜனநாயக மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

அமரர் குமார் பொன்னம்பலத்தின் 14 ஆவது ஆண்டு நினைவு தினத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அனைவர் மனதிலும் குமார் பொன்னம்பலம் என உலகறிந்த சட்டவல்லுநர் தனது வாழ்வினை தமிழர்தம் உரிமை போராட்டத்திற்காகவே அர்ப்பணித்த மகா ஆத்மாவாவார்.

எந்தப் பிரச்சினையிலும் திரைமறைவு சங்கதிகளில் நம்பிக்கை கொண்டிராதவர் குமார். பதிலாக எந்த பிரச்சினைக்கும் நேருக்கு நேர முகங்கொடுத்து பழகியவர். அந்த வகையில் அரசியல் சதுரங்கம் ஆட விரும்பாதவர்.

தமிழ்த் தேசிய இனம் வாழ்வோ, சாவோ என போராடிக் கொண்டிருந்த காலத்தில் நேர்மையுடன் வெளிப்படையாக பேசுவதை எதிர்பார்க்க முடியாத வீரியத்துடன் எடுத்துரைத்தவர் குமார். குமார் பொன்னம்பலம தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு தீர்வானது திம்பு மாநாட்டு கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமைய முடியும் என நம்பினார்.

திம்பு கோட்பாடுதனை தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளாக சிங்கள தேசம் ஏற்றுக் கொள்ளுமானால் அரசியல் தீர்வு காண்பது மிக எளிதாக அமைய முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.

ஒரு சில சிரேஷ்ட தமிழ் தலைவர்கள் குமார் பொன்னம்பலத்தினுடைய திம்பு கோட்பாடு மீதான அழுத்தம் கண்டு திம்பு கோட்பாடு அவசரத்தில் பிறந்த குழந்தை என்றனர்.

திம்பு மாநாட்டை பொறுத்தவரை அதில் கலந்து கொள்ளாத ஒரே அரசியல் கட்சி அகில இலங்கை தமிழ் காங்கிரஸாகும்.

ஆனாலும் அமரர் குமார் பொனனம்பலம் திம்பு மாநாட்டில் அனைத்து தமிழ் அமைப்புகளும் ஒரே குரலில் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட நாலம்ச இறுதி வரைவு எனும் திம்பு கோட்பாடுகள் (thimpu principles) தான் தமிழர்தம் அடிப்படை அபிலாஷைகளென அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

அந்த வகையில் திம்பு கோட்பாடு நான்கு விடயங்களை வலியுறுத்தி நின்றது.

1.இலங்கைத் தமிழர் என்பார் ஒரு தனித் தேசியம் என்பதை அங்கீகரித்தல்.

2.வடக்கு, கிழக்கென்பது இலங்கைத் தமிழரின் பாரம்பரிய தாயகமென்பதை அங்கீகரித்தல்.

3.வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

4.அனைத்து தமிழ் மக்களுக்குமான பிரஜாவுரிமையையும் அடிப்படை உரிமைகளையும் அங்கீகரித்தல் என்பனவாகும்.

இந்த விடயத்தில் நான்காவது விடயம் குறிப்பாக மலையக வாழ் இந்திய வம்சாவளி தமிழ் மக்களுடைய பிரஜாவுரிமையை வலியுறுத்துவதற்காகவே விஷேடமாக இணைக்கப்பட்டது.

இந்த விடயம் பிரேமதாசவுடைய காலத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொளஎப்பட்டுவிட்டது.

திம்பு கோட்பாடுகளின் காரண காரியம் என்னவென்றால் சிங்கள தேசியம் தமிழ்த் தேசியத்தின் அடிப்படை அபிலாஷைகளை புரிந்து கொள்ளுமானால், ஏற்றுக்கொள்ளுமானால் சமவுரிமையுடன் கூடிய சகவாழ்வை உறுதிப்படுத்தும் அரசியல் தீர்வு கிடைக்கக் கூடுமென நம்ப முடியாது.

வடக்கு கிழக்குக்கான அதிகார பரவலாக்கல் கூடுதலான அளவில் தெளிவாக செயற்படுத்தக்கூடிய முறையில் அமைய வேண்டும். அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதில் முட்டுக்கட்டை நிலை ஏற்படக்கூடாது என்று எதிர்பார்க்கின்ற பொழுதும் அதுவுங்கூட தமிழ்த் தேசியத்தின் அபிலாஷைகளுக்கு உட்பட்டதொன்றாகவே அமையும்.

அமரர் குமார் பொன்னம்பலம் தனக்கு அறிவுசார் நிலையில் உள்ள பல சிங்கள நண்பர்களிலிருந்தும் அவர்களிலும் ஒரு சிலர் தமிழ்த் தேசியத்தின்சமவுரிமை கோட்பாட்டை ஏற்றுக் கொள்கின்றவேளையில் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமை, பாரம்பரியம் என்கிற விடயங்களையும் இந்த சொற்பதங்களையும் ஏன் வெறுப்புடன் பார்க்கின்றார்கள் என்ற ஆதங்கம் அவருக்கு கவலையளித்தது. இன்றுங்கூட அதே மனப்பான்மையில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை என்பது கண்கூடு.

ஆதலினால்தான் தமிழ் இளைஞர்களும் பிரிவினைவாதத்திற்கு தள்ளப்பட்டார்கள் என்பதை தனது இறுதி காலங்களில் புரிந்துகொண்டார். அதை வெளிப்படுத்தினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பிரச்சினை தொடர்ந்து தாமதப்படுமானால் தமிழினம் முற்றுமுழுதாக அரசியல் தீர்வில் நம்பிக்கை இழந்து விடும்.

பாராளுமன்றத்தை தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான ஒரு மேடையாக பயன்படுத்த வேண்டுமே தவிர வெறும் சலுகைகளை மட்டும் பெறுவதற்கான மன்றாக அமைந்து விடக்கூடாது.

அவ்வாறு சலுகைகளை மட்டும பெறுவதாயின் நாம் அடிமை வாழ்வு வாழ்கின்றோம் என அர்த்தமாகி விடும்.

சில தமிழ் அமைப்புகள் வெறுமனே சலுகைகளுக்காக மட்டும் பாராளுமன்றத்தை பயன்படுத்துகின்றன. அரசியல் தீர்வின்றி சலுகைகளுக்காக மட்டுமே பாராளுமன்றை பயன்படுத்துவது மடமைத்தனமாகும்.

அவ்வாறு முன்நிபந்தனையுடன் அரசுக்கு ஆதரவு வழங்கிய இக்கட்சிகள் இதுவரையும் சாதித்தது என்ன? ஒரு அரசியல் தீர்வைக்கூட பெற்றுக்கொள்ள முடியவில்லை. சாதாரணமான அடிப்படை வசதிகளைக்கூட தமிழ் மக்கள் இழந்து தவிக்கின்றனர்.

அரசின் தமிழ் மக்கள் மீதான அடிப்படை மனித உரிமை மீறல்களை உச்ச நீதிமன்றங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்மக்களுக்கு பல்வகைப்பட்ட பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்ற போதும் அரசுக்கு ஆதரவளிக்கும் அமைப்புக்களுககாகவேனும் இனப்பிரச்சினைக்கான தீர்வல்ல. இந்த வாழ்வாதார பிரச்சினைக்குக்கூட தீர்வு காண முடியவில்லை.

இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக மாகாண சபை ஏற்புடையது அல்ல. 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபை தேர்தலில் மேல்மாகாணத்தில் போட்டியிட்ட சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லையெனவும், விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினைக்கு தீர்வாக இவை ஏற்காமல் நிராகரித்தமை நியாயமெனவும் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மாற்றீடாகவே பூரண சமஷ்டி அரசை அடிப்படையாக கொள்ளலாம். உண்மையில் தீர்வு முயற்சி மேலும் மேலும் தாமதிக்குமானால் தமிழ்மக்களுக்கு பல்வகைப்பட்ட பிரச்சினைகளும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. இது உணரப்படவில்லையாயின் இறுதியில் தமிழினம் அவர்களை முற்று முழுதாக நம்ப போவதில்லை.

அதிகாரப் பரவலாக்கலென்பது மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மத்திய அரசு மீளப் பெற முடியுமானால் மாகாண சபையும், அத்தகைய இயல்புகொண்ட ஒரு திட்டமாகும் அதனாலேதான்வலுவான ஒரு தீர்வு தேவைப்படு கின்றது என உறுதிப்பட நினைத்தார் குமார் பொன்னம்பலம். தமிழ் மக்களுடைய உரிமைக் காக உலகம் அறியும் வரை, ஐ.நா.வும் அமெரிக்காவும் அறியும்வரை முழுநேர பணியாற்றியவர் குமார் பொன் னம்பலம்.

வெறுமனே அரசியல்வாதியாக குரல்கொடுத்து வந்த குமார், ஒருபடி மேல் போய் மனித உரிமைகள் சட்டவாதியாக குரல்கொடுத்து உலக அரங்குகளில் இங்கு நடக்கும் மனித உரிமை மீறல்களை தெளிவாக எடுத்துக்காட்ட வல்ல மனித உரிமை வாதியாக பரிணமித்தார் அண்ணல குமார் பொன்னம்பலம். (அ-2)


# தங்கம்மா அப்பாக்குட்டியின் அறக்கொடை விழாவில் சிவத்தமிழ் விருது பெறுவோர்




சிவநெறிப்புரவலர், வைத்திய கலாநிதி கந்தையா மாணிக்கம் (ஓய்வு நிலை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்)



வாழ்நாள் சாதனையாளர் திருமதி அன்னலட்சுமி இராஜதுரை, (பிரபல ஊடகவியலாளர்)



சங்கீதபூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளை (ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)



நாகலிங்கம் தவமணி நாயகம் (ஒளிபரப்புக்கலை விற்பன்னர்)

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி துங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 89 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா இன்று நடை பெறவுள்ளது. இவ்விழாவில் சிவத்த மிழ் விருது பெறும் சான்றோர் விபரம் வருமாறு,

தென்மராட்சி உசனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டுள்ள வைத்திய கலாநிதி மாணிக்கம் அவர்கள் 1925.02.08 ஆம் திகதியன்று உசனைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கந்தையா, இருபாலையைச் சேர்ந்த கந்தையா பூபதி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை உசன் இராமநாதன் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்றார். தனது கல்வித் திறமையால் கொழும்பு இலங்கை பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வி கற்று MBBS என்ற பட்டத்துடன் வைத்திய கலாநிதியாக வெளியேறினார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னலட்சுமி இராஜதுரை அவர்கள் திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆகிய வற்றில் கல்வி கற்றார்.

கலைச் செல்வி என்னும் மாத இதழில் கவிதை எழுதியதன் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த இவர் யாழ்நங்கை என்ற புனை பெயரில் சிறுகதை எழுத்தாளராகவும் விளங்கினார்.

இசைக்கலைஞர்கணபதிப்பிள்ளை அவர்கள் சுப்பையா-வள்ளிய ம்மை தம்பதியினருக்கு 1939-10-16 இல் நெல்லியான் சுழிபு ரத்தில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியால யத்திலும் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

பாடசாலைக் கல்வியின் போது இசை, நாடகம், பேச்சு என்பனவற்றில் தனது திறமையை வெளிப்படுத்தி விருதுகள். இசையின் மீது இருந்த ஆர்வத்தால் அத்துறையில் தேர்ச்சி பெற விரும்பி ஆரம்ப காலத்தில் தவில் வித்துவான் வலங்கைமான் ஆறுமுகம் பிள்ளை, பெரிய தந்தையார் வரகவி பொன்னாலை பே.க. கிருஷ்ண பிள்ளை, சங்கீதபூஷணம் செ.இரத்தின சபாபதி சங்கீத ஆசி ரியர் ஆகியோரிடம் இசைப்பயிற்சி பெற்றார்.

உதயதாரகை கோணப்புலம் வீதி மல்லாகத்தில் 23.06.1928 ஆம் ஆண்டு நாகலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாக திரு.தவமணிநாயகம் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும் (தற்போது கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்) உயர் கல்வியை மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி யிலும் கற்றுக் கொண்டார். 1950-1988 வரையான காலப்பகுதியில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றினார். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு அரசாங்கம் எதையும் கொடுக்க போவதில்லை

## மன்னார் மறைமாவட்ட ஆயர் யோசப் தெரிவிப்பு

(குருமன்காடு)

**தமிழர்களுக்கு எதையும் இலங்கை அரசு கொடுக்காது என்பது நன்றாக தெரியும் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராஜப்பு யோசப் தெரிவித்துள்ளார்.**



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வவுனியா நகர மண்டபத்தில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 14 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது அதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்காக பணியாற்றிய குமார் பொன்னம்பலம், பால் பொங்கி வரும் போது பானை உடைந்தது போல் அவர் தனது பணியை ஆர்வத்துடன் செய்யவேண்டிய நேரத்தில் எங்களை விட்டு பிரிந்துள்ளார். எனினும் அவர் ஆற்றிய தொண்டுகளும் அவருடைய சிந்தனைப் போக்குகளும் எம்மை உற்சாகப்படுத்தி தமிழர்களுக்கான அரசியல் உரிமைக்காக பாடுபடுமாறு தூண்டிவிட்டுள்ளது.

இவரது தந்தையாரும் சிறந்த அரசியல்வாதியாக சட்டமேதையாக இருந்தவர். தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ்ந்த இனம். ஐம்பதுக்கு ஐம்பது என்ற உரிமை பெற்றுக் கொள்ள வேண்டும். உரிமைத்தாகம் எல்லோருக்கும் உள்ளதைப் போலவே தமிழ் மக்களுக்கும் உள்ளது. தமிழ் இனம் ஓர் தேசியம். அந்த உரிமையில் அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற வடக்கு கிழக்கு பிரதேசத்தில் அவர்கள் தம்மை ஆள்வதற்கான கோரிக்கையை வைப்பதற்கான உரிமை இருக்கின்றது என்பதனை முன்வைத்து செயற்பட்டவர்.

அந்தவகையிலேயே ஜி.ஜி. பொன்னம்பலத தின் மகனான குமார் பொன்னம்பலம் அவர்கள் விட்டுச்சென்ற பணியை நாம் தொடர வேண்டும்.

அதாவது தமிழ் மக்களினுடைய விடுதலையிலும் அரசியல் உரிமையிலும் அடித்தளம் கொண்டதாக அவர்கள் தங்களையே ஆட்சி செய்து முன்னேற்றம் காணும் வகையிலாக தமிழர்களின் உரிமை அவர்களுக்கு கொடுக்கப்படவேண்டும் என்பதிலே நாமும் பாடுபடவேண்டும்.

குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு நன்றாக தெரியும் இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதையும் கொடுக்காது என்று. ஏனெனில் இந்த நாட்டில் தேசபிதா என்று சொல்லக்கூடிய உயர்ந்த தளத்திற்கு ஏறி வந்தவர் கிடையாது. அரசியல்வாதிகள் எல்லாம் தங்களுடைய கட்சி அரசியலுக்கும் தங்களுடைய அதிகாரத்தை பெற்றுக் கொள்வதிலுமே கண்ணும் கருத்துமாக உள்ளார்கள்.

முழு தேசத்தையும் எடுத்து பார்த்தால் அல்லது அரசியல் யதார்த்தத்தை எடுத்துப் பார்த்தால் எங்களுடைய நாட்டின் பல மொழிகளையும் கலாசாரத்தையும் கொண்டவர்களுக்கு மத்தியில் சுயநிர்ணய உரிமைக்கு நாம் தகைமை கொண்டவர்கள் என்பதை இவ்வாறான நினைவு நாளில் எடுத்து சொல்லியிருக்கின்றார்.

அதன் அடிப்படையில் இந்த அரசாங்கம் எமக்கு எதனையும் செய்து விடாது. எங்காவது அதை இதை செய்து வீதிகளை திருத்தம் செய்து அழுகின்ற பிள்ளைக்கு மிட்டாய் மாதிரி எதையாவது எமக்கு எறிந்து விடுவார்கள். அதை எடுத்துக்கொண்டு நாம் இருக்க வேண்டும் என்பதே தான் அவர்கள் செயற்பாடாகவுள்ளது.

எமக்கு சலுகைகளும் வேண்டாம். நீ எங்களிடம் இரங்கவும் தேவையில்லை. ஆனால் எங்களுக்கு உள்ள உரிமையை தா. உரிமையை பறித்த நீ. உரிமையை கொடு. எனக்கு உரிமை புதிதாக வரவில்லை. ஏற்கனவே வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வாழ்ந்து வந்தோம். நம்மை நாமே ஆண்டு வந்தோம். ஆகவே புறநாட்டவர்கள் வந்து எம்மை ஒன்றாக சேர்த்து அங்குமிங்குமாக கொண்டு சென்றார்கள்.

ஆனால் நாங்கள் எமது பிரதேசத்தில் எம்மை ஆளவேண்டும் என உரிமையை தரவேண்டும் என நாம் போராடவேண்டும். ஆனால் இந்த போராட்டத்தில் தனி நாடு என்பதனை அவர்கள் காதில் கொள்ளாவிட்டாலும் இந்த உரிமைகளையும் தரமாட்டார்கள் என்று குமார் பொன்னம்பலத்திற்கு தெரியும்.

தமது உள்ளத்தில் இருந்து வருவதுதான் உண்மை என்று கூறுபவர்கள் வேறு எதுவும் உண்மை என்று ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள் எமக்கு உரிமையையும் தரமாட்டார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட அரசாங்கத்திலே நம்பிக்கை வைக்காது குமார் பொன்னம்பலம் சர்வதேச சமூகத்திடம் சென்று மக்களுக்காக போராட்டத்தில் ஈடுபட்டார். அவ்வாறான மனிதர் எம்மை விட்டு சென்றமை பேரிழப்பாகும் என தெரிவித்தார். (அ-9-250)

# அலங்கார உற்சவம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பாலையடி அருட்செல்வ விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளன.

உற்சவத்தின் 9 ஆம் நாளான 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தைப் பூச தினத்தன்று ஆயிரத்து எட்டு சங்காபிஷேகம், வசந்த மண்டப பூஜை என்பன இடம்பெற்று உருத்திர புரீஸ்வரர் ஆலயத்தில் தீர்த்த உற்சவம், தொடர்ந்து திருவூஞ்சல், சுவாமி வீதியுலா வரவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-9-254)

# கலாசாரப் பேரவையில் கரைஎழில் விருது வழங்கல்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் கலாசாரப் பேரவையினால் பிரதேசத்தில் கலை இலக்கியத்திற்காக பணிபுரிந்தவர்கள் வருடாவருடம் கரைஎழில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றனர் .

இதன்படி, 2013 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில கதிர்காமு தணிகாசலம், தேவராசா தியாகராசா ஆகியோர் கலை இலக் கியத்திற்காகவும், சுப்பிரமணியம் சோமசுந்தரம், பரமேஸ்வரி சிவபாதம் ஆகியோர் சமயப் பணிக்காகவும், நடராசா சிவபாலசுப்பிரமணி யம் இசைப் பணிக்காகவும், துரைச்சாமி உலகநாதையர் பாரம்பரிய கலைக்காகவும், கரைஎழில் விருது பாராட்டுப் பத்திரம், பொன்னாடை என்பன வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

கரைச்சி பிரதேச உதவிஅரசாங்க அதிபராக்க் கடமை புரிந்தவரும் நாடறிந்த எழுத்தா ளருமான செங்கை ஆழியான் (குணராசா) உயர கரைஎழில் விருது பெறு வதாக அறிவிக்கப்பட்டது. உடல்நலக்குறை வால் அவர் இந்த விருதைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

(அ-9-254)




# கால்நடைகளை கட்டுப்படுத்த முடிவு

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களில் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை பிரதேச சபையினர் முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகின்றனர்.

கால்நடை உரிமையாளர்கள் கால்நடைகளைப் பராமரிக்குமாறும் அவ்வாறு செய்யப்படாவிடின் கட்டாக்காலிகளாக திரிகின்ற மாடுகள் பிரதேச சபையினரால் பிடிக்கப்படும் பட்சத்தில் தண்டப் பணம் செலுத்த வேண்டி வரும் எனவும் 3 தடவைகளுக்கு மேல் ஒரு மாடு பிடிக்கப்பட்டால் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படும் என கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சு.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

(அ-9-267)

# கலை இலக்கிய போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச கலாசார பேரவையினால பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட கலை இலக்கிய போட்டிகளின் முடிபுகள் வெளியாகியுள்ளன.

இப் போட்டிக ளில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**கையெழுத்துச் சஞ்சிகை**

திருமதி நிலாகினி சுரேஸ்குமார், வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை,அனுசியா யோகராசா

**கவிதை**

திருமதி நிலாகினி சுரேஸ்குமார், அனுசியா யோகராசா, செல்வானந்தம் அசந்தன், வீ.சந்திரமோகன்

**கவியரங்கம்**

திரும்தி நிலாகினி சுரேஸ்குமார், சந்திரமோகன், அனுசியா யோகராசா

**வில்லுப்பாட்டு**

வேணுகானசபா (சரவணபவஆனந்தம்)

**நாடகம்**

க.ரெஜினோல்ட்

**சிறுகதை**

ரி.சர்வேஸ்வரன், யோகராசா அனுசியா, செல்வி இளையதம்பி நடராசா

**சிறுவர்களுக்கான கதைகூறல்**

திருமதி நிலாகினி சுரேஸ்குமார், வீ.சந்திரமோகன்

**பேச்சு**

செல்வி யோகராசா அனுசியா, இ.சுதர்சன், அ.தக்சிலாநிதி

**நடனம்**

லிங்கேஸ்வரன் கலாமன்றம்,முத்துமாரி அம்மன் நாடக மன்றம்

(அ-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

681

## அரசனைத் தேர்ந்தெடுத்த பறவைகள்!

முன்பு ஒரு சமயம் அன்னப்பறவை, கொக்கு, குயில், மயில், சாதகப் பறவை, ஆந்தை, மாடப்புறா, புறா, நீலக்குயில், கழுகு, வானம்பாடி, நாரை, மைனா, மரங்கொத்திப் பறவை என இன்னும் பல பறவைகள் எல்லாம் ஒன்றுகூடி யோசனை செய்யத் தொடங்கின.

"நமக்குக் கருடன் தான் ராஜா. ஆனால் அவரோ மகாவிஷ்ணுவுக்குப் பணிவிடை செய்து வருகிறார். நம்மைக் கவனிப்பதில்லை. ஆகவே அப்படிப்பட்ட போலி ராஜாவால் நமக்கு என்ன லாபம்? வலையில் சிக்கிவிடுவது போன்ற துக்கங்கள் நமக்கு ஏற்படும் போது அது நம்மைக் காப்பாற்றுவதில்லை.

கஷ்டமான நிலைமையிலும், அதை விடக் கஷ்டமான நிலைமையிலும் யார் துயரத்தைப் போக்கிப் புத்துயிர் அளிக்கிறானோ அவனே எனக்கு ராஜா. சந்திரனுக்குச் சூரியன் ஒன்றே ராஜா. அதுபோல் அவன் ஒருவனுக்கே பணிவிடை செய்வேன்.

மற்றவன் பெயரளவில்தான் ராஜா. சதா துயரத்தால் பீடிக்கப்பட்டு பயந்துள்ளவர்களைக் காப்பாற்றாத அரசன், உண்மையில் அரச உருக்கொண்ட யமனே ஆவான்.

அறிவு குறைவான பண்டிதன், வேதம் கற்காத புரோகிதன், மக்களைக் காக்காத அரசன், வெறுப்பாகப் பேசும் மனைவி, ஊரை விரும்பும் இடையன், பணத்தில் ஆசை கொள்ளும் நாவிதன் - இவர்களை ஓட்டை விழுந்த கப்பலை விட்டுச் செல்வதைப்போல் துறக்க வேண்டும்.

ஆகவே பறவைகளின் அரசனாக வேறு யாரையாவது நியமிக்க வேண்டும்" என்று பேசின.

ஆந்தை பெரிய உருவம் உடையது அல்லவா? அதைப் பார்த்து மற்ற பறவைகள், "இந்த ஆந்தை நமக்கு அரசனாக இருக்கட்டும். மகுடாபிஷேகத்துக்கு வேண்டிய எல்லாவிதமான பொருட்களையும் குவியல் குவியலாகக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லின. அதன்பிறகு, எல்லா புனித நதிகளிலிருந்தும் நீர் கொண்டுவரப்பட்டது.

சக்கர அடையாளமுடைய பூ, மஞ்சள் தாமரை உள்ளிட்ட நூற்றெட்டு மலர்களாலான மாலை தயாரிக்கப்பட்டது. சிம்மாசனம் அமைக்கப்பட்டது. தரையில் ஏழு கண்டங்களும், சமுத்திரங்களும், மலைகளும் படமாக வரையப்பட்டன. புலித்தோல் விரிக்கப்பட்டது. பொற்கலசங்களில் ஐந்துவிதத் தளிர்கள், மலர்கள், அட்சதைகளை நிரப்பினர்.



அர்க்கியங்கள் தயாரிக்கப்பட்டன. ஸ்துதி பாடகர்கள் பாடினர். நான்கு வேதங்களையும் ஓதுவதில் நிபுணர்களான பிராமணர்கள் வேதம் ஓதினர். பெண்கள் மங்கல கீதங்கள் பாடினர்.

மஞ்சள் பூசிய அரிசி, வெண்கடுகம், பொரி, மஞ்சள்பொடி, பூமாலை, சங்கு ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்ட அட்சதைப் பாத்திரம் தயாரித்து முன்னால் வைத்தனர். ஆரத்தி எடுப்பதற்கு விதிப்படி தேவைப்பட்ட பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டன. மங்கல வாத்தியங்கள் முழங்கின. ஆந்தை உருவம் பொறித்த மேடையின்மீது சிம்மாசனம் நிறுவப்பட்டது. அபிஷேகத்தின் பொருட்டு ஆந்தையை அலங்கரித்துக்கொண்டிருந்தன.

அந்த வேளையில், எங்கிருந்தோ கா கா என்று கொடூரமாகக் கத்தித் தன் வரவை அறிவித்தபடியே ஒரு காக்கை அங்கு வந்து சேர்ந்தது. "ஓஹோ, என்ன இது? எல்லாப் பறவைகளும் ஒன்றுகூடி இருக்கின்றனவே! ஏதாவது உற்சவமோ?" என்று காக்கை எண்ணிற்று. காக்கையைப் பார்த்ததும் மற்ற பறவைகள் தங்களுக்கிடையே பேசிக் கொண்டன. "பறவைகளுக்குள்ளே காக்கை சாமர்த்தியசாலி என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகவே இவனுடைய பேச்சையும் கேட்கலாம.

மனிதர்களில் நாவிதன் கெட்டிக்காரன் பறவைகளில் காக்கை கெட்டிக்காரத்தனமுள்ளது. மிருகங்களில் நரி கெட்டிக்காரத்தனமுள்ளது. தபஸ்விகளில் வெள்ளையுடை தரித்தவன் கெட்டிக்காரன். என்றொரு பழமொழி உண்டு.

மேலும், பல அறிவாளிகளையும் கூடிக் கலந்து பேசி, பல அத்தாட்சிகளையும் கொண்டு, பல கோணங்களிலிருந்து ஆலோசித்துச் செய்கிற காரியம் ஒருபொழுதும் வீணாவதில்லை.

என்றும் ஒரு பழமொழி இருக்கிறது" என்று பேசிக்கொண்டன.

ஆகவே, பறவைகள் காக்கையைப் பார்த்து, "காக்கையே, பறவைகளுக்கு ராஜா இல்லை என்பது உனக்குத் தெரியும். எனவே, எல்லாப் பறவைகளும் சேர்ந்து இந்த ஆந்தையை ராஜாவாக அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றன. ஆகவே நீயும் உன் அபிப்பிராயத்தைச் சொல். நீ சரியான வேளையில் வந்திருக்கிறாய்" என்றன.

காக்கை சிரித்தபடியே, "கனவான்களே, இது சரியல்ல, அன்னப்பறவை, மயில், குயில், சகோரப்பறவை, சக்ரவாகம், புறா, கொக்கு முதலியவை முக்கியமாக இருக்கும் போது, பயங்கரமான முகத்தையுடைய இந்தப் பகல் குருடனை ராஜாவாக அபிஷேகம் செய்வது எனக்குச் சரியென்று தோன்றவில்லை. ஏற்கனவே கருடன் உங்களுக்கு அரசனாக இருக்கையில், இவனால் உங்களுக்கு என்ன பிரயோஜனம்? ஒருவன் அரசனாக இருக்கையில் இன்னொருவனை அரசனாக்குவது நல்லதல்ல.

நிஜமான கருட ராஜாவின் பெயரைக் கேட்டாலே யாரும் உங்களைத் துன்புறுத்த அணுகுவதில்லை" என்றது காக்கை.

## 01.2014 07
## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1325 - போர்த்துக்கல் மன்னனாக நான்காம் அல்ஃபொன்சோ முடிசூடினான்.
- 1558 - காலே (Calais) நகரத்தை இங்கிலாந்திடம் இருந்து பிரான்ஸ் கைப்பற்றியது.
- 1598 - ரஷ்யாவின் ஆட்சியை போரிஸ் கூதுனோவ் கைப்பற்றினான்.
- 1608 - வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுண் நகரம் தீயினால் அழிந்தது.
- 1610 - கலிலியோ கலிலி ஜூபிட்டர் கோளின் நான்கு இயற்கை செய்மதிகளைக் கண்டறிந்தார்.
- 1782 - அமெரிக்காவின் முதலாவது வர்த்தக வங்கி வட அமெரிக்க வங்கி திறக்கப்பட்டது.
- 1789 - ஐக்கிய அமெரிக்காவில் முதற்தடவையாக அரசுத் தலைவர் தேர்தல் இடம்பெற்றது.
- 1841 - யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழ், ஆங்கில மொழிகளில் ஆரம்பிக்கப் பட்டது.
- 1894 - வில்லியம் கென்னடி டிக்சன் அசையும் படத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1927 - அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து முதலாவது தொலைபேசிச் செய்தி நியூயோர்க் நகருக்கும் லண்டனுக்கும் இடையில் அனுப்பப்பட்டது.
- 1935 - முசோலினி மற்றும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் பியேர் லாவல் ஆகியோர் பிரெஞ்சு- இத்தாலிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.
- 1953 - அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ரூமன் ஐக்கிய அமெரிக்கா ஐதரசன் குண்டைத் தயாரித்திருப்பதாக அறிவித்தார்.
- 1959 - பிடல் காஸ்ட்ரோவின் புதிய கியூபா அரசை அமெரிக்கா அங்கீகரித்தது.
- 1968 - நாசாவின் சேர்வயர் 7 விண்கலம் ஏவப்பட்டது.
- 1984 - புரூணை ஆசியான் அமைப்பில் 6-வது உறுப்பு நாடாக இணைந்தது.

### பிறப்புகள்

- 1502 - பாப்பரசர் 13-வது கிரெகரி, (இ. 1585)
- 1925 - **தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ்ப்பாணத்தின் சமூக சேவையாளர் (இ. 2008)**
- 1941 - ஜோன் வோக்கர், ஆங்கிலேய வேதியியலாளர்

### இறப்புகள்

- 1943 - நிக்கோலா தெஸ்லா, கண்டுபிடிப்பாளர் (பி. 1856)
- 1984 - ஆல்பிரட் காஸ்லர், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர் (பி. 1902)
- 1998 - விளாடிமிர் பிரெலொக், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (பி.1906)

## "சிவத்தமிழ்ச்செல்வி" தங்கம்மா அப்பாக்குட்டி



1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழையல் அப்பாக்குட்டி- தையற்பிள்ளை தம்பதிகளுக்குப் பிறந்த, சமூக சேவையாளரும், சமயச் சொற்பொழிவாளரும், சைவதுக்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றியவரும், ஏழை மக்களுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஆதரவு இல்லங்கள் அமைத்து சேவையாற்றியவரும், யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவும் செயற்பட்டு வந்த **சிவத்தமிழ் செல்வி"** என்று அழைக்கப்படுபவர் தங்கம்மா அப்பாக்குட்டி.

யாழ்ப்பாணத்தில் ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு முதன்மையான பங்குண்டு.

1970களில் சிறிய கோயிலாக இருந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருத்தலத்தைக் கட்டியெழுப்பி ஆலயப் பணியுடன் மக்கள் தொண்டும் ஆற்றி வந்தார்.

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவுக்காக **"சிவத்தமிழ்ச் செல்வி"** என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. மேலும் **"திருவாசகக் கொண்டல்", "செஞ்சொற் செம்மணி", "சிவஞான வித்தகி", "துர்க்கா புரந்தரி"** போன்ற பதினைந்திற்கும் மேற்பட்ட பட்டங்களையும் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டார்.

ஆலய வளாகத்தில் ஆதரவற்ற சிறுமிகளுக்கென **"துர்க்காபுரம் மகளிர் இல்லம்"** என்ற பெயரில் ஆதரவு நிலையம் ஒன்றை நிறுவி சேவையாற்றி வந்ததோடு, பசித்துவரும் ஏழைகளின் பசி தீர்க்கவும், தொண்டர்தம் பசியாற்றவும் **"அன்னபூரணி அன்னதான மண்டபம்"** அமைத்தார். அத்துடன் கல்யாண மண்டபம், நல்லூரில் துர்க்காதேவி மணிமண்டபம் என்பனவற்றை ஆரம்பித்தார்.

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி காலமானார். பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் இவரது இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன. இவரின் மறைவுக்கு தமிழ்நாடு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இரங்கல் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசினால் **கலாசூரி** என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைவருள் தலைசிறந்த மகாத்மா!

சத்குரு: சுதந்திரப் போராட்டத்தின் போது, நம்மிடையே கடலளவு தலைவர்கள் இருந்தார்கள், ஆனால் அது வேறுவிதமான தலைமையாக இருந்தது. அப்போது மக்கள் ஒரு ஆக்கிரமிப்பு சக்திக்கு எதிராகப் போராடி வந்தனர். அப்படிப்பட்ட ஒரு தலைவருக்கு சிறந்த உதாரணமாக மகாத்மா காந்தி விளங்கினார். அவர் அற்புதமாக செயலாற்றினார்.

இப்போது இந்த நாட்டுக்கு கண்டிப்பாக வேறொரு தளத்தில் இருக்கும் தலைமை தேவை. அவர்கள் ஞானிகளாக, மகான்களாக இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை, ஆனால் இப்போது அவர்கள் இந்த தேசத்தின் அடித்தளத்தையே அரித்து தின்று கொண்டிருக்கிறார்கள்.

இதில் அரசியல் தலைமைகளை மட்டும குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை. இந்த தேசத்தின் பொதுவான இறையாண்மையே நம்ப முடியாத அளவில் கீழிறங்கிவிட்டது. நான் ஒரு சில சந்திப்புகளுக்குப் போகும்போது, மக்கள் என்னிடம், "அரசியல்வாதிகள் அனைவருமே ஊழல்வாதிகள்" என்று சொல்கிறார்கள். அதற்கு நான் அவர்களிடம், "அப்படிச் சொல்லாதீர்கள். இப்போது நான் உங்களிடம் ஒரு எளிய கேள்வியைக் கேட்கிறேன்.

உங்கள் ஊரில் வண்டியோட்டிக்கொண்டிருக்கிறீர்கள். காவல்துறை அதிகாரி யாரும் அப்போது சாலையில் இல்லை. சாலையில் சிவப்பு விளக்கு எரிகிறது. உங்களில் எத்தனை பேர் நிறுத்திச் செல்வீர்கள்? 10% பேர் கூட நிறுத்த மாட்டீர்கள். அப்படிப்பட்ட உங்களை நான் பிரதமராக ஆக்கினால், நீங்கள் எப்படிப்பட்ட பிரதமராக இருப்பீர்கள்?" என்று கேட்பேன். நம்மைப் போன்றவர்கள் தானே நமக்கு தலைவராக வாய்ப்பார்கள்.

ஆகவே இதில் அரசியல்வாதிகளை மட்டும் குறை சொல்லி பிரயோசனமில்லை. நமது பொதுவான இறையாண்மைத்தன்மையே மிகவும் தாழ்ந்து போய்விட்டது. அறுபது, எழுபது வருடங்களுக்கு முன்னால், மகாத்மா காந்தி என்பவரைப் பற்றி பெருமை பேசப்பட்ட இந்த தேசத்தில், நாட்டின் ஒற்றுமையைப் பற்றி மிக உயர்வாக பேசப்பட்ட இடத்தில், மக்கள் இந்த நாட்டுக்காக வீதிகளில் தங்கள் உயிர்களை தியாகம் செய்யவும் தயாராக இருந்தார்கள்.

ஆனால் வெறும் ஒரே ஒரு தலைமுறை இடைவெளியில், இந்த இறையாணமையின்



தரம் மிகவும் தாழ்ந்துவிட்டது, இதை மீண்டும உயர்த்துவதற்கு நாம் உண்மையான முயற்சி எதையும் செய்யவில்லை.

அரசியல்வாதிகளும் உங்களைப் போன்றவர்கள்தான். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை, அவ்வளவுதான் வித்தியாசம், இல்லையா? உங்களுக்கு யாரும் வாக்களிக்க விரும்பவில்லை, சிலர் அவர்களுக்கு வாக்களிக்க விரும்பியிருக்கிறார்கள். சிலருக்கு தங்களுடைய பண்புகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் கிடைத்துள்ளது, சிலருக்குக் கிடைக்கவில்லை.

ஆகவே நாம் நம்மைப் போன்றவர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறோம். எப்போதும், அனைத்துக்கும் அரசியல்வாதிகளை குறை கூறுவது என்பது இந்த நாட்டில் இன்னொரு பொழுதுபோக்கு. நாம் தலைமைகளிடமிருந்து நிறைய எதிர்பார்த்தாலும், நம் தகுதிக்கேற்ற தலைவர்கள் தான் கிடைப்பார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மக்களிடையே ஒற்றுமை இல்லாததால், தலைவர்களிடையேயும் ஒற்றுமையில்லை.

ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகள் மனதில் விதைத்திருக்கும் ஊழலின் விளைவுதான் இது. இது முதலமைச்சரைப் பற்றியோ அல்லது பிரதமரைப் பற்றியோ அல்லது அரசாங்க ஊழியர்களைப் பற்றியோ அல்லது வேறொருவரைப் பற்றியதோ அல்ல.

"உன்னைச் சுற்றி என்ன நடந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாதே, உன்னை மட்டும் பார்த்துக் கொள்"- இது ஒவ்வொரு பெற்றோரும், ஒவ்வொரு தாயும் தங்களது குழந்தைகளுக்கு தாய்ப்பாலுடன் சேர்த்து ஊட்டிய ஒரு பண்பு. பெரும்பாலான குடும்பங்கள் தங்களது குழந்தைகளுக்கு இதைத்தான் கற்றுக் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன், இல்லையா? ஆகவே ஊழல் என்பது இங்கு மிக இயல்பான ஒரு விடயமாக இருக்கிறது.



## ஆன்மீகம் 86

இந்த நிலை மாற வேண்டும், ஆனால் இது ஒரே நாளில் மாறிவிடாது. முதலில் நம்மை நாம் மாற்றிக் கொண்டு, பிறகு நம் குழந்தைகளை, நாம் செய்யும் வேலைகளில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

இதை நாம் அனைத்து நிலைகளிலும் மாற்ற வேண்டும். இது சுலபமல்ல. இதனால் நிறைய பிரச்சினைகள் ஏற்படும், ஏனென்றால் உங்களைச் சுற்றியிருக்கும் சூழ்நிலைகள், ஒரு நாளில் லட்சம் முறை உங்களை அவற்றின் வழிகளில் உள்ளிழுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் நாம் உண்மையிலேயே எதையாவது செய்ய வேண்டுமென்றால், நாம் நன்றாக வாழக் கூடிய ஒரு தேசத்தை உருவாக்க வேண்டுமென்றால், இதைச் செய்துதான் ஆக வேண்டும். வேறு வழியே இல்லை.

-சத்குரு ஜக்கி வாசுதேவ்-



ஈழத்தமிழர் விடுதலைக்கு இதயம் தந்த இமயம்!

# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



சக்கரவர்த்தித் திருமகள் படத்தில் எம்.ஜி.ஆர்

07

மாடர்ன் தியேட்டர்ஸ் அப்போதே கலைக்கல்லூரி. அங்கு கற்று வெளி வந்தவர்களே பல நடிக நடிகையரும் தொழில்நுட்பக் கலைஞர்களும்.

படங்கள் பார்க்கலாம். புத்தகங்கள் படிக்கலாம். இப்போது திரைப் படக் கல்லூரி செய்யும் காரியத்தை அன்றே அந்நிறுவனம் செய்தது.

நான் செம்மலுடன் அலிபாபா படத்திற்குச் சென்றிருந்த போது அதன் நிறுவுநர் டி.ஆர்.எஸ். அவர்கள், ஆடை அலங்காரம் அர்த்தநாரியிடம் சொல்லி பல படங்களை என்னைப் பார்க்கச் செய்தார். அவைகளில் கிங் அண்ட பேக்கர் ஒன்று. அது இரட்டையர் கதை.

அதன்பின் சக்கரவர்த்தித் திருமகள் படப்பிடிப்புக்காக மைசூர் சென்றபோது என்னையும் அழைத்துப் போனார்.

சொந்தப்படத் தயாரிப்புக்காகக் கதையைப் பேச, பிருந்தாவனத்தில் அமைந்துள்ள அரசு ஓட்டலில் தங்கிப் பேசினோம்.

...ஏரால் பிளன்தான் என் நடிப்பின் குரு. அவருடைய படங்களை விடாமல் பார்ப்பேன். அவர் நடித்த பிரிஸனர் ஆஃப் ஜண்டா என்னைக் கவர்ந்தது. அந்தக் கதை தெரியுமா...? என்று கேட்டார்.

நான் தமிழிலேயே படித்துள்ளேன். ஒரு முஸ்லிம் பெண், ஏங்கள் ஊரிலேயே எழுதி புத்தகமாக வெளியிடப்பட்ட காதலும் கடமையும் என்று பெயர் என்றேன். (அந்தப் பெண் பிறகு திரையுலகில் அறிமுகமான தூயவனின் சகோதரி)

அதையும் மனதில் வைத்து இஃப் ஐ எவர்கிங் என்ற கதையையும் வைவா ஜெபட்டா என்ற ரஷ்ய கதையையும் மனதில் வைத்து முடிந்தால் எழுதும் பார்க்கலாம் என்றார்.

இந்த ஆணையை மேற்கொண்டேன்.



குலேபகாவலி படத்தில் எம்.ஜி.ஆர்

செம்மல் கர்நாடக சங்கீதப்பிரியர்.

ஒருநாள் இரவு படப்பிடிப்பிலிருந்து வந்து ஓய்வாக தியாகராஜ கீர்த்தனைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது ரவீந்திரன், எனக்கு வசதி வந்தால் இந்த கீர்த்தனைகளை ராக, தாளம் தவறாமல் சுவை குன்றாமல் தமிழில் இயற்றச் செய்வேன் என்றார்.

இன்னொருநாள்... ஒரு அசாத்தியமான கற்பனை!

ஓய்.... இப்ப திடீரென்று இந்த டேம் உடையுது. நாமெல்லாம் என்னாவோம். கொஞ்சம் கற்பனை செய்து பாரும் உதவும் என்றார்.

ஏதாவது படத்துக்கு கிளைமாக்ஸா என்று கேட்டேன்.

## திருமகளில் இருமகள்

எதுக்கும் யோசிச்சு வையும் சொல்றேன் என்றார்.

அடுத்த நாள் படப்பிடிப்பு, மகாராஜாவின் அத்தை முறையுள்ள ஒரு மூதாட்டியின் மாளிகையில்,

அது பழங்காலத்து மாளிகை.

செம்மல் வாசலில் அமர்ந்திருந்தார்.

குதிரைகள் வருவதற்கு தாமதமானது. அப்போது அந்த மூதாட்டி செம்மலை உள்ளே வந்து அமரச் சொன்னார். செம்மலும் அமர்ந்தார்.

கொஞ்ச நேரத்தில் இரண்டு பெண்கள் வந்தனர். மூதாட்டி அவர்களை அறிமுகம் செய்து வைத்தார் தனது வளர்ப்புப் பெண்கள் என்று. கல்லூரியில் படிக்கிறார்கள். மூத்தவள் பெயர் சரிதா. இளையவள் பெயர் சுனிதா என்றும் சொன்னார்கள்.

அப்பெண்கள் இருவரும் செம்மலின் இரு பக்கத்திலும் உட்கார்ந்து தொழில் சம்பந்தமாக பல கேள்விகளைக் கேட்டனர்.

செம்மலுக்குக் கூச்சம். தெரிந்த வரை பதில் சொன்னார். சரிதா சகஜமாக பேசினார்.

அன்று காலையில் படப்பிடிப்பு, குதிரையின் காரணமாக ரத்தானதால் மாலையில் வேறு காட்சியை எடுக்க நீர்வீழ்ச்சிக்குப் போனார்கள்.

செம்மல், என்னை மட்டும் அறையில் இருக்கச் சொல்லிவிட்டுப்போய் விட்டார். மாலை மணி ஐந்துக்கு சரிதா வந்துவிட்டார். செம்மலைக் கேட்டார்.

படப்பிடிப்புக்குப் போய்விட்டதையும் காலையில் வேலை நடக்காததால் பகலில் வேறு காட்சி எடுக்க நினைத்ததைச் சொன்னேன்.

அப்படியா? ஒரு நாள் வேலை நடக்கவில்லையானால் முதலாளிக்கு நஷ்டம் தானே, நீங்கள் யார் என்று கேட்டார். தெரிவித்தேன்.

மணி எட்டானது. வந்த அவர் போகவில்லை. செம்மலும் வரவில்லை. போன் வந்தது. பேசினேன். அப்பெண் வந்திருப்பதைச் சொன்னேன்.

வர 10 மணியாகும். சரிதா அம்மாவைப் போகச் செய்துவிடும் என்று சொன்னார்.


அவரிடம் பக்குவமாகச் சொன்னேன். ஒன்பது மணி வரை பார்க்கிறேன். இல்லையானால் போய்விட்டு நாளைக் காலை எட்டு மணிக்கெல்லாம் வருகிறேன் என்றார். பிறகு பெரும்பாலும் மௌனமே நிலவியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களுக்கு நீதிகிடைக்க இறுதி மூச்சுவரை போராடுவேன்

## ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ சூளுரை



**(சென்னை) இலங்கைத் தமிழர்களுக்கு அந்நாட்டு அரசும் இராணுவமும் இழைத்துள்ள கொடுமைகளுக்கு நீதிகிடைக்கும்வரை தொடர்ந்து போராடுவேன் என்று ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

சர்வதேச மனிதவுரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் இரண்டு நாள் சர்வதேச மாநாடு டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கைப் போரின்போது அந்நாட்டு இராணுவம் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையால் ஏராள மான தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

தமிழர்கள் இந்த பூமிப் பந்தின் பழமையான குடிகள் என்பதை வரலாற்று ஆய்வாளர்கள், தொல்லியல் துறையினர், மானுடவியலாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஈழததமிழர்களும் இலங்கையின் பூர்வீகக் குடிகள். அங்கு ஈழத் தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனியாக ஆட்சி செய்த வரலாறும் உண்டு.

ஆனால், இலங்கையின் வளர்ச்சக்குப் பெரிதும் உதவிய ஈழத்தமிழர்களை இலங்கை அரசு பல வகையிலும் ஒடுக்கத் தொடங்கியது, தனி ஈழ உரிமைக்காக தமிழர்கள் போராடக் காரணமாக அமைந்தது.

ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசுகள் தொடர்ந்து ஈடுபட்டுவந்தன.

இதன் உச்சக்கட்டமாக இலங்கையின் ராஜபக்ஷ அரசு 2009ஆம் ஆண்டு ஜனவரியில் நிகழ்த்திய விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தமிழ் இன அழிப்பு வேட்டையை நடத்தியது.

இப் போரில் இலங்கைக்குத் தேவையான ஆயுதங்கள், இராணுவப் பயிற்சி என அனைத்து உதவிகளையும் இந்திய அரசும் செய்தது.

இப் போரில் ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர்.

போருக்குப் பின்பும் அங்குள்ள தமிழர்கள், குழந்தைகள் மீதும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தனது கடமையைச் செய்யத் தவறிவிட்டது. மனித உரிமையைப் பாதுகாக்க வேண்டியது சர்வதேச சமுதாயத்தின் கடமை.

இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள் தொடர்பாக சனல்-4 வெளியிட்ட காணொளிக் காட்சிப் பதிவுகள் ஆதாரமாகும்.

ஈழத் தமி ழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை டி.வி.டி. மூலமாகவும், புத்தகம் வாயிலாகவும் இந்தியாவிலுள்ள அனைத்து மாநில மக்களிடமும் கொண்டு செலலும் முயற்சியை மேற்கொண்டு வருகிறேன்.

இப் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச சமுதாயத்தின் மேற்பார்வையில் இலங்கையில் ஈழத் தமிழர்கள் வாழும் பகுதியில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். மேலும், ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்து, இனப் படுகொலை குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள இலங்கை அரசையும் அதன் கூட்டாளிகள் மீது சர்வதேச நீதி மன்றத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஈழத் தமிழ்ர்களுக்கு நீதி கிடைக்கும்வரை எனது இறுதி மூச்சு வரை தொடர்ந்து போராடுவேன் என்றார். (அ-2)

### அதிக சுறாமீன்கள் இலங்கையிலும்

(கொழும்பு)

உலகில் சுறாமீன்கள் அதிகமுள்ள 20 நாடுகளின் வரிசையில் இலங்கை 14ஆவது இடத்தில் உள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச ஆய்வொன்றில் இது தெரியவந்துள்ளது.

இதற்கமைய, கடல்வாழ் விலங்கினங்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றை முகாமைத்துவம் செய்வதற்குமான தேசிய திட்டமொன்றை தேசிய சமுத்திர வள அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து மீன்பிடி மற்றும் சமுத்திரவள அபிவிருத்தி அமைச்சு முன்னெடுத்துள்ளதாக அமைச்சின் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (அ)





யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி வலயத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு வதிவிட முன்சேவைப் பயிற்சி அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப பிரிவில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் வளவாளர்களின் ஆக்கங்கள் அடங்கிய நூலை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை கிளி.ஆரம்பக் கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம் பெற்றுக்கொள்வதையும் அருகில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி நிற்பதையும் பங்குபற்றிய ஆசிரியர்களின் உடற்பயிற்சி கண்காட்சியையும் படங்களில் காணலாம்.

## ஆனையிறவு புகையிரத நிலையத்தின் பெயரை மாற்ற வேண்டாம்

### சீ.வி.கே.அமைச்சர் பந்துலவுக்கு கடிதம்



கிளிநொச்சி- ஆனையிறவு புஙகயிரத நிலையத்திற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு வடமாகாணசபையின் பேரவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளதுடன், இந்நடவடிக்கை தமிழ் சமூகத்தின் வரலாற்றுப் பாரம்பரியத்தை சிதைக்கும் மோசமான நடவடிக்கை எனவும் குற்றம்சாட்டியுள்ளார்.

புகையிரத நிலைய பெயர் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், திட்டத்தை கைவிட வலியுறுத்தியும் கடந்த 3 ஆம் திகதி சீ.வி.கே. சிவஞானம் மத்திய கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவிற்கு கடிதம் ஒன்றினையும் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் எழுதியுள்ளவை வருமாறு, கடந்தாண்டு டிசெம்பர் 29ஆம் திகதி ஆங்கில வார இதழ் ஒன்றில் ஆனையிறவு புகையிரத நிலையத்தின் பெயர் மாற்றம் தொடர்பான செய்தி ஒன்று வெளியாகியிருக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

புகையிரத நிலையத்தினை மீள் நிர்மாணம் செய்வதற்காக தாங்கள நிதி சேகரிக்கும் நடவடிக்கையை நாமும் வரவேற்கின்றோம். ஆனால் நீண்டகாலம் பழக்கத்தில் உள்ள தமிழ் பெயரும், அன்னிய ஆட்சியாளர்களால் கொடுக்கப் பட்டதுமான ஆனையிறவு என்ற தமிழ் பெயரை "செனகசக தொட்ட பொல" என பெயர மாற்றம் செய்வதற்கு தாங்கள் எடுக்கும் முயற்சிகள் எம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடியவையல்ல.

ஆனையிறவு என்ற தமிழ்ப் பெயர பண்டைய காலத்தில் இப் பகுதியில் இடம்பெற்ற பாரிய யானை [illegible] தொடர்பாக எழுந்தது.

எனவே இந்த தமிழ்ப் பெயரை மாற்றம் செய்வதற்குப் பின்னாலுள்ள காரணங்களை அல்லது தேவைகளை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசாங்கம் பாரபட்சம் மற்றும் அழிவுகளின் காயங்களை ஆற்றுவதாகவும், சமரசத்தை ஏற்படுத்திக கொண்டிருப்பதாகவும் கூறிவரும் நிலையில் இது முற்றிலும் முரணான விடயமாகும்.

எனவே இத்தகைய பெயர் மாற்றும் நடவடிக்கையினை நாங்கள் முழுமையாக எதிர்க்கிறோம். அல்லது எதிர்க்கவேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்படுகின்றோம். என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, ஆனையிறவு புகையிரத நிலையத்தின் பெயர் மாற்றப்படாது என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தன்னிடம் உறுதியளித்ததாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணன் தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மாகாண சபைத்தேர்தல் மார்ச் மாதம் நடைபெறும்

(கொழும்பு)

உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி நடத்தப்படும் என்று, அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இந்த ஆண்டு நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிந்தது

இந் நிலையில் மார்ச் மாதம் 29ஆம் திகதி இந்த மாகாணங்களின் தேர்தல்கள் நடைபெறும். இதில் அரசாங்கம் நிச்சயமாக வெற்றி பெறும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டை கருதியே அரசாங்கம் மார்ச் மாதம் தேர்தலை நடத்த முற்படுவதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜெனீவா மாநாட்டில் அரசாங்கம் சந்திக்கவுள்ள சவால்கள் மீதான அவதானத்தில் இருந்து பொது மக்களை திசை திருப்பும் வகையில் இந்த தேர்தல்கள் நடத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

### பிரதமருக்கு எதிராக பேரணி

(கொழும்பு)

பிரதமர் டி.எம்.ஜயரத்னவுக்கு எதிராக எம்பிலிப்பிட்டிய நகரில் பேரணி ஒன்று இடம்பெற்றது.

ஜாதிகஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தலைமையில் பிரதமருக்கு எதிராக இடம்பெற்ற இவ்வெதிர்ப்பு பேரணி எம்பிலிப்பிட்டிய ரஜமஹா விகாரையில் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் ஆரம்பமாகி நகர் ஊடாகச் சென்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜாங்க செயலரின் வருகைக்கும் ஜெனீவாஅமர்வுக்கும் தொடர்பில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

**(கொழும்பு) தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் பிஷ்வாலின் இலங்கை விஜயத்துக்கும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமைப் பேரவை அமர்வுகளுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.**

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய சில தினங்களில் இலங்கைக்கு வருகை தரவுள்ளமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர் பில் வெளிவிவகார அமைச்சின் செய ல்ாளர் கருணாதிலக அமுனுகம குறிப் பிடுகையில்,

குறித்த அமெரிக்க உயர் அதிகாரி அந்தப் பதவிக்கு வந்த பின் னர் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை முதற் தடவையாக மேற்கொள்கின்றார். விடயம் அவ்வளவுதான்.

இலங்கைக்கு மட்டுமல்ல இப் பிராந்தியத்தின் பல்வேறு நாடுகளுக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார். அந்தவகையில் இதுவொரு வழமையான விஜயமாகும்.

இந்நிலையில் நிஷா தேசாய் பிஷ்வாலின் இலங்கை விஜயத்தையும் ஜெனீவா மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரையும் தொடர்புபடுத்துவது அவசியமற்றதாகும்.

ஜெனீவா மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரை பொறுத்தமட்டில் இலங்கையானது சிறந்த முறையில் அதற்கு தயாராகி வருகின்றது. குறிப்பாக் யுத்தத்தின் பின்னரான இலங்கையில் நாங்கள் பல்வேறு முன்னேற்றங்களை வெளிப்படுத்தியுளளோம்.

மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் 25 ஆம் திகதி ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கை தொடர்பான தனது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இம்முறை மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடருக்கு இலங்கையிலிருந்து அமைச்சர்கள் மட்ட தூதுக்குழு கலந்து கொள்ளும் என அறிய முடிகின்றது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நாட்டின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து மதிப்பீடுகளை மேற்கொண்டிருந்தார். அந்த வகையிலேயே மார்ச் மாதம் 25 ஆம் திகதி தனது இலங்கை குறித்த அறிக்கையை பேரவையில் முன் வைக்கவுள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான விசேட அறிக்கையாளர் டாக்டர் சலோகா பெயானி இம்மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வடக்கில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்ந்திருந்ததுடன் மனித உரிமைப் பேரவைக்கு அறிக்கையையும் சமர்ப்பிக்கவுள்ளார்.

இது இவ்வாறு இருக்க ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக இம்முறை கூட்டத் தொடரில் பிரேரணை முன் வைக்கப்பட்டால் அதற்கு எதிராக ஆதரவைத் திரட்டும் முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக தெரிகின்றது.

மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு அமைச்சர்களை அனுப்பி இலங்கையின் முன்னேற்ற நிலைமைகள் குறித்து விளக்கி ஆதரவை திரட்டும்முயற்சியில் அரசாங்கம் ஈடுபடவுள்ளதாக இராஜதந்திர மட்டங்களிலிருந்து தெரிய வருகின்றது. (அ-2)



ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரி கிளையின் இவ்வாண்டுக்கான ஆரம்ப நாள் நிகழ்வில் கிளை முகாமையாளர் நா. பரமேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதனையும் வங்கியின் நீண்ட கால வாடிக் கையாளரின் பிறந்த நாள் நிகழ்வை வங்கியாளர்கள் கொண்டாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# நாடாளுமன்றத்தின் புலி வைகோ; திருச்சி மாணவர்கள் புகழாரம்

நாடாளுமன்றத்தின் புலி வைகோ என்று திருச்சியில் நடந்த மாணவர்களுக்கான ம.தி.மு.க.வின் பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில் மாணவர்கள் புகழ்ந்தனர்.

நாடாளுமன்றத்தில்வைகோ எனும் தலைப்பில் ம.தி.மு.க. மாணவர் அணி தமிழகம் முழுக்க நடத்தி வந்த மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் காலை திருச்சி தேவர் மஹாலில் நடைபெற்றது.

இவ்விழாவில் உரையாற்றிய மாணவர்கள் கூறுகையில்,

13 முறை தனிமனித மசோதாவை கொண்டு வந்த முதல் மனிதர் வைகோ.

ஈழ மக்களுக்கான நெருக்கடி காலங்களில் என் இனத்திற்காக தூக்கு தண்டனையை ஏற்க தயார் என அப்போது ராஜீவ் காந்தியிடம் கூறியவர்.

இந்திரா காந்தியால், காங்கிரஸின் 200 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ ஒருவருக்கு சமம் என பாராட்டு பெற்றவர். விடுதலை புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை விதிக்கப்பட்ட போதும் எங்கள் வைகோ மட்டும்தான், நேற்றும் ஆதரித்தேன் இன்றும் ஆதரிக்கிறேன், நாளையும் ஆதரிப்பேன் என்று கூறினார் அந்தளவுக்கு தைரியமான மனிதர் வைகோ.

இந்திய நாடாளுமன்றத்தின் 60 ஆண்டு கால வரலாறறில், 24 வருடம் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று வீர உரையாற்றியவர்.

வைகோ நாடாளுமன்றத்தின் புலி. டில்லியின் அதிகாரத்தை அடக்கவும், தமிழினத்திற்கு துரோகம் இழைக்கும் டில்லிக்கு பாடம் கற்பிக்கவும் வைகோ தலைமையில் பெரும் படை டில்லி நாடாளுமன்றத்திற்கு அணி வகுக்க பொதுமக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று வைகோ மீண்டும் நாடாளுமன்றத்திற்கு செல்லும் நாள் தான், நாடாளுமன்றம் மறுமலர்ச்சி பெறும் நாள்" என்று கூறினார்கள். (அ-2)

# கொள்ளையில் ஈடுபட்ட கப்டனுக்கு தண்டனை

(கொழும்பு)

வங்கிக் கொள்ளைச் சம்பவமொன்றில் ஈடுபட்ட இராணுவ கப்டன் ஒருவருக்கு இராணுவ நீதிமன்றினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் குறித்த இராணுவக் கப்டன், முஸ்லிம் பெண் ஒருவரைப் போன்று வேடமிட்டு கண்டி மஹய்யாவ, தேசிய சேமிப்பு வங்கிக் கிளையொன்றில் கொள்ளையடித்துள்ளார். இராணுவ சுயேட்சைப் பிரிவு கப்டன் ஒருவருக்கு எதிராகவே இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் இராணுவத்தை இழிவுபடுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த இராணுவக் கப்டன் சேவையிலிருந்து நீக்கப்பட்டதுடன், இரண்டாண்டு கால கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# புதிய முறையில் நாணயக்குற்றி

பத்து ரூபா நாணயக்குற்றிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இலங்கையின் சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இந்த நாணயக்குற்றிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரித்தான தொல்பொருள், கலாசார, பொருளாதார, சுற்றாடல், சமய மற்றும்சமூக விடயங்களை உள்ளடக்கிய வகையில் நாணயக்குற்றி வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரு பத்து ரூபா நாணயக்குற்றி கொழும்பு நகரத்தை பிரதிபலிக்கும் வகையிலான உருவப்படமொன்றை உள்ளடக்கியுள்ளது.

கொழும்புத் துறைமுகம் மற்றும் நகர காட்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ-2)

# கூட்டமைப்பின் பழிவாங்கும் எண்ணமே அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கின்றது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

அரசாங்கத்தை வீழ்த்துவதே சம்பந்தனின் இலக்கு. சர்வதேசம் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பே காரணம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதன் ஆதரவினை ஐக்கிய தேசியக் கட்சிக்கே வழங்கும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை விரட்டுவதே இவர்களின் குறிக்கோள் எனவும் அவ் இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தியாவிற்கு செல்வதற்கான காரணமென்ன? இலங்கை அரசாங்கத்தை வீழ்த்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவிரவாதக் கொள்கையினை மீண்டுமொருமுறை இலங்கையில் பரப்புவதே சம்பந்தனின் இலக்கு. இதனை விரைவில் செயற்படுத்தவே சம்பந்தன் சர்வதேச விஜயங்களையும் சர்வதேச தலைவர்களுடனான சந்திப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஏனைய சர்வதேச நாடுகளும் இலங்கையுடன் பகைத்துக் கொணடமைக்கும் இன்று சர்வதேச அழுத்தம் இலங்கை மீது காணப்படுவதற்கும் தமிழ் தேசியக் கூட்டமைபபு பிரதான காரணமாகும்.

அவர்களின் பழிவாங்கும் நோக்கமே இன்று சிங்கள அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கின்றது.

மேலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை வீழ்த்தி ஆட்சியை பிடிப்பதே ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் உள்ள குறிக் கோள்களாகும். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு முழு ஆதரவினையும் வழங்கும் என் பதில எவ்வித சந்தேகமும் இல்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியினை கவிழ்த்து சர்வதேச தலையீடு களை இலங்கைக்குள் கொண்டு வந்து இந்த நாட்டை சீரழிக்கவே இவர்கள் முயறசிக்கின்றனர்.

இதற்கான தீர வினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டையும் பெள த்த சிங்கள மக்களையும் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தேர்தலில் எதிரொலிக்குமா இலங்கைத் தமிழர் பிரச்சினை...?



இந்திய நாடாளுமன்றத் தேர்தல் அடுத்து ஐந்து மாதங்களுக்குள் நடக்கவுள்ளது.

எதிர்வரும் மே மாத இறுதியில் புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு, புதுடெல்லியில் புதிய அரசாங்கம் அமைய வேண்டும். அதற்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி இன்னமும் குறிக்கப்படாது போனாலும், எல்லாக் கட்சிகளுமே தேர்தலுக்கான தயார்படுத்தல்களில் இறங்கிவிட்டன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இந்த தேர்தல் முக்கியமானதொன்றாக அமையவுள்ளது. காரணம் இதற்கு முன்னர், 2009ஆம் ஆண்டு மே மாதம் இந்திய நாடாளுமன்றத்துக்கு தேர்தல் கட்டம் கட்டமாக நடந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தான், முள்ளிவாய்க்காலில் இறுதிப்போர் நடந்தது.

அப்போது தேர்தல் பிரசாரங்களில், இலங்கைத் தமிழர் பிரச்சினை மிகத் தாராளமாகவே எதிரொலித்தது.

வன்னியில் நடந்துகொண்டிருந்த போரின் அவலங்கள் தாராளமாகவே வாக்கு வேட்டைக்காக பயன்படுத்தப் பட்டன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், அதற்குப் பின்னர் நடந்த சட்டமன்றத் தேர்தலிலும், இலங்கைத் தமிழர் பிரச்சினை முக்கியமானதொரு விவகாரமாகவே பேசப்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழ்நாட்டு தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை என்று கூறுவது வழக்கம்.

ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களை மண்கவ்வச் செய்தது இலங்கைத் தமிழர் பிரச்சினை தான் என்பதை மறுக்க முடியாது.

நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் கோட்டையாக கருதப்படும் சிவகங்கைத் தொகுதியில், அவர் சிறியளவிலான வாக்கு வித்தியாசத்தில் தான் தப்பிப் பிழைக்க முடிந்தது.

கடந்த தேர்தல்களை விடவும் இந்த முறை இலங்கைத் தமிழர் பிரச்சினை அதிகளவில் எதிரொலிக்கும் வாய்ப்புகளை அவதானிக்க முடிகிறது.

அதனால்தான், மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டின் தமது முன்னாள் கூட்டணிக் கட்சியான தி.மு.கவைத் திருப்திப்படுத்துவதற்காக அவ்வப்போது, வளைந்து கொடுத்து வந்தது.

பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசுக்கு ஏமாற்றமளிக்கும் வகையில் கூட இந்தியா நடந்து கொண்டது. பொதுநலவாய மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வராதது கூட, அரசியல் ரீதியானதொரு முடிவு தான். இவையெல்லாம், தமிழ்நாட்டில் காங்கிரஸ் தோற்றுவிடக் கூடாது என்பதற்காகவே எடுக்கப்பட்ட முடிவுகள்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டணிகள் இன்னமும் இறுதியாகாத போதிலும், தமிழ்நாட்டில் உள்ள நிலைமைகளைப் பார்க்கும் போது, குறைந்தது நான்கு முனைப் போட்டி நடப்பதற்கான வாய்ப்புகள் தெரிகின்றன.

தனித்தே போட்டி, யாருடனும் கூட்டணி வைப்பதில்லை என்ற ஜெயலலிதாவின் உறுதியான முடிவும், காங்கிரசுடனோ, பா.ஜ.கவுடனோ கூட்டணி வைப்பதில்லை என்ற கருணாநிதியின் அறிவிப்பும், கிட்டத்தட்ட நான்கு முனைப்போட்டிக்கான களத்தை திறந்து விட்டுள்ளது.

இந்த இருபெரும் திராவிடக் கட்சிகளும் பிரதான தேசியக் கட்சிகளுடனான கூட்டணியைத் தவிர்க்க எடுத்துள்ள முடிவினால், காங்கிரசும், பா.ஜ.கவும் தமக்கென தனயான கூட்டணிகளை அமைக்க வேணடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், ப்ா.ஜ.க., ம.தி.மு.க., பா.ம.க., உள்ளிட்ட கட்சிகளைக் கொண்ட ஒரு பலமான கூட்டணியை உருவாக்கும் முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெரும்பாலும் இது சாத்தியமாகக் கூடிய வாய்ப்புகளும் தெரிகின்றன. இதற்குள் தே.மு.தி.கவை கொண்டு வரும் முயற்சிகளும், பேச்சுக்களும் நடக்கின்றன. அது வெற்றி பெற்றால், இதன் பலம் மேலும் அதிகரிக்கும்.

அதேவேளை, இன்றைய நிலையில், காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்ள எந்தவொரு தமிழ்நாட்டுக் கட்சியுமே முன்வரவில்லை. இதற்குக் காரணம் இலங்கைத் தமிழர் பிரச்சினை தான்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி துரோகம் செய்துவிட்டதாக தமிழ்நாட்டின் எல்லாக் கட்சிகளுமே கருதுவதால்-குற்றம்சாட்டுவதால் தான், இன்று வரை அந்தக் கட்சியால் எந்தக் கூட்டணிக்குள்ளேயும் செல்ல முடியாமல் தனித்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்போது காங்கிரஸ் கட்சி விஜயகாந்தின் தே.மு.தி.கவை தம்முடன் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், காங்கிரஸ் கட்சி ஓரளவுக்குத் தப்பிப் பிழைக்க காரணமே தே.மு.தி.க. தான்.

கடவுளுடன் தான் கூட்டணி என்று கூறிக் கொண்டு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட தே.மு.தி.க., கணிசமான வாக்குகளை பிரித்தது, காங்கிரஸ் கட்சிக்கு சாதகமானது.

இந்தமுறை தே.மு.தி.கவை இணைத்துக் கொண்டால், வெற்றி பெறமுடியாவிட்டாலும், கௌரவமான தோல்வியையாவது தழுவலாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் எதிர்பார்க்கலாம்.

ஆனால், தே.மு.தி.கவை தம் பக்கம் இழுப்பதிலும் தி.மு.கவும், பா.ஜ.கவும் கூட அக்கறை காட்டுகின்றன. எந்தப் பக்கத்துக்கு செல்வது என்று முடிவெடுக்க வேண்டிய நிலையில் அந்தக் கட்சி இப்போது இருக்கிறது.

இந்தத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை முக்கியமான ஒன்றாக இருக்கப் போகின்ற அதேவேளை, அது எத்தகைய தாக்கத்தை யாருக்கு ஏற்படுத்தப் போகிறது என்பது முக்கியமான கேள்வியாக உள்ளது.

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக வாக்குகளை தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்கு எல்லாக் கட்சிகளும் முனைகின்றன. இதில் கடைசி இடத்தில் இருப்பது காங்கிரஸ் தான்.

போருக்கு உதவியதில் தொடங்கி, இன்று இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து உறுதியான முடிவை எடுக்க முடியாதது வரை காங்கிரஸ் மீது பெரிய குற்றப்பட்டியல் ஒன்று உள்ளது.

எனவே இலங்கைத் தமிழர் ஆதரவு வாக்குகள் காங்கிரசுக்கு கிடைக்கவே போவதில்லை.

ஆனால், இப்போது, காங்கிரஸ் தவிரந்த மற்றெல்லா அணிகளும் இலங்கைத் தமிழர் ஆதரவு வாக்குகளை பங்கிட்டுக் கொள்ளப் போகின்றன.

இலங்கைத் தமிழர்களுக்காக போராட்டங்கள் பலவற்றை நடத்திய இடதுசாரிகளும், சட்டமன்றத் தீர்மானங்களை நிறைவேற்றிய அ.தி.மு.கவும் ஒரு அணியில் இருக்கின்றன.

டெசோ அமைப்பு மூலம் குரல் கொடுததும், திருமாவளவன், சுப.வீரபாண்டியன், கி.வீரமணி போன்ற இலங்கைத் தமிழர் ஆதரவு கட்சிகள், அமைப்புகளை தம் பக்கம் வைத்திருப்பதன் மூலமும் தி.மு.கவும் அந்த வாக்குகளை பங்கிடப் போகிறது.

பா.ஜ.கவுடன் இணையும் நிலையில் உள்ள, ம.தி.மு.கவும் ,பா.ம.கவும் கூட இலங்கைத் தமிழர் விவகாரங்களில் அதிக ஈடுபாடுள்ள கட்சிகள்.

ஆக,இந்த மூன்று அணிகளுக்கும் இலங்கைத் தமிழர் ஆதரவு வாக்குகள் பிரிந்து போகும் நிலை காணப்படுகிறது.

இவை தவிர, காங்கிரசை தோற்கடிப்பதே தமது குறி என்று செயற்படும் சீமானின் நாம் தமிழர் கட்சி எந்த முடிவையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

மேலும், இலங்கைத் தமிழர் ஆதரவு அமைப்புகள், எந்தக் கட்சிக்கு சார்பாக நடந்து கொள்ளப் போகின்றன என்பதை அறிய சிலகாலம் செல்லும்.

இந்த தேர்தலில், இலங்கைத் தமிழர் பிரச்சினை முக்கியமானதொரு விவகாரமாக உருவெடுப்பதற்கு வாய்ப்புகள் நிறையவே இருந்தாலும், இந்தப் பிரச்சினை எந்தளவுக்கு தேர்தலில் தாக்கத்தைச் செலுத்தியது என்பதை உறுதியாக கணிக்க இப்போது உருவாகும் கூட்டணிகள் உதவப் போவதில்லை.

இலங்கைத் தமிழர் ஆதரவு வாக்குகள் பிரிந்து போகும் என்பதால், இதனைத் தெரிந்து கொள்ள முடியாமற்போகக் கூடும்.

ஆனால் இலங்கைத் தமிழர் ஆதரவு எந்தளவுக்கு உள்ளது என்பதை கணக்கிட முடியாது போனாலும், இலங்கைத் தமிழருக்கு எதிரான கட்சிகளை தமிழக மக்கள் எந்தளவுக்கு வெறுக்கிறார்கள் என்பதை காங்கிரசுக்கு விழப்போகும் வாக்குகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம். ஏனென்றால், இது ஒன்று தான், இலங்கைத் தமிழருக்கு எதிரான கட்சியாக இன்னும் முத்திரை குத்தப்பட்டுள்ளது.


-தொல்காப்பியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 புதுவருட பலன்கள்

## புதிய திருப்பங்கள் பலவற்றை கொடுக்கிறது இந்தப் புதுவருடம்

# தனுசு



**மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்**

**வழிபாட்டின் மூலமே வளர்ச்சி கூடும் ஆண்டு! அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்வதில் அசகாய சூரர்கள் என்று பெயர்பெற்ற தனுசு இராசிநேயர்களே!**

புதுவருடம் உங்கள் ராசியிலேயே பிறக்கிறது. அற்புதப் பலன்களை அள்ளி வழங்கப் போகிறது. புத்தாண்டு பிறக்கும் பொழுது உங்கள் ராசிநாதன் குரு வக்ரம் பெற்று உங்கள் ராசியையே பார்க்கிறார். சப்தமாதிபதி புதன் உங்கள் ராசியிலேயே சஞ்சரித்து பரிவர்த்தனை அடைகிறார்.

புத-ஆதித்ய யோகத்தோடு இந்த புதுவருடம் பிறக்கிறது. உங்கள் ராசிநாதன் குருவிற்கு பகை கிரகமான சுக்ரன் வக்ரம் பெறுகிறார், இது நன்மைதான், மறைமுக எதிர்ப்புகள் மாறும். குறை கூறியவர்கள் விலகுவர். அரைகுறையாக நின்ற பணி தொடரும்.

10இல் செவ்வாய் பலம் பெறுகிறார். தனாதிபதி சனி உச்சம் பெற்று, ராகுவோடு இணைந்திருக்கிறார். அதுவும் லாப ஸ்தானத்தில் உச்சம் பெறுவது யோகம

**சிவல்புரி சிங்காரம்**

தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் 5-ம் இடத்தில் கேது அமர்ந்து புதிய ஆண்டு பிறக்கிறது. பொதுவாக உங்கள் ராசிநாதன் குரு என்பதால் நேர்மை, நீதிக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள்.

எதையும் எதிர்பார்க்காமல் பிறருக்கு உதவி செய்யும் நல்ல குணம் உங்களுக்கு உண்டு. பாசத்தோடு பழகும் நீங்கள் பக்திக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். நேர வழியில் செல்ல வேண்டுமென்று எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு இந்த 2014 புத்தாண்டு எப்படியிருக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**1.1.2014 முதல் 12.6.2014 வரை**

புதுவருடம் 2014 ஆம் ஆண்டு தொடகத்தில் உங்கள் ராசிநாதன் குரு வக்ரம் பெறுகிறார். எனவே, தேக நலனில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள அதிக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். கொடுக்கல்-வாங்கல்கள் சிறப்பாக இருந்தாலும் மன நிம்மதி கொஞ்சம் குறைவாகவே இருக்கும். குரு, புதன் பரிவர்த்தனை யோகம்பெற்று சஞ்சரிப்பதால் மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும். கல்யாணக் கனவுகள் நனவாகும்.

சுக்ரனின் வக்ர இயக்கத்தால் வழக்குகளில் வெற்றி கிடைக்கும். இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த புது முயற்சிகள் கைகூடும். மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். 10 இல் செவ்வாய் சஞ்சரிப்பது யோகம தான். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு தலைமைப் பதவியும், புதிய பொறுப்புகளும் வந்து சேரும்.

என்றைக்கோ வாங்கிப்போட்ட இடம் இப்பொழுது விற்பனையாகி கணிசமான தொகை கைக்கு வந்து சேரும். ராகு-கேதுக்களின் ஆதிக்கம் கூடுதலாக இருப்பதால் பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனுக்குடன் தீர்வு காண்பது நல்லது. வெளிநாட்டுப் பயணங்களை தள்ளி வைக்கும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு உருவாகும்.

**ஏழரைச் சனியின் தொடக்க காலம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்தார் சனி பகவான். புதுவருடக் கடைசியில் ஏழரைச் சனியின் ஆதிக்கத்தில் தொடங்குகிறது. எனவே இனிய மாற்றங்கள் ஏராளமாக இனி வரப் போகின்றன. புனிதப் பயணங்களும், பொருளாதாரநிலை உயர்வும் வரும். மங்கல நிகழ்ச்சிகளில் தங்கு தடைகள் அகலும். தொழில் மாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம் உருவாகும் நேரமிது.

ஏழரைச் சனி முதல் சுற்றும், மூன்றாவது சுற்றும் நடப்பவர்கள் எச்சரிக்கையோடு செயற்படவேண்டும். ஏற்ற பரிகாரங்களையும் செய்து கொள்ள வேண்டும். பொங்கு சனியின் ஆதிக்கம் நடப்பவர்கள் பொருள் குவிப்பர், புகழ் குவிப்பர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

விருச்சிக ராசியில் சஞ்சரிக்கும் சனி விருத்தியம்சத்தையே உங்களுக்கு கொடுக்கும். தனாதிபதியாகவும் சனி இருப்பதால் இக்காலத்தில் தன வரவு தடையின்றி வந்து சேர சனிக்கிழமை தோறும் எள் தீபம் ஏற்றி சனி பகவானை வழிபாடு செய்யுங்கள். சனி கவசம் பாடுவது நல்லது.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**



புதுவருடத்தில் குருவின் வக்ரமும், சனியின் வக்ரமும் நிகழவிருக்கிறது. சில கிரகங்கள் வக்ர காலத்தில்தான் நன்மையைச் செய்யும். பலம்பெற்றிருக்கும் நேரத்தில் பலன் கொடுக்காது. அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது குருவின் வக்ரம் உங்களுக்கு நன்மை தரும். கொடுக்கல்-வாங்கல்கள் சிறப்பாக இருக்கும். நண்பர்களின் ஆதரவு கூடும். தொழிலை விரிவுபடுத்தப் பார்ப்பீர்கள்.

அதேநேரத்தில் சனியின் வக்ரம் சஞ்சலத்தைக் கொடுக்கும். சகோதர ஒற்றுமையை குறைக்கும். தன வரவு வந்தாலும் மறு நிமிடமே செலவாகும். வழிபாடு இக்காலத்தில் வளர்ச்சியைக் கூட்டும்.

**தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புதுவருடம் புதிய திருப்பங்கள் பலவற்றையும் கொடுக்கும் விதத்திலேயே அமையப்போகிறது. மதிப்பும், மரியாதையும் உயரும். மக்கட் செல்வங்களுக்கு மணமாலை சூட்டிப் பார்க்கப் போகிறீர்கள். பழைய கடன்கள் தீரும். புதிய தொழிலில் ஈடுபாடுகள் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தைப் பற்றி விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது.

குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் அமையும். விலகிச்சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். தாய்வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் மாறும். பணியாளர்கள் பக்கபலமாக இருப்பர்.

ராகுப்பெயர்ச்சிக்குப் பின்னால் உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகலாம். சேமிப்பு அதிகரிக்கும். சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு விரயங்கள் ஏற்படலாம். ராகு- கேது பரிகாரமும், அனுமன வழிபாடும் ஆனந்த வாழ்க்கையை வழங்கும.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

இதுவரை உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்தில் ராகுவும், 5ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரித்து வந்தார்கள். இந்தப் புது வருடத்தில் ஜூன் மாதம் 21ஆம் திகதி கன்னி ராசியில் ராகுவும், மீன ராசியில் கேதுவும் பின்னோக்கிச் செல்கிறார்கள். இதனால் பெரிய மாற்றங்கள் வந்து சேரப் போகிறது. 10இல் ராகு சஞ்சரிப்பதால் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களுக்கான முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

ராகுவின் பார்வை பலத்தால் இட மாற்றம், ஊர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இலாகா மாற்றங்கள் உருவாகலாம். அஷ்டம ஸ்தானத்தை ராகு பார்ப்பதால் ஆரோக்கிய பாதிப்புகள் குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு வந்து கொண்டே இருக்கலாம். தொழிலில் பழைய பங்குதாரரர்கள் விலகலாம். மாற்றினத்தைச் சார்ந்த புதிய பங்குதாரர்களை இணைத்து செயற்படுவீர்கள்.

கேதுவின் பலத்தால் வீடு, நிலம் வாங்குவதிலிருந்த பிரச்சினைகள் அகலும. வெளிநாட்டு முயற்சியில் தாமதம் ஏற்படலாம். குடும்பத்தில் திடீர்; திடீரென மனக்கசப்புகள் உருவாகி மறையும்.

**குருப் பெயர்ச்சி பலன்கள்!**

புதுவருடத்தில் குரு உச்சம் பெற்று சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிநாதன் உச்சம்பெறுவது யோகம்தான். என்றாலும், அஷ்டமத்தில் அல்லவா உச்சம் பெறுகிறார். எனவே, எதிர்பாராத மாற்றங்கள் வந்து சேரும். இல்லம் கட்டி குடியேற வேண்டும் அல்லது இல்லம் வாங்க வேண்டுமென்ற எண்ணம் இப்பொழுது நிறைவேறப் போகிறது.

ஜூன் 13ஆம் திகதி பெயர்ச்சியாகும் குரு அதன் பார்வை பலத்தால் 2, 4, 12 ஆகிய இடங்களைப் புனிதப்படுத்துகிறார். எனவே, அந்த இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறும். கூடுதல் லாபம் தொழிலில் கிடைக்கும். எடுத்த செயல்களில் வெற்றி காண்பீர்கள். வாகனம் வாங்கும் வாய்ப்பு கிட்டும். நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். சேமிப்பு சீட்டுகளில் சேர்ந்து பணம் கட்டி வருபவர்களுக்கு திடீரென பரிசு கிடைத்து பணவரவு வந்து சேரப்போகிறது.

சண்டை, சச்சரவில் சிக்கித் தவித்த குடும்ப உறவினர்கள் இப்பொழுது சமரசமாகி தங்கள் கடமைகளை உணர்ந்து பணிபுரிவர். தொழில் முன்னேற்றம்



காணும் நேரமிது. அடிமைத் தொழிலிருநது விலகி ஏதேனும் ஒரு புதிய தொழில் தொடங்கும் திட்டத்தை உருவாக்குவீர்கள்.

அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். தொல்லை கொடுத்த எதிரிகள் விலகலாம். அரசியல் மற்றும் பொதுநல ஈடுபாடு கொண்டவர்களுக்கு செல்வாக்கு மேலோங்கும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் அதிகரிக்கும். மதிநுட்பத்தால் மக்கட் செல்வங்களின் கல்வி முன்னேற்றத்திற்கு வித்திடுவீர்கள். அயல்நாட்டில் கல்வி கற்று அதிக புகழ் சேர்க்க வேண்டுமென்று விரும்பும் உங்கள் குழந்தைகளின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். இடமாற்றம், நாடுமாற்றங்கள் ஒரு சிலருக்கு இனியதாக அமையும். இக்காலத்தில் திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டால் அசையாத சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும்.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் வியாழன் என்பதால் வியாழக்கிழமை தோறும் குருதெட்சிணா மூர்த்தி வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். பிறந்த திகதி மற்றும் கூட்டுத் தொகைக்குரிய எண்களின் ஆதிக்க நாளில் யோக பலம்பெற்ற நட்சத்திரம் சேரும் பொழுது சிறப்பு வழிபாடாக கிழக்கு நோக்கிய தெட்சிணாமூர்த்தியை வழிபட்டு வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளுங்கள்.

**நாளை மகரம்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ் செல்வி அம்மா நல்லதொரு கண்காணி

இந்த நூற்றாண்டின் சைவாலய பரிபாலனத்தில் ஏகப்பிரதிநிதியான விளங்கியவர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார். இவர் மறைந்து 5 ஆண்டுகள் கடந்தோடி விட்டன. நாவலர் பெருமானுக்குப் பின்னர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய சேவையை நாடு நன்கறியும்.

நாவலர் பெருமான் திருக்கேதீஸ்வர சிவாலயத்தை **தேன் பொந்து** என யாழ்ப்பாணத்தை அழைத்தார். கிலமடைந்த கீரிமலைச் சிவன் திருக்கோயில் பற்றி திருப்பணி விஞ்ஞாபனம் செய்தார். முன்னவனார் திருக்கோயில்கள் கண் திறந்தன.

காசியில் தவமியற்றிய பெரியார் கதிர்காமர் ஸ்தாபித்த துர்க்கை அம்பாள் ஆலயம் பூர்வீக வரலாறு கொண்டது. இக்கோயில் நீண்ட காலம்புதுக்குவிப்பாரற்று மறைந்து கிடந்தது. 1965 இல் மகா கும்பாபிஷேகம் கண்டது.

துர்க்கை அம்பாள் கண்விழித்து அனைத்து அடியவர்களுக்கும் திருவருள் பொழிய சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் தவமியற்றினார்.

இன்று துர்க்கை அம்மன் கோயில் சர்வதேச கோயிலாக உருவாகி பன்முக வளர்ச்சிப் பணிகளையும் காண திரிகரண சுத்தியுடன் தொண்டாற்றினார் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா. துர்க்கை அம் மன் கோயில் **ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானமாக** பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது.



யாம் அறிந்த வகையில் யாழ்ப்பாணக் கோயில்களில் பதிப்புப் பணி செய்ய அச்சுக்கூடம் இல்லை. எனவே நாவலரைப் பின்தொடர்ந்த அம்மையாரும் திருமகள் அழுத்தகத்தைக் கொள்வனவு செய்து பதிப்புப் பணியில் வெற்றி கண்டார்.

நாவலர் பெருமானும் தமிழ்தந்தை சி.வை. தாமோதரம்பிள்ளையும் நூற்பதிப்புப் பணிக்கு ஆற்றிய தொண்டை சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரும் தொடர்ந்தார்.

அம்மையார் கொள்வனவு செய்த திருமகள் அழுத்தகம் தேவஸ்தானப் பணிகளுடன் நின்றுவிடாது சைவ மணம் கமழும் ஆன்மீக சஞ்சிகையான அருள்ஒளி மாதந்தோறும் வெளியிட்டு தேவஸ்தானத்துக்கு பெருமை சேர்த்தவர்.

சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் சைவாலயப் பணி, திருக்கோவில் திருவீதி தூய்மைப்பணி, அன்னதானப் பணி, சமூக மேம்பாட்டுப் பணி என்பன ஒரு புறமானவை. மறுபுறமாக **ஏழைகளின் சிரிப்பில்** இறைவனைக் காணலாம் என்ற உயர்ந்த சிந்தனையை மேற்கொண்டு **துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை** நிறுவினார்.

நாவலருக்கு **ஐந்தாண்டுத்திட்டம்** எத்துணை முக்கியத்துவமோ அதே போன்று ஆதரவற்ற பெண் பிள்ளைகளின் கல்விக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தார். அம்மையாரின் தூரநோக்குச் சிந்தனைகள் கால வெள்ளத்தால் அழியாதவை. அம்மையாரின் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது.

இவற்றுக்கெல்லாம் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் ஒரு சிறந்த கண்காணிப்பாளராக விளங்கினார். திருமூலர் தமது திருமந்திரத்தில் (2067, 2072) உள்ள பாடல்களில் **கண்காணி** என்ற சொல்லுக்கு உயர்ந்த இலக்கணம் வகுத்துள்ளார்.


இவ்வரிய பாடல்களின் முதல் வரிகள் **கண்காணியாகவே கையகத்தே எழும். கண்காணியில்லென்று கள்ளம் பல செய்வார்** கூறுகின்றன.

எனவே, ஈழத்துச் சைவாலயங்களுக்கெல்லாம் சிவத்தமிழ்செல்வி அம்மையார் போன்றதொரு **கண்காணி அம்மா** வேண்டப்படுவதை இன்றைய சைவஉலகம் உணராமல் இல்லை.

துர்க்கை அம்பாளும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரும் எங்களுக்கு கண்காணியாக இருந்து அருள்புரிந்து வழிகாட்டுவதை இன்று சிந்திப்போமாக.

**கா.சிவபாலன்**

# சுகவாழ்வுத் தோட்டம்



மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அவசியமான பயிர்களை அதாவது மூலிகைகள், மரக்கறிப் பயிர்கள், பழ மரங்கள், அழகுத் தாவரங்கள் போன்றவற்றை தமக்கு ஏற்ற நிலப்பரப்பில் தமக்கு உரிய வசதியுடன் வீட்டு அங்கத்தவர்களுடன் இணைந்து குறைந்த செலவில் தத்தமது விருப்பு, ரசனை என்பவற்றிற்கு அமைவாக அமைக்கப்படுவது சுகவாழ்வுத் தோட்டம் எனக் கருதலாம். (வரையறை செய்யலாம்)

### பொதுநோக்கு

ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புதல், எவ்வேளையிலும் தரமான, நிறைவான உணவை பெற்றுக் கொள்ளல், மூலிகைப் பல்வகைமையை அழிவிலிருந்து பாதுகாத்தல்

### பிரத்தியேக நோக்குகள்

வீட்டு அழகை மேம்படுத்தல், மூலிகைகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல், தூய மரக்கறி, பழவகைகளை பெற்றுக் கொள்ளல், இலைக் கறிகளை நாளாந்தம் இலகுவில் பெற்றுக் கொள்ளல், பண விரயத்தினைத் தவிர்த்தல், பொழுது போக்கு, மன அழுத்தத்தினை நீக்க உதவுதல், சுத்தமான, சுகமான,சுவாசத்தினை பெற்றுக் கொள்ளல், மற்றையவர்களுடன் நல்லுறவை மேம்படுத்தல், வீட்டுக் கழிவுகளை தகுந்த முறையில் பயன்படுத்தல், அரிதான இன மூலிகைகளை மக்களின் கவனத்துக்கு கொண்டு வந்து அதை அழிய விடாது பாதுகாக்க உதவுதல், மருத்துவ உற்பத்திக்கு தரமான மூலிகைகளை தொடர்ச்சியாக வழங்க உதவுதல், தரமான விதைகளையும் தரமான மூலிகைகளையும் உற்பத்தி செய்ய உதவுதல், மண் வளத்தை அதிகரிக்கச் செய்தல்

**அமைக்கும் போது கவனிக்கப்பட வேண்டியவை:**

அமைப்பவரின் சொந்த விருப்பமும் இரசனையும், தோட்டத்தின் பரிமாணம் அதாவது இடப்பரப்பு. (இடப்பரப்பு குறைவாகவும் தாவரங்களின் அளவு இடப்பரப்புக்கு பொருந்தாமலும் இருப்பின் அவற்றை பொருத்தமான சாடிகளில் வளர்த்தல் நன்று. இப்படி சாடிகளில் வளர்த்தால் தேவைக்கேற்ற படி அவற்றை இடம்மாற்றவும் இலகுவாக இருக்கும். சாடிகளின் அடியில் துளை/வெடிப்பு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மேலதிக நீர் தேங்கி அழுகி விடும்), உள்ளடக்க விரும்பும் தாவரங்கள், அமைப்பவரின் திறமைகளும் வளங்களும். (சிறந்த நீர்ப்பாசனம்,மண்ணின் அமைப்பு, பசளையிடல், காற்றோட்டம், சூரிய வெளிச்சம், பருவ கால தாவரங்கள் (கோடை கால தாவரம். மழைகாலத் தாவரம். பனிகால தாவரம்) அவருக்கு கிடைக்கவிருக்கும் நேரம், இதிலிருந்து அவர் பெற விரும்பும் நன்மைகள்.

**தாவரங்களை விருத்தி செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டியவை:**

மென்மையான நீர் வடியக்கூடிய மண் தேவை, வித்துக்களை மண்ணின் ஆழத்தில் புதைக்கக் கூடாது, நீரை இலேசான தாரையாக மட்டும் விடவேண்டும்

**தாவரங்களை விருத்தி செய்யும் முறைகள்**

பதி வைத்தல், வெட்டிய தண்டு துண்டங்கள், ஒட்டுதல் முறை, நாற்று மேடை அமைத்தல்

**நாற்று மேடை அமைக்கும் முறை**

இதற்கு மண்மேடை பயன்படும். இதில் ஒரு பங்கு மணல், இர ண்டு பங்கு மண். ஒரு பங்கு இலைச் சருகு. ஒரு பங்கு பொடி செய்த தொழு உரம் பயன்படுத்தப்படும்.

விதைக்கும் முன் கலவை கட்டி முட்டியாக இல்லாமல், கனைகள் இல்லாமல் நல்ல மென்மையான பதத்தில் இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

மிகச் சிறிய விதைகளைத் தூவியும், சற்றுப் பெரிய விதைகளை மண்ணில் வரிசையாக ஒவ்வொன்றாக விதைத்தும், செடிகளை உற்பத்தி செய்யலாம்.ஒவ்வொரு பகுதியிலும் எந்த விதை விதைக்கப்பட்டது என்பதை எழுதி மாட்டல் சிறந்தது.

விதைத்தவுடன் பூவாளி கொண்டு நீர் விடுவது நல்லது.

மிகச் சிறிய விதைகள் விதைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் கீழ் இருந்தவாரியாக நீர் பாய்ச்சுவது சிறந்தது. காரணம் மேலே தூவப்பட்ட விதைகள் பூவாளித் தண்ணீரால் மாறிமாறி அடித்து ஒரே பக்கம் செல்லாது இருக்கும்.

விதைகளை விதைத்த பின் ஒரு Plastic Paper கொண்டு மூடி வைத்து விதை முளைத்ததும் மூடியதை அகற்றி மிதமான நிழலில் வைக்க வேண்டும்.

மிக நெருக்கமான நாற்று இருப்பின் முதல் இரு உண்மை இலை விட்ட பிறகு களைந்து விட வேண்டும்.

3, 4 இலைவிட்ட பிறகு கவனமாக பிடுங்கி பயிரிட வேண்டும்.

மிக லேசான விதைகளை மணலுடன் கலந்து தூவுவதனால் சீராக விழுந்து முளைக்கும்.

### சேதனப்பசளை தயாரிப்பு

குவியல் முறை, குழிமுறை, பீப்பா முறை, கம்புச்சட்டக முறை, இவற்றில் பொதுவாக குவியல் முறை பயன்படுத்தல் இலகுவானது. எனினும் பீப்பா முறை- நகர்ப்புறத்திற்கு சிறந்தது, மூலப் பொருட்கள்.

**இலை குழைகள், விலங்குக் கழிவுகள், ஏனைய வீட்டுக் கழிவுகள்**

படிமுறை: இடம் தெரிவு செய்தல், இடத்தினை ஒழுங்கு படுத்தல், மூலப் பொருட்களை எடுத்தல்

இலை, குழை, புல் போன்றன முதலாம் படை விலங்குக் கழிவுகள் இரண்டாம் படை இலைகுழை புல் போன்றன மூன்றாம் படை இதே போல மாறிமாறி படைகளை ஏற்றி குறைய 4.5 அடி வரை உயரமாக அமைக்கலாம். இடையிடையே நீர் ஊற்றி ஈரப்பதனை பரிசீலிக்கவும்.

கிடுகினால் அல்லது கறுப்பு நிற பொலித்தீன் மூலம் மூடி வைக்கவும். ஒரு மாதத்தின் பின் புரட்டவும். இவ்வாறு ஒவ்வொரு மாத இடை வெளியில் 3 முறை புரட்டி 3 ஆம் மாத முடிவில் கூட்டெருவைப் பெறலாம்.

### பீடை நோய்க்கட்டுப்பாடு

ஆரோக்கியமான தாவரம் பெற வேண்டின் பீடைகள் அகற்றப்பட வேண்டும். நோய்கள் விலக்கப்பட வேண்டும். இதற்காக இரசாயன மருந்துகள் பாவிப்பதை தவிர்த்து இயற்கை பீடை கொல்லிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

### பீடை நாசினி தயாரிக்கும் முறைகள்:

வேப்பெண்ணெய், உள்ளிக் கரைசல்,சீர்மைக் கிழுவை, சாணகக் கரைசல், விலங்குகள் உண்ணாத இலைகள் ஒன்றோ பலவோ எடுத்து அரைத்து ஒரு வாரம் பானையில் அடைத்து வைத்த பின்னர் பாவித்தல், ஒரு கப் வேப்பங்கொட்டையை அரைத்து நீரில் கரைத்துப் பாவித்தல், ஒரே தாவரத்தினை ஒரே இடத்தில் திரும்ப திரும்ப நடாது மாறி மாறி நடுவதனாலும் பீடைகளை கட்டுப்படுத்தலாம்.

செவ்வந்தி மரத்தினையும் இடையிடையே நடுவது சிறந்தது.

**தோட்டத்தில் சாதாரண பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் மூலிகைகள்:**

வெற்றிலை, கற்பூர வள்ளி, துளசி, இஞ்சி, வசம்பு, எலுமிச்சைப்புல், சிறுகுறிஞ்சா, பிரண்டை, கரிசலாங்கன்னி, தூதுவளை, அகத்தி, மொசுமொசுக்கை, வல்லாரை, கறுத்தைப்பூக்கொடி, மணித் தக்காளி, கறிவேப்பிலை, சண்டி, முடக் கற்றான், வட்டத்துத்தி, முசுட்டை, முல்லை, கொவ்வை, வாதநா ராணி, வாதமடக்கி, தவசிமுருங்கை, புதினா, தும்பை, வண்டு கொல்லி, பவள மல்லிகை, றோசா, செவ்வரத்தை, சிற்றரத்தை, மஞ்சள், கறிமுருங்கை, பெருங் குறிஞ்சா, கற்றாளை, விஸ்ணு கிராந்தி, நெல்லி, ஆடாதோடை, பாவட்டை, மருதோன்றி, எலுமிச்சை சாறணை, சதைக் கரைச்சான், திருநீற்றுப் பச்சை போன்றன.

இவற்றைவிட மரக்கறிகள், பழ மரங்கள், கீரை, இலைக்கறி வகைகள் போன்றனவும் நடப்பட வேண்டும். மரக்கறிகளை நட்டு அவை பூக்க ஆரம்பிக்கும் போது அதன் கன்றுகளை நட ஆரம்பிப்பதனால் தொடர்ச்சியாக எல்லா வகையான மரக்கறிகளையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமையும்.

இவ்வாறு தோட்டத்தினை உருவாக்கி பெறப்படும் உற்பத்திகளில் இருந்து உணவுகளை தயாரித்து உண்பதால் தொற்றா நோய்களான நீரிழிவு, குருதிஅழுத்தம், மூட்டுநோய்கள், குடற்புண் போன்ற நோய்களிலிருந்தும் வேறு பல நோய்கள் வராதும் சுகதேகிகளாக வாழ முடியும்.எனவே இவ்வாறு மேற்கூறப்பட்ட வழிமுறைகளை கையாண்டு சிறந்ததொரு வீட்டுத் தோட்டத்தினை வீடுகள் தோறும் அமைத்து சுகவாழ்வை நோக்கி பயணிப்போமாக.

**நன்றி:- அருள்ஒளி**

Health Care
## மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்தில் எதிர்க்கட்சியினர் கண்டன ஊர்வலம்


(பாங்காக்)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆதரவு கோரி எதிர்க்கட்சியினர் நேற்றுமுன்தினம் கண்டன ஊர்வலம் நடத்தினர்.

தலைநகர் பாங்காக்கில் நடைபெற்ற குறித்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.


அந்நாட்டில் அறிவிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தலை தடுத்து நிறுத்துவதற்காக எதிர்வரும் 13 ஆம் திகதி தாங்கள் நடத்தவிருக்கும் பாங்காக் முழு அடைப்புக்கு பொது மக்களின் ஆதரவைத் திரட்டும் நோக்கில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டதாக போராட்டம் நடத்தி வரும் ஜனநாயக சீர்திருத்தக் குழு தெரிவித்துள்ளது.

இது போன்ற மேலும் இரு ஊர்வலங்களை இன்றும் நாளை மறுதினமும் நடத்த எதிர்க்கட்சியினர் திட்டமிட்டுள்ளனர். (2)



அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி பாலஸ்தீன நாட்டிற்கு விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டார். இதன்போது ஜனாதிபதி மகமூத் அப்பாசை ரமல்லா நகரில் வைத்து அவர் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# மத்திய கிழக்கு நாடுகளுக்கு போப்பாண்டவர் சுற்றுப் பயணம்



போப்பாண்டவர் பிரான்சிஸ் எதிர்வரும் மே மாதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

போப்பாண்டவர் வசிக்கும் வாடிகன் நகர தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் மக்கள் அவரது ஆசீர்வாதக் கூட்டத்திற்காக் கூடியிருந்தனர்.

மக்கள்முன் அவர் தோன்றிய போது கூறுகையில்,எதிர்வரும் மே மாதம் 24,25,26 ஆம் திகதிகளில் தான மத்திய கிழக்கு நாடுகளான இஸ்ரேல், வெஸ்ட் பேங்க் மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளுக்கு சென்று வர இருப்பதாகத் தெரிவித்தார். இவ்வாண்டிற்கான போப்பாண்டவரின் முதல் தீர்மானிக்கப்பட்ட முதல் பயணம இதுவாகும்.

தனது மூனறு நாட்கள் கொண்ட பயணத்தின்போது அம்மான், பெத்லஹெம், ஜெருசலேம் ஆகிய இடங்களுக்கு போப் செல்லவுள்ளார்.

இவரது பயணத்தின் முக்கிய குறிக்கோள் ஜெருசலேமில் உள்ள பழமைவாதக் கிறிஸ்தவர்களின் தலைவராக விளங்கும் அட்டங் கோராவை போப் ஆறாவது பால் சந்தித்த 50 ஆவது ஆண்டு நினைவைக குறிப்பதாகும்.

மத்திய கிழக்கு நாடுகளான இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனிய நாடுகளிடையே அமைதி ஏற்பட வேண்டி போப் நீண்டகாலமாக அழைப்பு விடுத்து வருகினறார்.

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி இந்த அமைதி பேச்சுவார்த்தைக்காக கடந்த மூன்று தினங்களாக இரு நாட்டுத் தலைவர்களிடமும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த நிலையில் போப்பின் இந்த விஜயம் குறித்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. தனது கிறிஸ்துமஸ் தின செய்தியிலும் இஸ்ரேல், பாலஸ்தீனிய நாடுகளுக்கிடையே அமைதி ஏற்படவேண்டி போப் குறிப்பிட்டிருந்தார். (2)

# மசூதி நெரிசலில் சிக்கி 14 பேர் பலி; 10 பேர் காயம்



சீனாவில் மசூதி நெரிசலில் சிக்கி 14 பேர் பலியாகினர். 10 பேர் காயமடைந்தனர்.

சீனாவில்நிங்ஸியா மாகாணத்தில் உள்ள ஸிஜி நகரில் உள்ள ஒரு மசூதியில் மத தலைவரின் நினைவு தின நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின்போது அதில் பங்கேற்றவர்களுக்கு பாரம்பரிய சிறப்பு உணவு வழங்கப்பட்டது. எனவே அதை வாங்க கூட்டம் அலை மோதியது. ஒரே நேரத்தில் பலர் முண்டியடித்து சென்றதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

அப்போது ஒருவரை ஒருவர் ஏறி மிதித்தபடி உணவு வாங்கினார் கள். இச்சம்பவத்தில் 14 பேர் பரிதாபமாக பலியாகினர். 10 பேர் காயம் அடைந்தனர்.

அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. (2)

# வங்கதேச நாடாளுமன்ற தேர்தல்; ஆளும் அவாமி லீக் வெற்றி

(டாக்கா)

வங்கதேச நாடாளுமன்ற தேர்தலில் ஷேக் ஹசீனா தலைமையிலான ஆளும் அவாமி லீக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. தேர்தல் நடைபெற்ற 147 தொகுதிகளில் 95 இடங்களில் அக்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை வங்க தேசம் முழுவதும் நிகழ்ந்த தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் பாதுகாப்புப் படைவீரர், தேர்தல் அதிகாரி உள்ளிட்ட 21 பேர் கொல்லப்பட்டனர்.


200இற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. மேலும் 160 வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவு நிறுத்தப்படடது.

ஆயிரக் கணக்கான போராட்டக்காரர்கள் பெற்றோல் குண்டுகள் மற்றும் தீப்பந்தம் கொண்டு வாக்குச் சாவடிகளையும் வாக்குச் சீட்டுகளையும் கைப்பற்றி கொளுத்தினர்.

மீதமுள்ள 153 தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படவுளளனர். (2)

# சுதந்திர தமிழீழம் மலர்வதை கண்மூடுவதற்குள் பார்க்க வேண்டும்

## ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ சூளுரை



ம.தி.மு.க. மாணவர் அணி சார்பில் திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

**(திருச்சி) ஈழப்போர் முள்ளிவாய்க்காலோடு முடிபு பெற்றுவிட்டது என நினைக்க வேண்டாம். முள்ளிவாய்க்கால் மூலம் புதிய பரிணாமம் பெற்று இருக்கிறது. தமிழீழம் அமைப்பதற்கு உலக அளவில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். சுதந்திர தமிழீழம் மலர்வதை நான் கண்மூடுவதற்குள் பார்க்க வேண்டும் என ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வாஜ்பாய் இந்திய பிரதமராக இருந்த போது இலங்கைக்கு இராணுவ உதவியோ, பணத்திற்காக ஆயுதமோ விற்பனை செய்யமாட்டோம் என அறிவித்தார்.

அவர் பிரதமராக இருக்கும் வரை இந்த உறுதிமொழியை பாதுகாத்தார். ஆனால் 2004ஆம் ஆண்டு மன்மோகன்சிங் பிரதமர் ஆனதும் இலங்கை இராணுவத்திற்கு உதவி செய்ய ஆரம்பித்தார்.

இலஙகையில் நடைபெற்ற இறுதிப் போரில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு மன்மோகன்சிங், சோனியா காந்தி ஆகியோர் தான் காரணம்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உலக மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொண்டு நான் பேசியபோது இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான். இதற்கு காரணமானவர்களை மக்கள் தீர்ப்பாயம் கூண்டில் நிறுத்தி தண்டிக்க வேண்டும் என குறிப்பிட்டேன்.

ஈழப்போர் முள்ளி வாய்க்காலோடு முடிபு பெற்றுவட்டது என நினைக்க வேண்டாம். முள்ளி வாய்க்கால் மூலம் புதிய பரிணாமம் பெற்று இருக்கிறது. போராளிகளுக்கு என்றுமே தோல்வி இல்லை. தமிழீழம் அமைப்பதற்கு உலக அளவில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

சுதந்திர தமிழீழம் மலர்வதை நான் கண்மூடுவதற்குள் பார்க்க வேண்டும்.

இலஙகையில் நடைபெற்ற இனப்படுகொலையை தட்டிக்கேட்க தயங்க கூடாது, ஊழலற்ற அரசியலை வென்றெடுக்க மாணவர்கள், இளைஞர்கள் ஒன்று திரள வேண்டும். இது மாணவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி என்பதால் பாராளுமன்ற தேர்தல் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

எந்த களத்தில் இருந்தாலும் நாங்கள் முழுமன வலிமையோடு இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். (2)

# பூட்டான் மன்னர் இந்தியா வருகை

(புதுடில்லி)

பூட்டான் மன்னர் ஜிக்மி கேசர் வாங்சுக் மற்றும் அவரது மனைவி ராணி ஜெட்சன பேமா ஆகியோர் 5 நாட்கள் அரசு முறைப் பயணமாக இந்தியாவுக்கு நேற்றைய தினம் வருகை தந்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, துணைத் தலைவர் ஹமீது அன்சாரி, பிரதமர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியா காந்தி, வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே மற்றும் பலரையும் பூட்டான் மன்னர் வாங்சுக் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

பூட்டான் மற்றும் இந்தியா இடையேயான நல்லுறவை மேம்படுத்தும் விதமாக இந்தப் பயணம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. (2)

# இந்தியாவுடனான நட்புறவானது பிற நாடுகளைவிட உயர்வானது

## மாலைதீவு ஜனாதிபதி புகழாரம்

(புதுடில்லி)

இந்தியா மிகவும் மதிப்புமிக்க நாடாகவும், சீனா நெருங்கிய நட்புறவைக் கொண்ட நாடாகவும் திகழ் கின்றன என்று மாலை தீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீன தெரிவித்துள்ளார்.

இரு மாதங்களுக்கு முன்னர் மாலைதீவு ஜனாதிபதியாகப் பதவி யேற்ற அப்துல்லா யாமீன், பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.


அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்தியாவுடன் உணர்வு பூர்வமான உறவுகளை மாலைதீவு கொண்டிருப்பதாக இந்தியத் தலைவர்களிடம் உறுதியளிக்கிறேன்.

சீனாவுடன் நெருக்கமான உறவுகளை மட்டுமே கொண்டிருக்கிறோம் அவ்வளவுதான்.

ஆனால், இந்தியாவுடனான உறவானது பிற நாடுகளைவிட உயர்வானது.

பிரதமர் மன்மோகன் சிங்குடன் ஆலோசனை நடத்திய போது, இந்தியப் பெருங் கடல உள்ளிட்ட பிராந்திய பகுதிகளின் பாதுகாப்பு குறித்து இந்தியா முக்கிய கவலை கொண்டுள்ளதை அறிந்தேன்.



இந்த விவகாரத்தில், இந்தியாவைப் போன்ற அணுகுமுறையைத்தான் மாலைதீவு அரசும் கொண்டுள்ளது.

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள கடற் கொள்ளையர் மற்றும் தீவிரவாதத்துக்கு எதிரான போர் போன்றவற்றில், இரு நாடுகளும் ஆலோசனைகளை பரிமாறிக் கொள்வதற்கு நாங்கள் சம்மதித்திருக்கிறோம்.

இந்தியாவின் உணர்வுகளை நாங்கள் பகிர்ந்து கொண்டுள்ளோம்.

இந்தியாவை முழுமையாக ஆதரிக்கிறோம். எங்கள் நாட்டில் அந்நிய முதலீடு விவகாரத்தில், இந்தியாவுடன் சற்று சிக்கலான வழியைக் கொண்டிருந்தோம்.

ஆனால், தற்போது அந்த சிக்கல்களுக்கு தீர்வுகாணுவதற்கான நேரம் வந்திருக்கிறது.

இது எளிதாக நிறைவேறும், மீண்டும் சரியான பாதையில் செல்ல முடியும், என நம்புகிறேன் என்று ஜனாதிபதி அப்துல்லா யாமீன் தெரிவித்தார்.

மாலைதீவின் பல பகுதிகளில் சீனா கொண்டுள்ள ஆதிக்கத்தால், கடல் வழிப் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா கவலை கொண்டிருந் தது.

இந்நிலையில், இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அப்துல்லா யாமீன் இந்தியர்களுக்கு சாதகமாக கருத்து தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச ஊழலை தடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

தமக்கு கீழ் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இலஞ்ச, ஊழல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த இயலாத உயரதிகாரிகளுக்கெதிராக புதிய சட்டவாக்கங்களை நடைமுறைப்படுத்த சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் சிவில் சமூகத்தினருக்கு சிறந்த சேவையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவாரச்சி இத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

பயாகலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.சி.பி.ஜே. குலசிங்ஹ நேற்றுமுன்தினம் முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ பேச்சாளர் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நிர்வாக நடத்தையில் திருப்தியின்மை காரணமாகவே பொலிஸ்மா அதிபர் என்.கே. இளங்கோனின் பணிப்புரையின் பேரில் பயாகலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

பயாகலை பொலிஸ் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் 10 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் வாங்கிய குற்றசாட்டின் பேரில் கடந்த 4ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

விபத்தொன்றிற்கு காரணமான முச்சக்கர வண்டியை விடுவிப்பதற்காக இவர் இந்த இலஞ்சத்தினைப் பெற்றிருந்தார்.

இச்சம்பவம் குறித்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அசட்டையீனமாக செயற்பட்டார் என்ற கார ணத்தினால் இவர் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி பதவியிலிருந்து நீக்கப்பட்டதுடன் பம்பலப்பிட்டியிலுள்ள பொலிஸ் அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### சோமு வடிவேல்

(முன்னாள் பலநோக்கு கூட்டுறவுசங்க முகாமையாளர்)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமு வடிவேல் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு 93/12, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.



### மாதர் ஆறுமுகம்

அனலைதீவை பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 4 ஆம் வட்டாரம் காளிகோவிலடியை வசிப்பிடமாகவும், கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மாதர் ஆறுமுகம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.



### திருமதி.நகுலாம்பிகை ஸ்ரீவரதராசா

அராலி தெற்கை பிறப்பிடமாகும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலாம்பிகை ஸ்ரீவரதராசா 4 ஆம் திகதி சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.




### திருமதி.சாந்தநாயகி இரட்ணசோதி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தநாயகி இரட்ணசோதி 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை காலை 8 மணிக்கு Moden assembley hall (Tudor Drive, Moden Surrey SM44PJ) என்னும் முகவரியில் நடைபெறும்.

# இராணுவ முகாம்களை அகற்ற கோருவது நியாயமற்றது



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அவ்வாறு முகாம்களை அகற்றுமாறு கோருவது நியாயமற்றது என ஜே.என்.பியின் உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை இலக்கு வைத்து விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

முதலமைச்சர் தனது கடமையை மட்டுமே செய்ய வேண்டுமெனவும் தேவையற்ற விடயங்களில் தலையீடு செய்யக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் காரணமாகவே இராணுவ முகாம்கள் அதிகரிக்கப்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டே இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# பன்முகத்தன்மையின் சவால்கள்! கொழும்பில் விசேட கருத்தரங்கு

தெற்காசியாவில் பன்முகத்தன்மையின் சவால்கள் எனும் தலைப்பில் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வாளர்கள் கலந்து கொள்ளும் விடேச கருத்தரங்கு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெற்காசிய கொள்கை மற்றும் ஆய்வு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந நிகழ்வு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

அமைதியான ஒத்திணாங்கிய வாழ்வு, மத சகிப்புத்தன்மை பன்மை சமூகங்கள் போன்ற தலைப்புக்களில் உரைகள் இடம்பெறவுள்ளன.

மதங்களுக்கு இடையில் பிணக்குகளை உருவாக்கும் செயற்பாடுகளை எவ்வாறு தவிர்ப்பது என்பது தொடர்பாக கருத்தரங்கில் விரிவாக ஆராயப்படும். (அ-2)

# முகம்மது நபியின் மீலாதுன் விழா பாடசாலைகளில் 13 ஆம் திகதி

(கொழும்பு)

மீலாதுன் நபி விழா கொண்டாட்டங்களை எதிரவரும் 13 ஆம் திகதி நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் கொண்டாடுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை கொண்டாடும் முகமாக இடம் பெறும் மீலாதுன் நபி விழா கொண்டாட்டங்களை கல்வி அமைச்சின் 2011/33 இலக்கமும் 2011.12.12. திகதி மற்றும் 2013/29 இலக்கமும் 2013.10.12 திகதியும் கொண்ட சுற்று நிருபங்களுக்கு அமைய ஒரே நாளில் 2014.01.13 ஆம் திகதி நடத்துமாறு கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் (திட்டமிடல் கொள்கை மற்றும் மீளாய்வு) எஸ்.யூ. விஜேரத்ன நாட்டின் சகல முஸ்லிம் பாடசாலைகளுக்கும் சுற்று நிருப மூலம் அறிவித் துள்ளார்.

இது தவிர அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், கல்விச் சமூகம் சார்ந்தோரை வைத்து சிறந்த முறையில் இஸ்லாமிய கலை, கலாசார விழுமியங்களை பாதுகாக்கும் வகையிலான நிகழ்ச்சிகளை நடத்துவதோடு சிறந்த பாடசாலை சுற்றாடல் களையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# தேவை ஏற்பட்டால் அரசுக்கு எதிராக குரல் கொடுப்பேன்

## ஹிருணிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

துமிந்த பற்றிய உணர்வுகளை பகிரங்கமாக சொல்வதே அருவருப்பானது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருணிக்கா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதனை மக்கள் நன்கு அறிவார்கள். கனவில் கூட துமிந்தவுடன் எந்தவிதமான உறவுகளைப் பேணவும் விரும்பியதில்லை.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படவில்லை எனவும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒருவருக்கு எதிராக குரல் கொடுத்து வருவதாகவும்' அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் தேவை ஏற்பட்டால் அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கவும் தயங்கப் போவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து அரசியல் பேசவில்லை எனவும், எதிர்கால கல்வி நடவடிக்கைகள் குறித்து பேசியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)





சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் வேணாவில் பாடசாலை மைதானத்தில் கலைமகள் கலாமன்ற கலைஞர்களால் மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்ற போது...

# புதையல் தேடிய எட்டுபேர் கைது

(கொழும்பு)

புதையல் தேடும் நோக்கில் வெலிவெள, கரமெட்டி பிரதேசத்தில் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் புதையல் அகழ்விற்கு பயன்படுத்திய பொருட்கள், உபகரணங்கள் மற்றும் கார், மூன்று மோட்டார் சைக்கிள்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் சூரியவெள, பரவகும்புக்க, முல்அட்டியாகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளத்தோடு ஆடும் போது தகிடு தத்தோம் ஆகாது.
கால தூக்கி போடும்போது கவனம் மாறக்கூடாது.
*- சக்கரவர்த்தி திருமகள்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

## இதோ! ஒரே மேடையில் பரதமும் கண்டி நடனமும்-2

**செயலாளர் :** உங்கள் அனைவருக்கும் சுருக்கமான வணக்கம். உங்கள் அனைவரையும் தனித்தனியாக பெயர், பதவி கூறி வணக்கம் சொல்லவேண்டும். ஆனால் யாரை முதலில் கூறுவது என்பது தெரியாததன் காரணமாக சுருக்கமாக வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

முதல்வரை முதலில் விழித்து வணக்கம் கூறுனால் அது ஆளுநருக்கு கோபத்தைத் தரும். அதேபோல் ஆளுநருக்கு முதல் வணக்கம் செய்தால் முதல்வருக்கு சினம் தரும்.

ஆகையால் இலங்கை அரசியல் யாப்பின் எந்தப் பிரிவும் ஆளுநருக்கோ முதல்வருக்கோ முதலில் வணக்கம் கூறவேண்டும் என்று இன்னமும் தெளிவுபடுத்தாததன் காரணமாக, இவ்விடத்தில் இருந்து நான் தப்பித்துக் கொள்ளும் வகையில் அனைவருக்கும் பொதுவான வணக்கத்தைக் கூறினேன்.

வணக்கம் கூறுவதிலேயே சுணக்கம் காட்ட வேண்டிய நிலைமையில் எங்கள் செயலாளர் பதவிகள் இருக்கின்றன. அப்படியானால் நாம் சொல்லுகின்ற வார்த்தைகள் மிகவும் நிதானமாக இருப்பது மிகமிக அவசியம்.

எனக்கோ இப்போது பத்தாமிடத்து வியாழன். அது பதியை விட்டு கிளப்பும் என்று சொல்வார்கள். அந்தப் பத்தில் வியாழன்தான் எல்லாச் செயலாளர்களும் அமைதியாக இருக்க என்னைக் கொண்டு வந்து இந்த இடத்தில் நிறுத்தியுள்ளது. பரவாயில்லை இன்று எனது பதவிக்கு ஆபத்து என்றால், நாளை உங்களுக்கும். ஆகையால் நான் அதுபற்றி கவலை கொள்ளப் போவதில்லை.

இருந்தும் எங்கள் சார்பில் சில விடயங்களை கூறித்தான் ஆகவேண்டும். நாங்கள் இதுவரை காலமும் கண்டி நடனத்திற்கு ஆடிப் பழகியவர்கள் என்பது உண்மைதான் அதற்காக பரத நாட்டியத்தில் எங்களுக்குப் பற்று இல்லை என்று யாரும் நினைத்துவிடக்கூடாது.

பரதநாட்டியம் இப்போதுதான் அரங்கேறியுள்ளது. எங்களுக்கு அனுபவம் இல்லாத கண்டி நடனத்திற்கு ஆட்டம் போட்ட நாங்கள் பரதத்தையும் விரைவாகக் கற்றுக் கொள்வோம். ஆனாலும் ஒரு சிக்கல் உண்டு. அதாவது மேடை ஒன்றாயினும் நட்டுவாங்கம் இரண்டு. எனவே யாருக்காக ஆடுவது என்பதுதான் இந்தச் சிக்கல்.

பரவாயில்லை இடையிடையே எங்கள் மாகாணப் பணிப்பாளர்களையும் பாடவைத்து அவர்களையும் ஒருவாறு இதற்குள் இழுத்து எங்கள் சுமையை ஓரளவு குறைக்க முற்படுவோம்.

மாகாணப் பணிப்பாளர்கள் தங்கள் சுமையை மாவட்ட, வலய அதிகாரிகளிடம் ஓரளவேனும் சுமத்தும் பொருட்டு சங்கு, சல்லாரி, சேமக்கலம் என்பவற்றை அவர்களிடம் ஒப்படைத்து சுருதிப் பிழையை அந்தச் சப்தங்கள் மூலம் சமம் செய்வார்கள்.

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை என்பன மிகவும் உன்னதமானவை என்று அறிந்து அந்தப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த நாம் இப்போது பரதத்திற்கும் கண்டி நடனத்திற்கும் ஆடவேண்டிய நிர்ப்பந்தம்.

என்ன செய்வது? பென்சன் எடுக்கும் வரை எடுத்த கோலத்திற்காக ஆடித்தானே ஆக வேண்டும். குரங்கிற்கு வாழ்க்கைப் பட்டால் மரமேறாது இருக்கமுடியுமோ?

ஒவ்வொரு விடிகாலைப் பொழுதும் இன்று பரதம் கூட்டம் வைக்குமா? அல்லது கண்டி நடனம் அவசர கூட்டம் போடுமா? என்பது தெரியாமலே விழித்தெழுகிறோம்.

*(இக் கற்பனை நாடகம் நாளையும் தொடரும்...*

# தமிழக மீனவர் பிரச்சினை ராஜிதவை சந்திக்க ஏற்பாடு



மீனவர் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய மத்திய அரசின் அழைப்பின்பேரில் இந்தியா செல்லவுள்ள இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, தமிழ்நாட்டு மீனவர்களை டில்லியில் சந்தித்துப் பேசுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர் அமைப்பின் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த சந்திப்புக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசகர்களில் ஒருவரும் இந்திய- இலங்கை மீனவர்கள் சங்க அமைப்பின் இலங்கை இணைப்பாளருமான எஸ்.பி. அந்தோனிமுத்து தெரிவித்தார்.

இதற்கிடையே, தமிழகத்தில் எதிர்வரும் 20-ம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ள இலங்கை-இந்திய மீனவர்கள் இடையிலான பேச்சுவார்த்தைக்காக இலங்கைத் தரப்பினருக்கு இன்னும் உத்தியோக பூர்வமான அழைப்பு கிடைக்கவில்லை என்றும் அந்தோனிமுத்து கூறினார்.

எனினும் தமிழகம் சென்று பேச்சுவார்த்தை நடத்துவதற்கான மீனவர் பிரதிநிதிகள் குழுவினரை இலங்கை மீன்பிடித்துறை அமைச்சு ஏற்பாடு செய்துள்ளதாகவும் இந்திய- இலங்கை மீனவர்கள் சங்க அமைப்பின் இலங்கை இணைப்பாளர் தெரிவித்தார்.

"டில்லியில் தமிழக மீனவர்கள் இலங்கை அமைச்சரை சந்திப்பதற்கான திகதி இன்னும் குறிக்கப்படவில்லை என்றபோதிலும், இந்த சந்திப்பு நிச்சயம் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துள்ளன" என்றார் அந்தோனிமுத்து.

அமைச்சர் ராஜித சேனாரத்ன அடுத்த வாரம் இந்தியா செல்வார் என்றும் இலங்கை மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசகர் கூறினார்.

இதனிடையே, இலங்கையிலிருந்து இந்தியா செல்ல ஏற்பாடாகியுள்ள இலங்கை மீனவர் பிரதிநிதிகள் 15 பேரில் 10 பேர் வரை வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மீனவர் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் இடம்பெறவில்லை என்று அண்மையில் வெளியாகியிருந்த செய்திகளில் உண்மை இல்லை என்று மீன்பிடித்துறை அமைச்சு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளமையை அவர் சுட்டிக்காட்டினார். (எ-11)

# போதைப் பொருள் கடத்தலுக்கு பர்தா பயன்படுத்தப்படுகிறது

## பொது பல சேனா குற்றச்சாட்டு

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலின் தேசிய சின்னமாக பர்தா மாறி விட்டது. இலங்கையில் உடனடியாக நிகாப் முறையினை தடை செய்யாவிடின் நாட்டிற்கே பிரச்சினையாகும் என பொது பல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் கருத்து தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இன்று முஸ்லிம் அடையாளங்களை வைத்தே போதைப பொருள் கடத்தல்கள் இடம்பெறுகின்றன. குறிப்பாக முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தா, ஹபாயா ஆடைகளை அணிந்து கொண்டே இலங்கைக்குள் போதைப்பொருட்களை எடுத்து வருகின்றனர்.

முஸ்லிம்களை சாட்டி ஏனையோர் இவ்வாறு செயற்படுவதனால் முஸ்லிம் மதத்திற்கும் அச் சமூகத்தினருக்கும் அவப் பெயரை ஏற்படுத்துகின்றது.

அதேபோல் முஸ்லிம் தீவிரவாத கொள்கை உடையவர்கள் இவ்வாறு செயற்படுவதனால் இலங்கையில் ஏனைய மதத்தவர்களுடன் வாழும் முஸ்லிம் மக்களையும் தவறான எண்ணத்தில் சித்திரிக்கும் நிலை காணப்படுகின்றது.

மத கொள்கைகளை விடவும் தேசிய பாதுகாப்பே முக்கியமாகும். பௌத்தர்கள் இந்துக்கள் எவ்வாறு வாழ்கின்றனரோ அதேபோல் முஸ்லிம்களும் வாழ வேண்டும்.

இலங்கையில் இன்று அதிகளவிலான போதைப்பொருள் கொள்கலன்கள் சிக்குவதற்கும் அரசியலில் குழப்பத்தினை ஏற்படுத்துவதற்கும் முஸ்லிம் தீவிரவாதமே பிரதான காரணமாகும்.

மத்திய கிழக்கு நாடுகளுடன் உறவுகளை வைத்திருக்கும் இலங்கை முஸ்லிம்கள் அந் நாடுகளில் இருந்து போதைப்பொருட்களை வாங்கி இலங்கையில் இளைஞர்களின் மத்தியில் பரப்புகின்றனர்.

முஸ்லிம்களின் நிகாப் பர்தா ஆடைகளையும் மத்திய கிழக்கில் இருந்து வரும் முஸ்லிம்களையும் தடை செய்ய வேண்டும். (எ-11)

# இந். மீனவர்கள் 143 பேருக்கு விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

(திருகோணமலை)

இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நாகை மாவட்ட 111 மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது முறையாக நேற்று திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 11ஆம் திகதி கோடியக்கரைக்குத் தென்கிழக்கே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்கள் 111 பேரை எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படையினர் கைது செய்து அவர்களது 15 படகுகளுடன் கொண்டு சென்றனர்.

பின்னர் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட மீனவர்களை கடந்த 26ஆம் திகதி வரை காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து சிறையில் அடைக்கப்பட்டனர்.

பின்னர் ஆறாம் திகதி வரை மீனவர்களின் விளக்கமறியல் நீட்டிக்கப்பட்டது.

இதேவேளை மேலும் இந்திய மீனவர்கள் 32 பேரும் நேற்று திருகோணமலை நீதவான் ரீ.சரவணராஜா முன்னிலையில் அஜர் படுத்தப்பட்டனர். இவர்களுக்கான விளக்கமறியலும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

காரைக்காலில் இருந்து மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற இவர்கள் 32 பேரும் கடந்த ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி கிழக்கு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (எ-11)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### எப்படிச் சொன்னாலும் பலனுண்டு



❖ பணக்காரன் வீட்டு வேலைக்காரி அந்த வீட்டின் வேலைகளை செய்தாலும், அவளுடைய சிந்தனையெல்லாம் தன் வீட்டின் மீதே இருக்கும். எஜமானனின் குழந்தைகளை எல்லாம் தன் குழந்தையாகப் பாவித்தாலும், அக் குழந்தைகள் தனக்கு சொந்தமானவர்கள் அல்ல என்பதை அவள் உள்மனம் நன்கு அறிந்திருக்கும். அதுபோல, உலக வாழ்வில் ஈடுபட்டாலும் இறைவனே நமக்கு சொந்தமானவன் என்னும் உள்ள உறுதியோடு வாழ வேண்டும்.

❖ மனம் பால் போன்றது. அதனைத் தண்ணீராகிய உலகத்துடன் கலந்தால் இரண்டும் உடனே கலந்து விடும். முதலில் பாலைக் காய்ச்சி, உறை விட்டு தயிராக்கினால் கடைந்து விடலாம். கடைய கடைய தயிரிலிருந்து வெண்ணெய் உண்டாகும். வெண்ணெயை நீரில் வைத்தால் அது நீருடன் கலப்பதில்லை. மிதக்க தொடங்கி விடும். அதுபோல், பக்தியாகிய ஞானத்தை கடைந்தெடுத்தால் உலகமாகிய நீரில் மிதக்கலாம். உலகத்துடன் கலக்காமல் தனித்து நிற்கும் வலிமை உண்டாகும்.

❖ தெரிந்து சொன்னாலும், தெரியாமல் சொன்னாலும், தன்னறிவில் சொன்னாலும், அறியாமல் சொன்னாலும், எந்த நிலையில் சொன்னாலும் பகவான் நாமத்தைச் சொன்னதற்கான பலன் ஒருவனுக்கு நிச்சயம் உண்டு. அப்படி சொல்லும்போது மலையளவு பாவங்கள் குவிந்திருந்தாலும், பஞ்சுப்பொதி மீதிட்ட நெருப்பினை போல் எரிந்து சாம்பலாகி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலான் வெற்றிக் கிண்ணம் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்



நெல்லியடி செலான் வங்கி அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் **செலான் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர** கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

30 அணிகள் பங்குபற்றும் இச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய அணிகள்.

குழு ஏ போட்டிகள் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

இடம்பெற்ற முதலாவது போட்டியில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் கலட்டி யுனைட்டட அணியும் மோதின. இதில் 5:1 என்னும் கோல் கணக்கில் டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

பூமகள் விளையாட்டுக் கழக அணியும் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் பூமகள் விளையாட்டுக் கழக அணி 2:1 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணியும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மனோகரா விளையாட்டுக் கழக அணியும் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழக அணியும் மோதுவதாக இருந்த போட்டியில் மனோகரா விளையாட்டுக் கழக அணி வருகை தராமையால் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

வல்வை விளையாட்டுக் கழக அணியும் கருணாகரன் விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் வல்வை விளையாட்டுக் கழக அணி 3:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென்.அன்ரனீஸ் விளையாட்டுக கழக அணியும் நவசக்தி விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:1 என்னும் கோல் கணக்கில் வெற்றி





பெற்றது

குழு பீ போட்டிகள் பொம்மர்ஸ் வி.க மைதானத்தில் இடம்பெற்றுள்ளது.

பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் நெடியகாடு விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி 6:0 என்னும கோல் கணக்கில் வெற்றி பெற்றது .

யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் பருத்தித்துறை யுனைட்டட் விளையாட்டுக் கழக அணியும் மோதுவதாக இருந்த போட்டியில் பருத்தித்துறை யுனைட்டட் விளையாட்டுக் கழக அணி குறித்த நேரத்திற்கு போட்டிக்கு சமுகமளிக்காமையால் போட்டியில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது

விண்மீன் விளையாட்டுக் கழக அணியும் நக்கீரன் விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டி 1:1 என்னும் சமநிலையில் நிறைவடைந்தது. சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது விண்மீன விளையாட்டுக் கழக அணி 4:2 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கலைமதி விளையாட்டுக் கழக அணியும் சுடரொளி விளையாட்டுக் கழக அணியும் மோதுவதாக இருந்த போட்டியில் சுடரொளி விளையாட்டுக் கழக அணி வராமையால் கலைமதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அல்வை பாரதி விளையாட்டுக் கழக அணியும் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் அல்வை பாரதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது

கரவை சுடர் விளையாட்டுக் கழக அணியும் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் கொலின்ஸ் விளையாட்டுக கழக அணி 6:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க-23)

# ஸ்கந்தவரோதயாவை வீழ்த்தி யாழ்.மத்திய கல்லூரி வெற்றி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குமிடையிலான போட்டி அண்மையில் இடம் பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில துடுப்பாடிய யாழ்.மத்திய கல்லூரி தனது முதல் இன்னிங்சில் சகல இலக்குகளையும் இழந்து 234 ஓட்டங்க்ளைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பாக ஜுல் 77 ஓட்டங்களையும், நிறோஜன் 73 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பாக பாலப்பிரஷாந் 3 இலக்குகளையும், ஜனக்ஷன், சுசீதரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்சில் துடுப்பாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 88 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி சார்பாக ஜனக்சன் 34 ஓட்டங்களையும், துவாரகன் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் நிரூபன் 6 இலக்குகளையும், அலன்ராஜ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது 2ஆம் இனிங்சில் துடுப்பாடிய யாழ்.மத்திய கல்லூரி 6 இலக்குகளை இழந்து' 110 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

யாழ்.மத்திய கல்லூரி சார்பில் துடுப்பாட்டத்தில் சௌமித்ரன் 37 ஓட்டங்களையும் டினோஜன் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் பந்துவீச்சில் ஜனக்ஷன் மற்றும் கதேஜன் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இரண்டாம் இன்னிங்சில் 256 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 129 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பாக கதேஜன் 65 ஓட்டங்களையும், ஜனக்ஷன் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி சார்பில் ஜீனியஸ் 3 இலக்குகினையும் மதுஷன் மற்றும் நிரூபன் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தேக அப்பியாச வேலைத்திட்டம்

## நேற்று முதல் அனைத்து பாடசாலையிலும் ஆரம்பம்

நாடு முழுவதுமுள்ள அனைத்துப பாடசாலைகளிலும் நேற்று தொடக்கம் தேக அப்பியாச வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கிணங்க பாடசாலை நாட்களில் தினந்தோறும் காலை 10 நிமிடங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ள இந்த வேலைத் திட்டத்தில் அனைத்து மாணவர்களதும் பங்களிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளதென கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பிலான சுற்றறிக்கை அனைத்து பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

பாடசாலை தேக அப்பியாச வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றையதினம் இப்பாகமுவ மத்தியமகா வித்தியாலயத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் முன்னெடுக்கப் பட்டது.

பாடசாலை மாணவர்கள் ஏதாவதொரு விளையாட்டில் பங்கேற்க வேண்டியது, அமைச்சரவையினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் இலவச கல்வி பெறும் ஒவ்வொரு மாணவரும் காலையில், உடற்பயிற்சி பெறவேண்டியது அவசியமெனவும் கல்வி அமைச்சர் வலியுறுத்தினார். ஆரோக்கியமான உடல் மற்றும் உள வளம் கொண்ட பரம்பரையினரை உருவாக்குவதே மஹிந்த சிந்தனையின் நோக்கம் என்பதன் காரணமாகவே பாடசாலை மாணவர்களுக்கு தேக அப்பியாசம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் கூறினார்.

இந்த வேலை திட்டத்திற்கு அவசியமான வீடியோ இறுவெட்டுகள், இசை நாதம், ஆசிரியர் கையேடு ஆகியன தற்போது அனைத்து பாடசாலைகளுக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதுடன் ஆசிரியர்களுக்கும் இது தொடர்பிலான பயிற்சிகள், வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். (க-2)

# பிரிஸ்பேன் டென்னிஸ்; ஹெவிட் சம்பியன்



பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் போட்டியில், ரோஜர் பெடரரை வீழ்த்தி அவுஸ்திரேலியாவின் லேடன் ஹெவிட சம்பியன் பட்டம் வென்றார்.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் சர்வதேச டென்னிஸ் போட்டி கள் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான ஒற்றையர பிரிவின் இறுதிப் போட்டியில் சுவிட் சர்லாந்தின் ரோஜர் பெடரர், அவுஸ் திரேலியாவின் லேடன் ஹெவிட் மோதினர்.

பெடரரை 6:1, 4:6, 6:3 என்ற செட் கணக்கில் தோற்கடித்து ஹெவிட் சம்பியன் பட்டம் வென்றார். 2010ஆம் ஆண்டுக்கு பிறகு ஹெவிட் பெறும் முதல் ஏடிபி பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய கிண்ண கிரிக்கெட் பாகிஸ்தான் அணி விலகல்?




பங்களாதேஷில் நடைபெற உள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் இருந்து பாகிஸ்தான் விலகப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பங்களாதேஷில் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகள், பெப்ரவரி மாதம் 25-ம் திகதி முதல் மார்ச் 8-ம திகதிவரை நடைபெறுகிறது.

தற்போது பங்களாதேஷில் அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலை நிலவுவதால், ஆசிய மற்றும் இருபது - 20 உலக கிண்ண போட்டிகளில் மாற்றம் செய்யப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகின.

ஆனால் கடந்த 4-ந் திகதி நடந்த ஆசிய கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்தில், போட்டிகள் திட்டமிட்டபடி பங்களாதேஷில் தான் நடைபெறும் என்றும், அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய அணிகளுடன் 5-வது நாடாக ஆப்கானிஸ்தானும் விளையாட உள்ளது.


இந்நிலையில் பாகிஸ்தான் ஆசிய கிண்ண போட்டியில் இருந்து விலகலாம் என்று தெரிகிறது.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இடைக்கால தலைவர் நஜம் சேதி, பங்களாதேஷில் நடைபெறும் ஆசிய கிண்ணப் போட்டியில் பங்கேற்பதில் உத்தரவாதம் இல்லை.

அங்குள்ள நிலைமையில் முன்னேற்றம் காணப்பட்டால் மட்டுமே போட்டிகளில் பங்கேற்பது பற்றி உறுதி செய்யப்படும்.

அங்குள்ள சூழ்நிலையை பொறுத்தே அனைத்து அம்சங்களும் இருக்கும் என்று தெரிவித்துள்ளார். (க)

# இலங்கை டெஸ்ட் அணியில் பெரேரா




ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக் குழாமிலிருந்து லஹிரு திரிமன்ன வெளியேற்றப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக குசால் பெரேரா சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக இடம் பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் போது கனுக்காலில் காயமடைந்த லஹிரு திரிமன்ன, முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை.

இந்நிலையில், லஹிரு திரிமன்ன தனக்கு வழங்கப்பட்டு வந்த சிகிச்சைகளுக்குப் போதிய விளைவுகளை வழங்கியிருக்கவில்லை எனக் குறிப்பிட்ட இலங்கை அணியின் முகாமையாளர் மைக்கல் டீ சொய்சா, அதன் காரணமாக லஹிரு திரிமன்னவை இலங்கைக்கு மீண்டும் திருப்பியனுப்ப முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

லஹிரு திரிமன்னவிற்கு மாற்று வீரராக அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குசால் பெரேரா அறிவிக்கப்பட்டுள்ளார். இதுவரை இலங்கை சார்பாக 19 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 9 இருபது - 20 சர்வ தேசப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ள குசால் பெரேரா, இதுவரை டெஸ்ட் போட்டிகள் எவற்றிலும் பங்குபற்றவில்லை.

ஏற்கெனவே, இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர உபாதை காரணமாக இந்தத் தொடரிலிருந்து இலங்கைக்குத் திரும்புவார் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# ஐ.பி.எல். சீசன் 7




ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி 2008-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டு இதுவரைக்கும் 6 ஐ.பி.எல். போட்டிகள்வரை நடைபெற்று உள்ளன.

சென்னை சூப்பர் கிங்ஸ் 2 முறையும், ராஜஸ்தான் றோயல்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ், டெக்கன் சார்ஜர்ஸ் ஆகியன தலா ஒருமுறையும் கிண்ணத்தைக் கைப்பற்றின.

7-வது ஐ.பி.எல் போட்டி ஏப்ரல் - மே மாதங்களில் நடைபெறுகிறது. இந்தப் போட்டிக்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

பாராளுமன்ற தேர்தல் நடைபெறுவதால் இந்தப் போட்டிக்கான திகதியை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பாராளுமன்ற தேர்தல் காரணமாக 2009-ம் ஆண்டு ஐ.பி.எல். போட்டி தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டது.

தற்போது அதே சூழ்நிலை உருவாகி உள்ளது. இந்தியாவில் பாதி போட்டிகளையும், தென்னாபிரிக்காவில் பாதி போட்டிகளையும் நடத்தலாமா? என்று ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் இலங்கையிலும் சில ஆட்டங்களை நடத்துவது பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாராளுமன்ற தேர்தல் ஏப்ரல் - மே மாதங்களில் நடைபெறலாம் என்று தெரிகிறது. போட்டி நடைபெறும் திகதியில் தேர்தலும் நடைபெற வாய்ப்பு உள்ளது.

இதைத் தொடர்ந்து ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழு இந்த மாத இறுதியில் ஆலோசனை நடத்துகிறது. இந்தக் கூட்டத்தில் ஐ.பி.எல். போட்டி திகதி குறித்து முடிவு செய்யப்படுகிறது. இதை ஐ.பி.எல் தலைவர் ரன்ஜிப் பிஸ்வால் தெரிவித்தார்.

ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழுவில் முனனாள் இந்திய தலைவர்களான ரவி சாஸ்திரி, குண்டப்பா விஸ்வநாத் ஆகியோரும் இடம்பெற்று உள்ளனர். (க)

# இங்கிலாந்து அணியில் கிறிஸ் வோக்ஸ்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் சகலதுறை வீரர் கிறிஸ் வோக்ஸ் சேர்க்கப்பட்டு உள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இவ்வாரம் ஆரம்பமாகவுள்ள ஒருநாள் தொடருக்கான அணியிலேயே அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரை 5-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கோட்டைவிட்டது. இந்நிலையில், இங்கிலாந்து அணி, அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. அதற்கான முதல் போட்டி நாட்டின் மெல்பேர்ன் நகரில் வருகிற ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகிறது. இதற்காக இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் 17-வது வீரராக 24 வயது நிரம்பிய சகலதுறை வீரர் கிறிஸ் வோக்ஸ் சேர்க்கப் பட்டு உள்ளார். (க)

# சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தரவரிசை தென்னாபிரிக்கா தொடர்ந்து முதலிடம்



ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் முடிவடைந்ததை தொடர்ந்து, ஐசிசி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் 133 புள்ளிகள் பெற்று தென்னாபிரிக்கா அணி முதலிடத்தில் உள்ளது.

117 புள்ளிகளுடன் இந்திய அணி இரண்டாம் இடத்திலும், 111 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா அணி மூன்றாம் இடத்திலும் உள்ளது.

ஆஷஸ் தொடரில் 5 டெஸ்டிலும் தோற்றதால் இங்கிலாந்து 107 புள்ளிகளுடன் 4-வது இடத்துக்கு பின்தங்கியது.

பாகிஸ்தான் 102 புள்ளிகளுடன் 5-வது இடத்திலும், இலங்கை 6-வது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் 7-வது இடத்திலும், நியூசிலாந்து 8-வது இடத்திலும், சிம்பாவே 9-வது இடத்திலும், பங்களாதேஷ் கடைசி இடத்திலும் உள்ளன.

இதேவேளை, துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில் ஏபி.டி.வில்லியர்ஸ் தொடர்ந்தும் முன்னிலை வகிக்க, 2-வது இடத்தில் சிவ்நாரின் சந்தர்போலும், 3-வது இடத்தில் றோஸ் ரெய்லரும் காணப்படுகின்றனர்.

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் வேர்ணன் பிலாண்டர், டேல் ஸ்ரெய்ன் இருவரும் முதலிரு இடங்களில் காணப்பட, 3-வது இடத்தில் றியன் ஹரிஸ் உள்ளார்.

சகலதுறை வீரர்களுக்கான வரிசையில் ரவிச்சந்திரன் அஸ்வின், ஷகிப் அல் ஹசன் ஆகிய இருவரும் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளனர். (க)

# சவாலை எதிர்கொள்ள தயாராகவுள்ளோம் - கிளார்க்

தென்னாபிரிக்க அணியின் சவாலை எதிர்கொள்ள தாம் தயாராகவுள்ளதாக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார். உலக கிரிக்கெட்டில் சிறந்த பந்துவீச்சாளர்களை தன்னகத்தே கொண்ட அணியான அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்காவை எதிர்கொள்ளவுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஆஷஸ் தொடரை 5-0 என்ற கணக்கில் வெற்றிகொண்ட பின்னரே மைக்கல் கிளார்க் இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள ஆஸி அணி அந்நாட்டு அணியை எதிர்வரும் 12-ம் திகதி செஞ்சூரியனில் சந்திக்கிறது. ஆஷஸ் தொடரின் வெற்றியை அடுத்து சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தரப்படுத்தலுக்கு அமைய அவுஸ்திரேலிய அணி மூன்றாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. தரப்படுத்தலின்படி முதல் இடத்தில் தென்னாபிரிக்க அணியும், இரண்டாவது இடத்தில் இந்திய அணியும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி மகிந்த...



பலஸ்தீனத்தை அடைந்த ஜனாதிபதி ராஜபக்ஷ, முன்னாள் பலஸ்தீன் ஜனாதிபதி, காலஞ்சென்ற யாசீர் அரபாத்தின் சமாதிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி னார்.

காலஞ்சென்ற யாசீர் அரபாத் 1997ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தபோது ஜனாதிபதி ராஜபக்ஷ முழு குடும்பத்தினரும் அவரை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அமெரிக்க நிபுணரை...

கிழமை வடபகுதிக்குச் செல்லும் அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக் குட்பட்ட வட மாகாண சபையின் முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் சந்திக்கவுள்ளார்.

இந்தத் தகவல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பிலான முக்கிய ஆவணங்களை இலங்கை வரும் போர்க் குற்ற விவகாரங்களுக்கான அமெரிக்கா வின் விசேட தூதுவர் ஸ்ரீபன் ஜே. ராப்பிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரில் கையளிக்கத் தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் தடவையாக இலங்கை வந்த ஸ்ரீபன் ஜே. ராப்பை கொழும்பில் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வன்னியில் இறுதிக் கட்ட போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பான விடயங்களை அவரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இரண்டாவது தடவை யாக இலங்கை வரும் ஸ்ரீபன் ஜே.ராப், நல்லிணக்க ஆணைக்குழுவில் போர்க் குற்றங்கள் தொடர்பில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் ஐ.நாவில் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் அமெரிக்கா நிறைவேற்றியுள்ள இரண்டு தீர்மானங்கள் ஆகியவற்றை இலங்கை அரசு நிறைவேற்றியுள்ளதா என்பதை ஆராயவுள்ளதுடன், போர்க்குற்றங் களுக்குத் தண்டனை விதித்தலில் முக்கிய கவனம் செலுத்துவார் என்று தாம் எதிர்பார்க் கின்றோம் என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரி வித்தார்.

ஸ்ரீபன் ஜே. ராப், இலங்கைப் பயணத் தின்போது அரச உயர் அதிகாரிகள், எதிர்க் கட்சியினர், சிவில் சமூக அமைப்புகளின் பிரதி நிதிகள், நீதித் துறையினர் உள்ளிட்ட பலரை யும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். (எ-11)

## இசை நிகழ்ச்சியில்...

யாவின் சிட்னி நகரில் இந்த இசை நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

இந்த இசைக் கலைஞர் மேடையில் புலிக்கொடியுடன் தோன்றியமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

புலிக்கொடியுடன் மேடையில் தோன்றி யதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை பாராட்டிப் பேசியுள்ளனர்.

போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் புலிகளின் போராட்டம் தொடரும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-11)

## கைதிகளின்...

அனுபவித்து வரும் கைதிகள் தண்டனைக் காலத்தை பூர்த்தி செய்து வீடு திரும்பும் போது அவர்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் இவ்வாறு சிறைச்சாலைகளில் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன.

சிறைச்சாலைகளில் தண்டனை அனுப வித்து வரும் பதினோராயிரம் கைதிகள் மேசன், சவர்க்கார தயாரிப்பு, தச்சு, அச்சு உள்ளிட்ட தொழில்களில் ஈடுபட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## லயன் எயாரில் பயணித்த...

னோவ் 24" ரக உள்நாட்டு பயணிகள் விமானத்தின் நொருங்கிய பகுதிகள் கடந்த மே மாதம் மீட்கப்பட்டன.

வடபகுதி கடற்பரப்பின் இரணைத்தீவுக்கு அண்மையில் கடலுக்கு அடியிலிருந்து இந்த விமானத்தின் சிதைவடைந்த பாகங்கள் மீட்கப்பட்டன. விமானத்தின் என்ஜின், மோட்டர் மற்றும் விமானத்தின் பின்புறப் பகுதிகள், உயிரிழந்தவர்களின் எலும்புக்கூடு கள், ஆடைகள் போன்றன மீட்கப்பட்டுள் ளன. இலங்கை கடற்படைக்குச் சொந்தமாக கப்பலொன்றின் உதவியுடன் இந்த விமானத்தின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பலாலி விமான நிலையத்திலிருந்து கடந்த 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் 29ஆம் திகதி 48 பயணிகள், 6 விமானப் பணியாளர்கள் மற்றும் இரு உக்ரேனிய விமானிகளுடன் இரத்மலானைக்கு போகப் புறப்பட்ட இந்த விமானம், புறப்பட்டு 10 நிமிடங்களின் பின் ராடார் திரையிலிருந்து மறைந்துபோனது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலில் இந்த விமானம் வீழ்த்தப்பட்டதாக நம்பப்படுகின்றது. இருப்பி னும், இதன் மர்மம் இன்னும் பூரணமாகத் துலங்காத நிலையில் மேற்படி விமானத்தின் பாகங்களை கடற்படையினர் கண்டு பிடித்துள்ளர்.

இதற்கமைய மேற்படி கடற்பகுதிக்கு கடந்த மே மாதம் சென்ற அதிகாரிகள் அங்கு ஆய்வுகளில் ஈடுபட்டதை அடுத்து அங்கி ருந்து விமானத்தின் பாகங்களை மீட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## முல்லைத்தீவை...

தின் வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரவிக்கின்றார்.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவித்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் சுட்டிக் காட்டியது.

முல்லைத்தீவில் தொடர்ச்சியாக பலத்த மழை பெய்துவருவதுடன், கடுங் காற்று வீசுவதாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

சீரற்ற வானிலையால் யாழ் மாவட்டத் தில் மீனவர்கள் இரண்டாவது நாளாகவும் நேற்று தமது மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

மன்னார் மாவட்டத்திற்கு விடுக்கப்பட்டி ருந்த சூறாவளி எச்சரிக்கை மீளப்பெறப் பட்டுள்ளமையால் மக்கள் அச்சமடைய தேவையில்லை என மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

வவுனியாவில் தொடரும் சீரற்ற வானிலையினால் மீள்குடியேறி சிறிய கொட்டில்களில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாகவும் கடல் கொந்தளிப்பினாலும் வடக்கில் பல குடும்பங்கள் இடம் பெயர்ந்து பொது இடங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கரையோரப் பிரதேசங்களிலிருந்தே இக்குடும்பங்கள் வெளியேறியுள்ளன என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலை யங்கள் குறிப்பிட்டன.

கிளிநொச்சி, கல்லாறு கிராமத்தில் வசித்து வந்த 85 குடும்பங்கள் கடல் கொந்தளிப்பு காரணமாக நேற்று இடம் பெயர்ந்து பொது இடங்களிலும் உறவினர் களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரி வித்தார்.

வடமாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவும், கடற்கொந் தளிப்பு காரணமாகவுமே இந்தக் குடும் பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. கடலிற்கு மிக அண்மையில் அமைந்துள்ள மேற்படி இக்கிராமத்தில் 651 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்களில் கடற்கரைக்கு அண்மையி லுள்ள குடும்பங்களே இவ்வாறு இடம் பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் வீடு களிலும் பொது இடங்களிலும் வசித்து வருவதாக பணிப்பாளர் மேலும் தெரி வித்தார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத் தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத் திற்குட்பட்ட கடற்கரையோர கிராமங்களான கள்ளப்பாடு, கள்ளப்பாடு தெற்கு, முல்லை தெற்கு ஆகிய கிராமங்களிலிருந்து 68 குடும்பங்களைச் சேர்ந்த 218 பேர் நேற்று இடம்பெயர்ந்துள்ளனர் என்று கரைத் துறைப்பற்று பிரதேச செயலகம் தெரிவித்தது.

இவ்வாறு இடம்பெயர்ந்த குடும்பங்கள் கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாட சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவு, தங்கு மிட வசதி மற்றும் அடிப்படை வசதிகள் என்பவற்றை கரைத்துறைப் பற்று பிரதேச செயலகம் செய்து கொடுத்துள்ளது.

இதேவேளை சிலாபத்தை தெற்கு பிரதேச பிரிவில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 200 அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து பொது மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 50 பேர் அடங்குவது குறிப்பிடத்தக்கது.

(எ-11-267)

## 20ஆவது பொது...

இந்தப் பட்டங்களை வழங்குவார் எனவும் ஆயிரத்து 373 பேர் இம்முறை பட்டம் பெறவுள்ளனர் எனவும் பதிவாளர் தெரிவித் தார்.

இதேவேளை யாழ் பல்கலைக்கழகத் தினால் வழங்கப்பட்டுவந்த கௌரவ கலா நிதிப் பட்டம் இம்முறை எவருக்கும் வழங்கப் படமாட்டாது எனவும் பல்கலைக்கழக வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (எ-6)

## மன்னார் மனித...

டும் நடவடிக்கை இடம் பெற்றது.

இதன்போது புதிதாக 8 மனித எலும் புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆறு வயது மதிக்கத்தக்க ஒருவரின் எலும்புக்கூடும் மீட்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மனித புதைகுழி தோண்டும் பணி மீண்டும் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பாடசாலைகளுக்கு...

நர் ஜி. ஏ. சந்திரசிறி மற்றும் வடக்குமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சர் த. குருகுலராஜா ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாக இந்த விடு முறை நேற்று திங்கட்கிழமை வழங்கப் பட்டதாக அவர் தெரிவித்தார்.

தாழமுக்கம் காரணமாக வடக்கு மாகாணத்தில் கரையோரப் பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எதிர்வு கூறி யுள்ள நிலையில் மேற்படி பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று அதிகாலை ஒரு மணி தொடக்கம் கடும் மழை பெய்து வருகிறது.

கடந்த சனிக்கிழமை தொடக்கம் புயல் எச்சரிக்கையும் கடற்கோள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகின்றனர். இந்நிலையில் முல்லைத்தீவு வலயம் மற்றும் யாழ் வடமராட்சி கிழக்கு ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட சகல பாடசாலை களுக்கும் யாழ். பருத்தித்துறை, தீவக பகுதிகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திற்குட்பட்ட பாடசாலைகளிற்கும் நேற்று திங்கட்கிழமை விடுமுறை வழங் கப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் மேலும் தெரிவித்தார்.

(எ-6)




Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.